உ

ஓம் நம: பரமாத்மநே ॥

போதாயன தர்மஸூத்ரம்

கோவிந்தஸ்வாமி பாஷ்யத்தை அநுஸரித்த

தமிழுரையுடன் கூடியது.

இஃது

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களின்

ஆஜ்ஞையை முன்னிட்டு

வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையால்

கும்பகோணம்

சாரதா விலாஸ பிரஸ்ஸில்

அச்சிடப்பட்டு, கும்பகோணத்தில் வெளியிடப்பட்டது.

இதன் விலை] 1952. [ரூ. 4—0—0

காபிரைட் ரிஜிஸ்டர்ட்.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

𑌆𑌜𑍍𑌞𑌾.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌹𑌂𑌸 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌜𑌕𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤
𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌞𑍍𑌚𑍀𑌕𑌾𑌮𑌕𑍋𑌟𑌿𑌪𑍀𑌠𑌾𑌧𑌿𑌪 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑍈𑌃
𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 𑌐𑌹𑌿𑌕𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌹𑍇𑌤𑍂𑌨𑍍 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌤𑌯𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 𑌸𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌬𑍋𑌧𑌯𑌿𑌤𑍁𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑍋 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 । [illegible] 𑌧𑌰𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌵𑌬𑍋𑌦𑍍𑌧𑍁𑌮𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌪𑌕𑌾𑌨𑌾𑌂 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌤𑍄𑌣𑌾𑌂 𑌉𑌪𑌕𑌾𑌰𑌾𑌯 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑌾𑌷𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌂 𑌵𑍇𑌦𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌨𑌸𑌭𑌾𑌤𑍋 [illegible] 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌮𑍇𑌨𑌂 𑌪𑌰𑌿𑌶𑍀𑌲𑌯𑌨𑍍𑌤𑍋 [illegible] 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑍀𑌣𑌯𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌸𑌮𑍍𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌳𑍀𑌶𑍍𑌵𑌰𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑍁 । 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍋𑌽𑌯𑌂 𑌪𑍍𑌰𑌚𑍁𑌰𑌂 𑌪𑍍𑌰𑌚𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑌾𑌶𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥

𑌵𑌿𑌜𑌯𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌂-
𑌶𑌾𑌨𑍍𑌤𑌨𑍋𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑌃,
𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌬𑍍𑌦𑌂, 𑌭𑌾𑌦𑍍𑌰𑌪𑌦
𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌞𑍍𑌚𑌮𑍀.

𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 ॥

184962
சென்னை-600 008
நூலகம்

ஸ்ரீ:

முத்ரை.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீமச்சங்கரபகவத்பாத

ப்ரதிஷ்டித, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு

ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ச்ரீபாதை:

செய்யப்படுகிறது,

நாராயணஸ்மரணம்.

ச்ருதி ஸ்ம்ருதி ஸதாசார பரிஷத்துகளை ப்ரமாணமாகக் கொண்டவைகளாயும், பாரலௌகிக ச்ரேயஸ்ஸுக்குக் காரணங்களாயும், வேதம் முதலியவைகளில் ஆங்காங்குப் பிரிந்து இருக்கின்றதுமான ஸாங்கங்களான தர்மங்களை, அதிகாரி பேதத்தால் பிரித்து, சுருக்கமாய்ப் போதிப்பதற்குத் தர்மஸூத்ரங்களை இயற்றி அருளினார்கள் போதாயனாசார்யரவர்கள். ருஷிப்ரோக்தமான ஸூத்ரங்களைத் தாமாகவே அறிவதற்குச் சக்தியில்லாத அனுஷ்டாபகர்களுக்கும் அனுஷ்டாதாக்களுக்கும் உபகாரத்திற்காக, த்ராவிட பாஷை மொழிபெயர்ப்புடன் ஷ்டி போதாயன தர்மஸூத்ர க்ரந்தத்தை அச்சிட்டு வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை வெளியிட்டு நம்மிடம் சேர்ப்பித்ததைப் பார்த்து நாம் ஸந்தோஷிக்கின்றோம்.

இந்த க்ரந்தத்தைப் பரிசீலிப்பவர்கள் தர்மத்தில் ச்ரத்தையுடையவராய், ஸாங்கமான தர்மஸ்வரூபத்தை அறிந்தவராய், அந்தத் தர்மத்தை அனுஷ்டிப்பதால் தர்மாத்யக்ஷனான பகவானை ப்ரீதனாகச் செய்பவர்களாய், கல்யாண பரம்பரையை ஸ்ரீசந்த்ரமௌளீச்வரக்ருபையால் அடையவேண்டும் என்றும், இந்த க்ரந்தமும் அதிகமாக ப்ரசாரத்தை அடையவேண்டுமென்றும் கோருகிறோம்.

விஜயயாத்ராஸ்தானம்,
சாத்தனூரக்ராஹாரம்.
நந்தன-ஹு பாத்ரபத சுத்தபஞ்சமீ

நாராயணஸ்ம்ருதி.

Q1:44 N52

முகவுரை.

வைதிக மத தர்ம ப்ரவர்த்தகர்களான நமது மஹர்ஷிகளுள் ச்ரேஷ்டராகக் கொண்டாடப்படுகிற போதாயந மஹர்ஷி, பரமக்ருபையால் உலகம் உஜ்ஜீவிக்கச் செய்தருளிய தர்மஸூத்ர க்ரந்தமானது தமிழ் மொழிபெயர்ப்புடன் ப்ரசுரிக்கப் படுகிறது. இந்த நற்கார்யமானது வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையாரின் தர்மஸூத்ர ப்ரசுர கைங்கர்யத்தில் மூன்ருவதாகும். ஏற்கனவே ஆபஸ்தம்ப, கௌதம தர்மஸூத்ரங்கள் வெளியிடப்பட்டு வைதிக உலகத்திற்குப் பரம உபகாரம் செய்து வருவதுபோல், இந்தப் போதாயன தர்மஸூத்ர ப்ரசுரமும் மிகுந்த உபகாரகமாயிருக்கும். அந்த ஸபையானது தனது பெயருக்கும், கொள்கைக்கும் ஏற்றபடி மிக்க உறுதியுடனும், உத்ஸாஹத்துடனும் இதுவரை செய்யப்படாத முறையில் தர்மபரிபாலனம் செய்துவருவதைத் தார்மிகலோகம் நன்றியுடன் பாராட்டி வருகிறது. இவ்வளவும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபர்களான ஜகத்குரு ஸ்ரீமத் ஆசார்யபாதாள் அவர்களுடைய மன:பூர்வகமான திவ்யாநுக்ரஹ பலன் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

தர்மஸூத்ராத்யயனம்.

வைதிகதர்மம் வ்ருத்தியடைந்து அதன்மூலம் ப்ரஜைகள் இஹபரச்ரேயஸ்ஸுகளை அடையவேண்டுமானல் தர்மசாஸ்த்ர விதிகளை ஜனங்கள் பூர்ணமாக அறியவேண்டும். இதற்காகத் தர்மஸூத்ர அத்யயனம் இன்றியமையாததாகும். ஜீவனத்திற்காக மட்டும் வித்யாப்யாஸம் செய்வதென்கிற இக்காலக்கொள்கை வைதிகமதத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. அதிலும் முக்யமாக ப்ராம்ஹணன் நிஷ்காரணமாக ஆறு அங்கங்களுடன் கூடிய வேதத்தை அத்யயனம் செய்ய வேண்டுமென்று சாஸ்த்ரம் விதிக்கின்றது. வேதாப்யாஸத்திற்கோ, வேதாங்க தர்மசாஸ்திரங்களுக்கோ லௌகிக ப்ரயோஜன பலனை எதிர்பார்க்காமல், அப்யஸிக்கும்படி சாஸ்த்ரநியதி ஏற்பட்டதால்தான் நமது தர்மங்களும், அவைகளின் விதிகளும் இன்றளவும், எவ்வளவு பெரிய புரட்சிப் புயலிலும் கூட அழியாமல் சிறப்புடன் விளங்கி வருகின்றன. இது நீடித்திருக்கவேண்டுமானல் நம் ஸமூஹத்தில் தர்மஸூத்ராத்யயனம் எங்கும் பரவவேண்டும். வேதாத்யயனத்தைப் போல் தர்மசாஸ்த்ர அத்யயனத்தை அத்ருஷ்ட ஸ்வர்க்காதி பலனை ஸம்பந்தப் படுத்தி ருஷிகள் விதிப்பதின் கருத்து அதுதான்.

𑌯𑌥𑌾 𑌹𑌿 𑌵𑍇𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌤𑌥𑌾 ।
𑌅𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌾 ॥

என்று ஹாரீதர் சொல்லுகிருர். மேலும்,

𑌵𑍇𑌦𑌵𑌤𑍍 𑌪𑌠𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌦𑌿𑌵𑌾𑌨𑌿𑌶𑌮𑍍 ।

என்பதால் இந்தத் தர்மஸூத்ர க்ரந்தங்களை வேதங்களைப்போல் அப்யஸிப்பதுடன், பெரியோர்கள் மூலம் இரவு பகல் எவ்வேளையிலும் ச்ரவணம் செய்ய வேண்டுமென்றும் விதிக்கப்படுவதால், இந்தப் போதாயந-ஆபஸ்தம்பாதி க்ரந்தங்களைப் புராணங்களைப்போல் ஆங்காங்குப் படித்து ப்ரவசனம் செய்யவும் மதாசார்யர்கள் ஏற்பாடு செய்தால் மிகுந்த பலன் ஏற்படும்.

தனி கௌரவம்.

தர்மசாஸ்த்ர ப்ரவர்த்தகர்களான அநேக மஹர்ஷிகள் இருப்பினும், எல்லோரையும்விடப் போதாயனருக்குத் தனி கௌரவம் கொடுக்கப்பட்டிருப்பது விசேஷமாகும். வைதிகமதத்தில் அநேக சாகைகள், அநேக ஸூத்ரங்கள் தனித் தனி அதிகாரிகளுக்காக ஏற்பட்டிருந்தபோதிலும், எல்லா ஸூத்ர ஸ்ம்ருதி விதிகளையும் ஏகவாக்யதை செய்து உபஸம்ஹாரம் செய்து அநுஷ்டிப்பதைச் சாஸ்த்ரம் விதிக்கிறது.

𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌖𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌤𑍍 𑌏𑌕𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑍋 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌤𑍍 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑍋𑌽𑌪𑍍𑌯𑍇𑌕𑍋 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿𑌃 ॥

ஆயினும் ஒரு சாகையில், ஒரு சாகையின் ஸூத்ரத்தில் அதிகாரியாயிருப்பவன், தன் சாகாஸூத்ரத்தில் விதிக்கப்பட்டுள்ள தர்மங்களை விட்டு அந்ய சாகா ஸூத்ர தர்மங்களை அநுஷ்டிக்கக் கூடாதென்றும், அப்படி அனுஷ்டிப்பவனைச் சாகாரண்டன் என்றும் தூஷித்தும் ப்ராயச்சித்தம் சொல்லப்படுகிறது. தன் ஸூத்ரத்தில் இல்லாத தர்மத்தை இதர ஸூத்ரத்திலிருந்து எடுத்து ஆசரிக்கலாம். அதில் தோஷமில்லை.

ஆனல் இந்த நியமம் போதாயந ஸூத்ரம் தவிர மற்றவைகளுக்குத்தான். தன் சாகாஸூத்ர தர்மங்கள் இருக்கையிலேயே அதைவிட்டுப் போதாயனருடைய மதத்தை ஒருவன் அநுஷ்டிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. போதாயன மதத்தை எடுத்து ஆசரித்தால் தன் ஸூத்ர விதியை ஆசரித்த பலனே அவனுக்கு ஏற்படுவதாக ருஷிகள் ஸங்கேதமாக அங்கீகரித்துள்ளார்கள்.

𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌚𑌾𑌰𑍍𑌥𑌲𑍋𑌪𑍇𑌽𑌪𑌿 𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑍇 ।
𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌫𑌲𑌭𑌾𑌕𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

இப்போதுகூட ச்ரௌத-ஸ்மார்த்த கர்மாக்கள் பலவற்றிலும் ஸ்வஸூத்ர விதி தெளிவாக இருந்தும், ஸௌகர்யத்திற்காகப் போதாயன விதிகளை ஆசரிப்பது வைதிக ஸமூஹத்தில் ஸஹஜமான ஆசாரமாக இருந்து வருகிறது.

போதாயன ஸூத்ரத்தின் முக்யத்வம்.

இவ்வாறு தர்ம சாஸ்த்ரிகளான ருஷிகளே போதாயனருக்கு அதிக கௌரவம் காட்டியதின் காரணமென்ன ? தர்மஸூத்ரம் எழுதிய மற்ற ருஷிகள் பலரும் தாங்கள் சொல்லிய தர்மங்களுக்கு மூல ஆதாரமான ச்ருதிவாக்யங்களைத் தங்களது ஸூத்ரங்களில் குறிப்பிடவில்லை. போதாயனரோவென்ருல் தாம் சொல்லும் ஒவ்வொரு தர்மத்திற்கும் ஆதாரமாக உள்ள ச்ருதிவாக்யத்தை உதாஹரித்தே ஸூத்ரம் செய்துள்ளார். இது ஒரு புதிய முறையாகும். ருஷிகள் கூறும் தர்மங்

களுக்கு ச்ருதி ப்ரமாணமிருக்கிறதா இல்லையாவென்கிற சர்ச்சைகளுக்கு இடம் வைக்காமல் போதாயனர் ச்ருதிவாக்யங்களைக் காட்டி ஸூத்ரம் எழுதுவதை நியமமாகக் கொண்டிருக்கிறார். தற்கால மேற்றிசை விமர்சகர் சிலர் நமது தர்மங்களைப் பற்றி, சில விபரீத அபிப்ராயங்களைத் தங்கள் புஸ்தகங்களில் எழுதியுள்ளனர். தர்மஸூத்ரகாரர்கள் சொல்லும் பலதர்மங்களுக்கும் ஆசாரங்களுக்கும் மூல ப்ரமாணமான வேதங்களில் ஆதாரமில்லையென்பதும், ருஷிகளே அவைகளைக் கற்பித்தனர் என்பதும் மேனாட்டு விமர்சகர்களின் விபரீதவாதமாகும். இந்தத் துர்வாதத்தை இந்தப் போதாயன ஸூத்ரம் அடியோடு நிரஸனம் செய்யக் கூடியதாயிருக்கிறது. வேதங்களில் விஹிதமான தர்மங்களையே ருஷிகள் தங்கள் ஸூத்ரத்தில் உபதேசிக்கின்றனரென்பது வைதிகமத ஸித்தாந்த உண்மையாகும். இந்த விஷயத்தில் போதாயன ஸூத்ரமானது அஸாதாரண ஸ்தானத்தை வஹிக்கின்றது. வேதகாலத்தில் இல்லாத தர்மங்களை ருஷிகள் காலத்தில் கற்பித்தார்களென்ற ஆங்கில விமர்சகர்களின் கூற்று இந்தப் போதாயன ஸூத்ரத்தைப் படித்தால் பறந்தோடிவிடும். மேற்றிசையார் மட்டுமில்லை, அவர்களுடைய விமர்சங்களில் மோஹித்த நம் தேச சிஷ்ய வர்க்கங்களிலும் பலர் இந்தத் துர்வாதம் புரிவதைக் காண்கிறோம். வேதகாலத்தில் இவ்வளவு விஸ்தாரமான தர்மங்களோ, ஆசாரங்களோ இருந்திருக்க முடியுமாவென்று இவர்கள் ஸந்தேஹப்படுகின்றனர். இந்தப் போதாயன ஸூத்ரத்தை இவர்கள் ஒருதடவை ஊன்றிப் படித்தாலே இந்த ஸந்தேஹம் நீங்கிவிடும். போதாயனர் தமது ஸூத்ராரம்பத்திலேயே இதை முக்யமாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

உபதிஷ்டோ தர்ம: ப்ரதிவேதம் | தஸ்யாநுவ்யாக்யாஸ்யாம: |

ஒவ்வொரு வேதத்திலும் தர்மங்கள் உபதேசிக்கப்பட்டிருப்பதால், தர்மங்கள் வேத மூலகமாக ஏற்பட்டவை என்பதை உறுதி செய்து, அதைத் தமது ஸூத்ரத்தில் விவரித்துக் காட்டப்போகிறேன் என்று ப்ரதிஜ்ஞை செய்கிறார். இந்த ப்ரதிஜ்ஞைக் கேற்றபடியே மேலே ச்ருதி ப்ரமாணங்களை பெரும்பாலும் உதாஹரிக்கிறார்.

மற்ற எல்லா ஸூத்ரகாரர்களும் வேதமூலமான தர்மத்தைத் தான் உபதேசிக்கிறார்கள் என்பதும் நிர்விவாதம். ஆயினும் அவர்கள் மூலச்ருதிகளை உதாஹரிக்கும் ஸம்ப்ரதாயங்களைக் கைகொள்ளவில்லை. போதாயனர் அதைச்செய்து இருப்பதால்தான் அந்த ஸூத்ரத்திற்குத் தனிப்பெருமையை ருஷிகளே அங்கீகரித்தனர்.

சில விசேஷங்கள்.

போதாயனரும் ஆபஸ்தம்பரைப்போல் வெகுவிஸ்தாரமாக ச்ரௌத ஸூத்ரம் செய்துள்ளார். க்ருஹ்ய ஸூத்ரமும் செய்துள்ளார். இந்தத்தர்ம ஸூத்ரத்தையும் அவர் மிகுந்த சிறப்புடன் விளங்க இயற்றினர். இந்த ஸூத்ரத்தில் பல விசேஷங்களை இதர ஸூத்ரங்களில் காணப்படாதவைகளையும் உபதேசித்திருக்கிறார். ஸந்த்யாவந்தனவிதி, மாத்யாஹ்னிக ஸ்நானவிதி, மாத்யாஹ்னிக ஸந்த்யை, ப்ராணாஹுதி ப்ரயோகம், கூச்மாண்ட ஹோமம், அகமர்ஷணகல்பம், உபவாஸத்துடன் செய்யும் வேதபாராயண விதி போன்ற பல அம்சங்கள் மற்ற ஸூத்ரங்களிலில்லாதவை காணப்படுகின்றன.

இக் க்ரந்தத்தின் கடைசியில் ப்ராயச்சித்த ப்ரகரணாதிகளில் போதாயனர், மற்ற ஸூத்ரங்களிலில்லாத முறையில் வேதமந்த்ரங்களை பஹுளமாகச் சேர்த்து ப்ராயச்சித்த சுத்திகளை உபதேசித்திருப்பது ஆச்சர்யமானது.

ச்ரவண மாத்ரத்திலும் உச்சரித்த மாத்ரத்திலும் ஸகல பாபங்களையும் போக்க வல்ல மஹாபரிசுத்தங்களான மந்த்ரங்களை எல்லாம் பொறுக்கி எடுத்து, சுத்திகளை உபதேசம் செய்கிறார். அந்தச் சுத்திகளை வைதிகர் யாவரும் அடிக்கடி ஆசரித்து ஆத்மசுத்தியைப் பெறலாம்.

வைதிக கர்ம ச்ரத்தை.

போதாயனருக்கு வேதோக்தமான (வைதிக) கர்மங்களில் அபரிமிதமான அபிமானமிருக்கிறது. ஸ்ம்ருதி விதிகளைவிட வேதவிதிகளுக்கு ப்ராபல்யம் கொடுத்து, வேதவிதிகளையே உறுதிப்படுத்துகிறார். ஸூத்ரமெங்கும் இதற்கு உதாஹரணம் கிடைக்கும். வேதாத்யயனத்திற்கு ப்ரம்ஹசர்ய காலத்தின் எல்லை எவ்வளவு வர்ஷமென்பதில், 48, 24, 12 என்று ருஷிகள் பல கால அவதியை விதித்தார்கள். போதாயனரும் அவைகளை அநுவாதம் செய்துவிட்டு, க்ரஹணாந்த பக்ஷத்தை ஆதரிக்கிறார். அத்யயனத்தில் ஒரு சாகையையாவது க்ரஹிக்க எவ்வளவு காலம் வேண்டுமோ அவ்வளவு காலம் ப்ரம்ஹசர்யமிருந்தால் போதுமென்கிறார். புத்திமானான மாணவகன் வெகு சீக்ரத்தில் க்ரஹித்துவிடலாம். அதுவே காலம். எல்லாப் பக்ஷத்தையும் ஒதுக்கி க்ரஹணாந்த பக்ஷத்தையே உறுதிப்படுத்தி விட்டார். இதையே தமது பக்ஷமாகக் கூறுகிறார்.

'ஜீவிதஸ்ய அஸ்திரத்வாத்'

என்று, மனிதனின் ஜீவனம் அஸ்திரமானதால் நீண்டகாலம் ப்ரம்ஹசர்ய வ்ரதம் வேண்டியதில்லையென்று தக்க காரணத்துடன் சொல்லுகிறார். மேலும் ஜீவிதம் அஸ்திரமாகையால் சீக்கிரமே க்ருஹஸ்தாச்ரமம் புகுந்து யஜ்ஞாதிகளான வேத விஹித தர்மங்களை இவன் செய்து தீரவேண்டியிருப்பதால் தீர்க்ககால ப்ரம்ஹ சர்யம் கூடாதென்கிறார்.

க்ருஷ்ணகேசோऽக்னீநாததீத இதி ச்ருதி: ||

என்பதால், ப்ராம்ஹணன் யுவாவாக இருக்கையிலேயே, கேசம் கறுப்பாக இருக்கையிலேயே, அக்நிஆதானம் செய்து, அக்நிஹோத்ராதி ச்ரௌத கர்மங்களைச் செய்யும்படி வேதம் விதிப்பதால், நீண்டகால ப்ரம்ஹசர்யத்தை நிஷேதிக்கிறார். ஆதான ச்ருதிபலத்தால் ஸ்ம்ருதி விஹித நீண்டகால ப்ரம்ஹசர்யத்தை நிரஸனம் செய்கிறார். இம்மாதிரி ச்ருதிவிதிகளுக்கு ப்ராபல்யம் கொடுப்பதைப் பலவிடங்களில் பார்க்கலாம்.

க்ருஹஸ்த தர்ம உயர்வு.

ப்ரஜோத்பத்தி முதலியவை.

வைதிக மதமானது வைராக்யத்தையே ப்ரதானமாக உபதேசித்து, மனிதனின் இஹலோக வாழ்க்கையையும் ஸுகஸாதனங்களையும் பாழ்படுத்துவதாகச் சிலர் குற்றம் காண்கிறார்கள். போதாயந ஸூத்ரமானது அவர்களது மயக்கத்தைத்

தெளிவிக்கும். வைராக்யம் சிறந்ததாயினும் அதை நாசகாரியான வைராக்யமாகப் போதாயனர் அங்கிகரிக்கவில்லை. மனிதனின் வாழ்நாள் க்ஷேமத்திற்கும், ஜந்மாந்தர, லோகாந்தர க்ஷேமாதிகளுக்கும் "புத்ரஸந்தானம்" ஆவச்யகமென்று வேதமே வற்புறுத்துகிறது. இந்தத் தர்மத்தை, போதாயனர் ஒரு கண்டம் முழுவதும் சர்ச்சை செய்து உபதேசிக்கிறுர். அதில் அவர் க்ருஹஸ்த தர்மத்திற்கு உத்கர்ஷத்தை ஸ்தாபித்திருப்பது முக்யமான விஷயம்.

புத்ர பௌத்ராதி ஸந்ததிகளால் ருணதோஷம் நீங்குவதுடன், ஸத்புத்ரனுல் பதினுன்கு தலைமுறை க்ஷேமம் ஏற்படுவதையும் ச்ருதி ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபணம் செய்கிறுர்.

புத்ர ஸந்தானம் ஏற்பட, மனிதன் தைவ மானுஷ முயற்சிகளால் ப்ரயத்நம் எடுத்துக்கொள்ளவேண்டியதையும் சொல்லுகிறுர்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑌤𑍍𑌨𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌜𑌾𑌮𑍍𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑍇𑌤𑍍 । 𑌔𑌷𑌧𑌮𑌨𑍍𑌤𑍍𑌰
𑌸𑌂𑌯𑍋𑌗𑍇𑌨 ॥

புத்ரோத்பாதனத்திற்கு மனிதன் முயற்சிப்பது எப்படி? இதை இந்த ஸூத்ரத்தில் விளக்குகிறுர். ஔஷதம், மந்த்ரம் ஆகிய உபாயங்களையும் கைக்கொள்ளவேண்டுமென்கிறுர். புருஷனுடைய சுக்லத்தில் க்ருமிகள் ஏற்பட்டு புத்ர உத்பாதன சக்தியை அந்த க்ருமிகள் தின்றுவிடுகின்றன. அந்த க்ருமிகளைக் கொல்லக் கூடிய ஔஷதங்களையே போதாயனர் இங்குக் குறிப்பிடுவதாக வ்யாக்யாதாக்கள் விவரித்தனர். இதுபோல் புத்ரோத்பத்திக்குத் தடையான ஜந்மாந்தர பாபங்களையும், ரக்ஷஸ், பிசாசாதி தடைகளையும் மந்த்ர ப்ரயோகத்தால் நீக்கிக் கொள்ளவேண்டுமென்றும் உபதேசிப்பது கவனிக்கத்தக்கது. மந்த்ர-ஔஷத ப்ரயோகங்களைத் தாம் மட்டும் சொல்லவில்லையென்றும், ச்ருதியே இதை உபதேசிப்பதாயும் அடுத்த ஸூத்ரத்தில் சொல்லுகிறுர். வைதிகமதம் வைராக்ய மதமென்பது இதனுல் மறுக்கப்படுகிறது.

க்ருஹஸ்தாச்ரமம் ஒன்று மட்டுமே உண்டு.

போதாயனர் இஹலோக வாழ்க்கைக்கும், இங்கு அநுஷ்டிக்கவேண்டிய அக்நிஹோத்ராதி தர்மங்களுக்கும் ஸாதனமான க்ருஹஸ்தாச்ரமத்தையே வெகு தீவ்ரமாக ஆவேசம் பிடித்தவர்போல் ஆதரித்து, மற்ற மூன்று ஆச்ரமங்களையும் பலமாக நிந்திக்கிறுர். இரண்டாவது ப்ரச்னம் ஆருவது அத்யாயத்தில் 24-ஆவது ஸூத்ரம் முதல் 36-ஆவது வரை வெகு பலமான வாதப்ரதிவாதங்களைக்காட்டி, க்ருஹஸ்தாச்ரமமே உத்க்ருஷ்டமென்று ஸ்தாபிக்கிறுர்.

𑌐𑌕𑌾𑌶𑍍𑌰𑌮𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃, 𑌅𑌪𑍍𑌰𑌜𑌨𑌨𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑌰𑍇𑌷𑌾𑌮𑍍 ॥

ப்ரம்ஹசர்யாதி மற்ற ஆச்ரமங்கள் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததான புத்ரோத்பத்தி தர்மத்திற்கு உபயோகப்படாதவையாகையால், க்ருஹஸ்தாச்ரமம் ஒன்றுமட்டும்தான் உண்டு, என்று வைதிகமத ஆசார்யர்கள் அங்கிகரிப்பதாகச் சொல்லுகிறுர். இம்மட்டோடு நிற்காமல் அடுத்த ஸூத்ரத்தில் மற்ற மூன்று ஆச்ரமங்களையும் நிந்திக்கிறுர்.

𑌪𑍍𑌰𑌾𑌹𑍍𑌲𑌾𑌦𑌿𑌰𑍍𑌹 𑌵𑍈 𑌕𑌪𑌿𑌲𑍋 𑌨𑌾𑌮𑌾𑌸𑍁𑌰 𑌆𑌸 । 𑌸 𑌏𑌤𑌾𑌨𑍍 𑌭𑍇𑌦𑌾𑌂𑌶𑍍𑌚𑌕𑌾𑌰 𑌦𑍇𑌵𑍈𑌸𑍍𑌸𑌹 𑌸𑍍𑌪𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌃 । 𑌤𑌾𑌨𑍍 𑌮𑌨𑍀𑌷𑍀 𑌨𑌾𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌤 ॥

"ப்ரஹ்லாத புத்ரனுன கபிலன் என்ற அஸுரன் தேவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டு அவர்களுக்கு விரோதமாக இந்த மூன்று ஆச்ரமபேதங்களைக் கற்பித்தான். ஆகையால் ப்ராஜ்ஞுனை விவேகீ, க்ருஹஸ்தாச்ரமம் தவிர மற்ற மூன்று ஆச்ரமங்களையும் ஆதரிக்கக் கூடாது'' என்கிருர். மேலேயும் சில ஸூத்ரங்களால் இந்தக் கக்ஷியை வலுப்படுத்துகிருர்.

𑌇𑌮𑍇 𑌯𑍇 𑌨𑌾𑌰𑍍𑌵𑌾𑌙𑍍 𑌨 𑌪𑌰𑌶𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍋 𑌨 𑌸𑍁𑌤𑍇𑌕𑌰𑌾𑌸𑌃 । 𑌤 𑌏𑌤𑍇 𑌵𑌾𑌚𑌮𑌭𑌿𑌪𑌦𑍍𑌯 𑌪𑌾𑌪𑌯𑌾 𑌸𑌿𑌰𑍀𑌸𑍍𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑌨𑍍𑌵𑌤𑍇 𑌅𑌪𑍍𑌰𑌜𑌜𑍍𑌞𑌯𑌃 ॥

என்கிற ருக்வேத மந்த்ரத்தை உதாஹரித்து, க்ருஹஸ்தனல்லாத மற்ற வைராக்ய ஆச்ரமிகள், இஹ-பர ஸௌகர்யத்திற்கு உபயோகப்படாதவர்கள், ஸோமரஸாதி ஹவிஸ்ஸால் யாகம் செய்யக்கூடாதவர்கள், ஸந்ததி வ்ருத்திக்கு உபயோகப்படாதவர்கள், இத்யாதிகளாக இதில் நிந்தை காணப்படுகிறது. இதற்குமேல் போதாயனர், க்ருஹஸ்தாச்ரமமானது மூன்று வேதம், யஜ்ஞம், தபஸ், தானம், ப்ரஜாஸந்ததி போன்ற ஸகல ச்ரேயஸ்ஸாதனமாயும், ப்ரஜைகளால் அம்ருதத்வத்தை அடைய ஹேதுவாயுமிருப்பதால் அதுவே ச்ரேஷ்டமென்று நிர்ணயித்து, முடிக்கிருர்.

இதற்கு ஸமாதானமென்ன ?

இவ்வாறு போதாயனர் ப்ரம்ஹசர்ய, வானப்ரஸ்த, ஸ்ந்யாஸாதிகளான மூன்று ஆச்ரமங்களையும் வைதிகமென்று அங்கீகரிக்காததுடன் பலமாகத் தூஷிப்பதும் வைதிகமத ஸித்தாந்தத்திற்கு விருத்தமல்லவா ? இது வைதிகமதத்தில் பெரிய க்ஷோபத்தைப் புரட்சியை ஏற்படுத்தாதா ? இதற்கு ஸமாதானமென்னவென்று ஆஸ்திகர் கேட்கலாம். உண்மையில் அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. வைராக்யத்தை ஸ்துதி செய்து போதிக்கும் சில உபநிஷத் வாக்யங்களை அறிந்தவர்கள், இந்த நிந்தையைக் கண்டு கலக்கமடைய இடமில்லை. வைராக்ய ஸ்துதிக்காக, கர்மாக்களை வாய்கொண்டமட்டும் நிந்திக்கும் கர்மநிந்தா வாக்யங்கள் உபநிஷத்துக்களில் மலிந்து இருக்கின்றனவே ? அந்த நிந்தைகளை அப்படியே நாம் அங்கீகரித்திருக்கிருேமா ? அந்தக் கர்ம நிந்தைகள் யதார்த்தமானுல் போதாயனர் வைராக்ய நிந்தை செய்வதும் ந்யாயமாகிவிடும். கர்மநிந்தையைக் கண்டு ஸந்தோஷம் கொள்ளுகிறவர்களுக்கு இந்த வைராக்யநிந்தையும் ந்யாயமாகி விடாதா ?

ஆனுல் இரண்டும் தவறு. ஒன்றை ஸ்துதி செய்ய நேரும்போது, அதற்கு எதிரியான மற்றென்றைத் தாழ்த்தியோ, நிந்தித்தோ கூறுவது உலக இயற்கை. இந்த முறைதான் ச்ருதியிலும் கையாளப்படுகிறது. இதை "நஹிநிந்தா''—ந்யாய

மென்று வைதிகமதம் உறுதியாக ஆச்ரயித்துள்ளது. இதில்லாவிட்டால் வைதிகமே மறைந்துவிடும். ஆதலால் போதாயனருக்கு க்ருஹஸ்தாச்ரம ப்ரசம் ஸையில் நோக்கமே அல்லது உண்மையில் மற்ற ஆச்ரமங்களை நிந்திப்பதில் நோக்க மில்லையென்ற ஸமாதானமே சாஸ்த்ரீயமாகும். உபநிஷத்துக்களில் காணப்படும் கர்ம நிந்தா வாக்யங்களுக்கும் இதே ஸமாதானம்.

போதாயனர், வர்ண தர்மங்கள், ஆச்ரமதர்மங்கள், ப்ராயச்சித்தம், ஆசௌ சம் முதலிய பலவற்றையும் விஸ்தாரமாக உபபாதிக்கிறதுடன், தாயக்ரமம், ராஜ தர்மம் இவைகளையும் சுருக்கமாகக்கூறுகிறுர்.

கடல் சுங்க வரி.

வரி விதிப்பில் கடல் சுங்கவரியை, போதாயனர் சொல்லுவது புதிதாகும். தீபாந்தரங்களிலிருந்து கப்பல் வழியாக இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் மீது வரி விதிக்கச் சொல்லுகிறுர். பண்டங்களின் தராதரங்களுக்கு ஏற்றபடி கடற் சுங்கவரியைக் குறைப்பது அதிகரிப்பது போன்ற நியமங்களும் சொல்லப் படுகின்றன.

இதனுல் போதாயனர் காலத்தில் கப்பல் மூலமாகத் தேசாந்தரங்களுடன் பாரததேசத்திற்கு வ்யாபாராதி ஸம்பந்தமிருந்தது வெளியாகிறது.

ஜீவனோபாயமும் க்ருஷியும்.

ப்ராம்ஹணுதிகளுக்கு சாஸ்த்ரீயமான ஜீவனுேபாயம் கிடைக்காவிட்டால் கௌண, ஆபத் வ்ருத்திகளை அவலம்பித்து ஜீவிக்கலாமென்று போதாயனர் கூறுகையில், ஸொந்தமாகவோ பிறர் நிலத்தில் குத்தகைக்கோ க்ருஷி செய்து ஜீவிக்கலாமென்று கூறுகிறுர். ஷண்ணிவர்த்தநீ என்கிற பெயருள்ள அந்த ஜீவனுேபாயத்தில் நிலத்தை ஆறு தடவை உழவேண்டு மென்கிறுர். உழவு மாடுகளை ஊசியால் குத்தாமலும், அடிக்கடி உழவை நிறுத்தி மாடு களுக்குப் புல், ஜலம், ஆஹாரம் கொடுத்தும், தட்டிக்கொடுத்து ஆச்வாஸம் செய்தும் உழவேண்டும். காலை ஆகாரத்திற்கு முன்பாகவே உழவேண்டும். இத்யாதி நியமங்களையும் சொல்லுகிறுர். விளைச்சல் நன்ருகப் பலனைக் கொடுத்தால் நிலச் சுவான்தாருக்குக் கொடுக்கவேண்டிய பாகத்தைக் கொடுத்துவிட்டுப் பாக்கியை எடுத்துக்கொள்ளவேண்டும், அல்லது நில அதிகாரி கொடுத்ததை வாங்கிக்கொள்ளவேண்டும் என்று ப்ராம்ஹணனுக்கு நிலக் குத்தகை ஜீவனத் தைப் போதாயனர் விதிப்பது விசேஷமாகும்.

அடுத்த ஸூத்ரத்தில் "கௌத்தாலீ" என்ற ஜீவனத்தையும் விதிக்கிறுர். இது புஞ்சைக் குத்தகையாகும். ஜல ஸமீபத்திலுள்ள புஞ்சை நிலத்தைக் குத்தா லம் என்கிற மண்வெட்டி, கோடரி போன்றவையால் சீர்திருத்தி, ஜலம் பாய்ச்சி, உழுது, விதைகளை விதைத்துப் பலன்பெறுவது "குத்தாலீ" என்கிற ஜீவனமாகும். இதையும் ப்ராம்ஹணனுக்கு ஆபத்கால ஜீவனமாக, போதாயனர் உபதேசிக்கிறுர்.

ஞானமும் கர்மாவும்

கேவல ஞானத்தைக் காட்டிலும் கர்மாவே சிறந்ததென்கிற கொள்கையி லும் போதாயனர் தமது அபிப்ராயத்தை இங்குத் தெளிவாக்கியுள்ளார். வேதாத்

யயனத்தையோ, வைதிக கர்மானுஷ்டானத்தையோ, ஞான வ்யாஜத்தால் த்ய ஜிப்பதை, போதாயனர் கண்டிக்கிறுர். கர்மாக்களால் ஞானத்திற்கு உபகார மென்கிற ஸித்தாந்தத்தை இவர் ஒப்புகிறுர்.

𑌨𑌾𑌵𑌦𑌵𑌿𑌨𑍍𑌮𑌨𑍁𑌤𑍇 𑌤𑌂 𑌬𑍃𑌹𑌨𑍍𑌤𑌮𑍍 ॥

என்ற வேதவாக்யத்தைக் காட்டி, அத்யயனமோ கர்மானுஷ்டானமோ இல்லாத வனுக்கு ஆத்மஜ்நானதிகள் ஏற்படாதென்பதையும், அவன் உபய ப்ரம்சமடைந் தவனென்றும் நிஷ்கர்ஷிக்கிறுர். இதற்கு ஆதாரமாக ருக்வேத மந்த்ரத் தையும் உதாஹரிக்கிறுர். ([illegible])

போதாயனரும் ஆபஸ்தம்பரும்.

போதாயனர், ஆபஸ்தம்பரைப்போல் யஜுர்வேதத்திற்கு கல்பஸூத்ரம் எழுதியவர். இருவரும் ஒரே வேதத்திற்கு கல்பம், தர்மஸூத்ரம், க்ருஹ்யம் இவைகளை எழுதியவர்களாகையால் இவ்விரு ருஷிகளைப்பற்றி விமர்சர்கள் பலர் பலவிதமாக ஆராய்ச்சி செய்கிறுர்கள். இதில் அபிப்ராயபேதங்கள் மிகுந்துள் ளன.

போதாயனர் ஆபஸ்தம்பருக்கு முந்தியவரென்றும், ஆபஸ்தம்பருக்கு ஆசார் யரென்றும் சிலர் ஸாதிக்கிறுர்கள்.

“சரண வ்யூஹம்” என்கிற க்ரந்தத்தில், வ்யாக்யாதாவான மஹாதேவர், ஸூத்ரகாரர்களில் போதாயனரை முதலிலும், இரண்டாவதாக, பாரத்வாஜரை யும், மூன்ருவதாக ஆபஸ்தம்பரையும் குறிப்பிடுகிறுர். நூற்றெரு சாகைகளின் கரையைக்கண்ட ஆபஸ்தம்பர், போதாயன சிஷ்யரென்று

[illegible]
[illegible]

போதாயன ஸூத்ர வ்யாக்யாதா யஜ்ஞேசர் கூறுகிறுர். மேற்றிசையைச் சேர்ந்த ஆங்கில விமர்சகர்களும் போதாயன—ஆபஸ்தம்ப அபிப்ராய பேதங்களைக் காட்டி, ஆபஸ்தம்பருக்கு வெகுகாலம் முந்தியே போதாயனகாலம் என்று நிச்ச யிக்கிறுர்கள். போதாயனர் சொல்லிய சில அபிப்ராயங்கள் ஆபஸ்தம்ப காலத்தில் திருத்தப்பட்டிருப்பதாக ஊஹிக்கிறுர்கள். ஆபஸ்தம்பர் வெளியிடும் சில கண்டனங்களும் போதாயனரைக் குறித்துத்தான் என்றும் ஆங்கில விமர்சர்களின் கூற்று. இவையெல்லாம் வெறும் ஆதாரமற்ற ஊஹமென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், ஆபஸ்தம்பர் வெளியிடும் பல அபிப்ராயங்க ளெல்லாம் போதாயனருக்கு முந்திய பல மஹர்ஷிகளால் வெளியிடப்படுவதைக் காண்கிறேம். நியோகத்தை ஆபஸ்தம்பர் அங்கீகரிக்காமல் கண்டிக்கிறுர். போதாயனருக்கு முந்தியவரான மனுவும் அதை நிந்திக்கிறுர். சாஸ்த்ரீய புத்ரர் களுக்குத்தான் தாயபாகம் உண்டு, மற்றவர்களுக்குக் கிடையாதென்று ஆபஸ் தம்பர் கூறுகிறுர். போதாயனர் எண்வகைப் புத்ரர்களுக்கும் (கௌணபுத்ரர் உள்பட) தாயமுண்டென்கிறுர். ஆனல் போதாயன ஸமகாலமாக நினைக்கப்படும் “ஔபஜங்க” மஹர்ஷி ஆபஸ்தம்ப அபிப்ராயத்தைப் பின்பற்றுகிறுர்.

மேலும் ஆபஸ்தம்பர் கண்டனம் செய்யுமிடங்களில் ஓரிடத்திலாவது போதாயனரின் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆதலால் போதாயனத்தைத்தான் ஆபஸ்தம்பர் கண்டிருக்கிறார் என்று கூற இடமில்லை. மேலும் போதாயனரின் ஸூத்ர சைலியைக் கவனித்தால் அவர் தமது க்ருஹ்யஸூத்ரத்தில் விஷ்ணு கல்பம், துர்க்கா கல்பம், ஸ்ரீகல்பம் தேவதா ப்ரதிஷ்டைபோன்றவைகளைத் தந்த்ர சாஸ்த்ரத்தைப் பின்பற்றிக் கூறியிருக்கிறார். ஆபஸ்தம்பர் இம்மாதிரி தந்த்ர சாஸ்த்ர ப்ரஸ்தாவம் செய்யாததால் ஆபஸ்தம்பர் போதாயனருக்கும் ப்ராசீனராக இருக்கலாமென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

முக்கிய ருஜு.

போதாயனரைவிட ஆபஸ்தம்பர் முந்தியவரென்பதற்கு, போதாயன ஸூத்ரத்திலேயே தக்க ஆதாரம் கிடைக்கிறது. நித்ய தர்ப்பண விதியில் ருஷிதர்ப்பணம் சொல்லுகையில் போதாயனர்,

'𑌆𑌪𑌸𑍍𑌤𑌂𑌬𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌤𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿'

என்று ஆபஸ்தம்பருக்குத் தர்ப்பணம் செய்யும்படி விதிக்கிறார். இங்கு ஆபஸ்தம்பர் பெயரை, போதாயனர் தெளிவாகக்கூறுகிறாரே! இதனால் ஆபஸ்தம்பர் போதாயனருக்குப் பிற்பட்டவராயிருந்தால் அவர் பெயரை, போதாயனர் குறிப்பிட்டது எப்படிப்பொருந்தும்! மேலும் தர்ப்பணம் ருஷிகளை த்ருப்தி செய்வதற்காக விதிக்கப்படுகிறது. ஆபஸ்தம்பரை த்ருப்திசெய்து வைக்கும்படி போதாயனர் முற்கூட்டியே சொல்லுவதும் ஸங்கதமாகுமா?

மேலும் இந்தத் தர்ப்பண மந்த்ரத்தில் ஆபஸ்தம்பரை "ஸூத்ரகாரர்" என்று போதாயனர் தெளிவாக விசேஷணம் கொடுத்துச் சொல்லுகிறார். ஸூத்ரங்கள் செய்து உலகத்திற்கு உபகரித்தவர் ஆபஸ்தம்பர், என்ற மஹிமையையும் போதாயனர் எடுத்துக்காட்டுவதாகத் தெரிகிறது. இதனால் போதாயனர் ஆபஸ்தம்பருக்குப் பிற்பட்டவர் என்கிற அபிப்ராயம் பலப்படுகிறது.

போதாயனர்கள் பலர் உண்டா?

போதாயன விஷயமாக மற்றொரு குழப்பமும் காணப்படுகிறது. இந்தத் தர்ம ஸூத்ரகாரரான போதாயனருக்கு முந்தி "காண்வ போதாயனர்" என்று பெயருடன் மற்றொரு போதாயனர் இருந்ததாகத் தெரிகிறது. மேற்கண்ட ருஷி தர்ப்பணத்தில்,

𑌕𑌾𑌣𑍍𑌵𑌂 𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌂 𑌤𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 ।

என்று காண்வ போதாயனருக்கும் தர்ப்பணம் போதாயனரால் விதிக்கப்படுகிறது. இந்தத் தர்மஸூத்ரகார போதாயனர் தமக்கே தான் தர்ப்பணம் செய்யும்படி விதித்ததாகச் சொல்லுவது பொருந்தாதாகையால், இந்தப் போதாயனருக்கு முந்தி, கண்வபுத்ரரான வேறு போதாயனர் ஒருவர் இருந்தார் என்று தெரிகிறது.

இந்தப் போதாயன ஸூத்ர வ்யாக்யாதாவான ஸ்ரீகோவிந்தஸ்வாமியும், காண்வ போதாயனர் ஒருவர் இருந்ததை உறுதிப்படுத்தியிருக்கிறார். போதாயன தர்மஸூத்ரம் முதல் ப்ரச்னம் மூன்றாவது அத்யாயத்தின் முடிவில்,

அநேந விதிநா ப்ரஜாபதே: பாரமேஷ்டிந: பாரமேஷ்ட்ய:

பாரஶோம் காஷ்டாம் க்ருஹ்ணீதி போதாயந: ॥

என்ற ஸூத்ரத்தில் "போதாயனர் இப்படிச் சொல்லுகிறார்" என்று போதாயனப் பெயர் குறிப்பிடப்படுகிறது. ஸூத்ரகாரரான போதாயனர் இங்கு மற்றொரு போதாயனரைக் குறிப்பிடுகிறாரா? தம்மையே சொல்லிக்கொள்ளுகிறாரா?

இங்குக் கோவிந்தஸ்வாமி கூறுவது என்னவென்றால்

போதாயந: = காண்வாயந: ।

என்று அர்த்தம் கூறியுள்ளார். "இங்குள்ள போதாயனபதம் கண்வபுத்ரரான போதாயனரைக் குறிக்கிறது" என்று காண்வ போதாயனரை ஒப்புகிறார். மேலும் வ்யாக்யாதாவான கோவிந்தஸ்வாமி மற்றொரு ஸமாதானமும் சொல்லுகிறார். அதாவது

ஆத்மநோ வா ஆசார்யம்

என்று. ஸூத்ரகார போதாயனருக்கு ஆசார்யனாயிருந்தவரும் போதாயனர் என்ற பெயருள்ளவரென்று இதனால் தெரிகிறது. ஆகவே மூன்றாவது போதாயனரும் ஏற்படுகிறார். எப்படியும் இந்தப் போதாயனருக்கு முந்தியே போதாயனப் பெயருடன் வேறு ருஷிகள் இருந்தது உறுதியாகிறது.

இந்த ஸூத்ரகாரருக்கு முந்தியிருந்த காண்வ போதாயனரே ஆபஸ்தம்பருக்கு ஆசார்யனாக இருந்ததாகச் சொல்லுவது யுக்தமாகும். இதற்கு மற்றொரு ஆதாரமும் கூறலாம். போதாயனர் சொல்லியுள்ள ருஷி தர்ப்பணத்தில்,

காண்வம் போதாயநம் தர்பயாமி । ஆபஸ்தம்பம் ஸூத்ரகாரம் தர்பயாமி ।

என்ற வரிசையும் கவனிக்கத்தக்கது. காண்வ போதாயனரைச் சொல்லிவிட்டு, அடுத்தபடியாக ஆபஸ்தம்பரை ஸூத்ரகார் குறிப்பதிலிருந்து ஆபஸ்தம்பரின் ஆசார்யனை காண்வபோதாயனரைச் சொல்லிவிட்டுப் பிறகு ஆபஸ்தம்பரைச் சொல்லியதாக நிச்சயிப்பது பொருத்தமாயிருக்கிறது. இவ்வாறாக விமர்சித்துப் பார்த்தால் ஆபஸ்தம்பர் இந்த ஸூத்ரகார போதாயனருக்குப் பிந்தியவரல்லவென்றும், இந்த ஸூத்ரகாரருடைய சிஷ்யரல்லவென்றும், இதில் மேற்றிசையாரின் விமர்சனம் நிலைக்காதென்றும் ஏற்பட்டது.

சில வேறுபாடுகள்.

மேலும் ஆபஸ்தம்பஸூத்ரத்திற்கும் இந்தப் போதாயன ஸூத்ரத்திற்கும் சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அவைகளுள் சில. போதாயனர் விவாஹப் பிரிவுகளில் "பைசாசம்" என்று ஒரு பிரிவு சொல்லுகிறார். ஆபஸ்தம்பர் இதைச் சொல்லவில்லை.

ஔரஸன் முதலிய எல்லா (அஸவர்ண) புத்ரர்களுக்கும் தாயபாகம் உண்டென்று போதாயனரின் அபிப்ராயம். ஆபஸ்தம்பர் சாஸ்த்ரீய விவாஹத்தில்

பிறந்தவர்களுக்குமட்டுமே தாயமென்கிறர். கௌண புத்ரர்களுக்கில்லை. ஆபஸ் தம்பர் ஸ்வீகார புத்ரதானத்தில் மாதா பிதாக்களுக்கும் அதிகாரமில்லையென்கிறர். போதாயனரோ தத்தபுத்ரனை அங்கீகரிக்கிறர்.

தாயபாகத்தில் ஜ்யேஷ்டனுக்கு அதிக பாகம் (உத்தாரம்) உண்டென்று போதாயனர் கருத்து. ஆபஸ்தம்பர் ஸமபாகத்தையே வற்புறுத்துகிறர்.

ஆசார்யோச்சிஷ்டம் எதுவும் க்ராஹ்யமென்பது போதாயன பக்ஷம். ஆபஸ் தம்பரோ ப்ரம்ஹசர்ய நியம விருத்தமான உச்சிஷ்டத்தை த்யஜிக்கச் சொல்லு கிறர்.

இவ்வாறுக அநேக வேறுபாடுகள் காணப்படுவதால் இந்த ஸூத்ரகார ருக்கும்,ஆபஸ்தம்பருக்கும் ஆசார்ய சிஷ்யாதி ஸம்பந்தம் கூறுவது பொருந்தாது.

காலமும், தேசமும்.

போதாயனர் காலமும், அவர் வாழ்ந்த தேசமும் நிர்ணயிக்கப்படவில்லை. விமர்சகர்களின் ஊஹம் பலவாறு இருக்கிறது. போதாயனர் வ்யாஸரின் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவராகையால் ஐயாயிரம் வர்ஷங்களுக்குமுன் அவருடைய காலமாயிருக்கலாமென்று ஊஹிக்கப்படுகிறது.

வ்யாஸர் செய்த ப்ரம்ஹஸூத்ரங்களுக்குப் போதாயனர் ஓர் வ்ருத்தி, அதாவது வ்யாக்யானம் செய்திருக்கிறதாக விசிஷ்டாத்வைத ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீராமானுஜர் கூறுகிறர்.

𑌭𑌗𑌵𑌦𑍍𑌬𑍋𑌧𑌾𑌯𑌨𑌕𑍃𑌤𑌾𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂

𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌚𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍁𑌃 ॥

என்று. இதனல் போதாயனர் வ்யாஸர் காலத்திற்குப் பிற்பட்டவரென்று சிலர். ப்ரம்ஹஸூத்ர வ்ருத்தி எழுதிய போதாயனர் வேறு என்று மற்ற சிலர்.

இவர் வஸித்த தேசமும் நிச்சயப்படவில்லை. ஆந்த்ர தேசமென்று சிலர். கடல் சுங்க வரியை இவர் கூறுவதால் கடற்கரை ப்ரதேசத்தில் வஸித்தவராயிருக் கலாமென்று ஒரு ஊஹம். வட தேசம், தென் தேசம் இரண்டு தேசத்திலுமுள்ள சில துராசாரங்களை இவர் தூஷிப்பதால் வடக்கிலோ, தெற்கிலோ வஸித்து வந்த ஆர்யாவர்த்தாதி புண்யபூமியில் ஒன்றில் ருஷிகள் மத்தியில் வஸித்தாரென்று நாம் அறிந்தால் போதுமானது.

போதாயனமஹர்ஷி வைதிக மதத்திற்கு மிக்க பலம் பொருந்திய தூண்போன்றவர். அதே ஸமயத்தில் ஜனங்கள் எளிதில் அநுஷ்டித்து ச்ரேயஸ்ஸை அடையக் கூடிய லகுவான கல்பங்களையும் பலவிடங்களில் க்ருபையால் கூறுகிறர்.

இந்தத் தர்மஸூத்ரத்தைத் தார்மிகர்கள் தர்ம வ்ருத்திக்காகவும், விமர்சகர்கள் விஷய விமர்சன குதூஹலத்திற்காகவும் ச்ரத்தையுடன் ஊன்றிப் படித்துப் பெரிய நன்மைகளை அடையலாம்.

அக்நிஹோத்ரம்,

கோபாலதேசிகாசார்யர்.

ஸ்ரீ:

போதாயன தர்ம ஸூத்ரத்தின்

விஷய ஸூசிகை.

பக்கம்

வேதங்களையனுஸரித்துத் தர்மம் சொல்லுவதாக ப்ரதிஜ்ஞை ...	1
சிஷ்டர்களின் லக்ஷணம் ...	2
பரிஷத்துக்கு அர்ஹதை ...	3
அதற்கு அர்ஹதையற்றவர்கள் ...	4
தெற்கு-வடக்குத் தேசங்களிலுள்ள துராசாரங்கள் ...	4
இதில் கௌதமர் தீர்ப்பு ...	6
ஆர்யாவர்த்த ப்ரதேச நிர்ணயம் ...	7
பவித்ரேஷ்டி மஹிமை ...	7
ப்ரம்ஹசர்ய காலவரையறை ...	8
அக்நி ஆதான காலநியமம் ...	9
உபநயந காலவிதிகள் ...	9
கௌணகால உபதேசர் ...	10
மேகலா அஜிநதண்டாதிகள் ...	10
பிக்ஷாநியமம் ...	10
ப்ரம்ஹசாரி நியமங்கள் சில ...	11
ஆசார்ய பாதஸ்பர்சவிதி ...	12
அபிவாதன நியமங்கள் ...	13
சிஷ்யநியமங்கள் சில ...	14
அநர்ஹனுக்கு வித்யாதானம் செய்யக்கூடாது ...	15
ஸமிதாதானம் அபம்ருத்யு பரிஹாரம் ...	16
ஸமிதாதான ப்ரசம்ஸை ...	17
ஸ்நாதக தர்மங்கள் ...	19
கமண்டலுசர்யாவிதி கமண்டலு க்ரஹித்தல் முதலியன ...	22

		பக்கம்
யஜ்ஞோபவீததாரண விதி	...	27
நிவீத-ப்ராசீனுவீத லக்ஷணம்	...	28
கையில் ப்ராம்ஹாதி தீர்த்தஸ்தானம்	...	29
ஆசமன நியமங்கள்	...	29
பாத்ரசுத்தி முறைகள்	...	32
ஸ்வயம் சுத்த வஸ்துக்கள்	...	34
ச்ரத்தா மஹிமை	...	38
மூத்ரபுரீஷ உத்ஸர்க்க நியமம்	...	39
தேஹ சுத்தி முறைகள்	...	40
வட்டி.வாங்கி ஜீவித்தல்	...	41
சிலரிடம் அதிக வட்டி வாங்கலாம்	...	42
வேதமுள்ள குலம் செழிக்கும்	...	43
ஸ்வச்சந்தசாரிக்கு நற்கதியில்லை	...	43
ஸபிண்டாதி ஆசௌசவிதி	...	45
ஸபிண்டர் தனம்பற்றி விதி	...	46
பலவித சாவாசௌசம்	...	48
நாய் கடித்தால் சுத்தி	...	50
சாப்பிடக்கூடாதவை	...	52
வஸ்த்ராதி சுத்தி முறை	...	54
பூமி சுத்தி	...	56
மரப்பாத்ர சுத்தி	...	57
மண்பாத்ர சுத்தி	...	58
கல், மூங்கில், நெல் முதலியன சுத்தி	...	59
தேன், பால், எண்ணெய் சுத்தி	...	60
யாகவிஷயமான பரிபாஷைகள்	...	62
ஜாதிப்பிரிவுகள்	...	65
ராஜதர்மங்கள்	...	69
யுத்தத்தில் கொல்லத்தகாதவர்கள்	...	70
ஸமுத்ர வ்யாபாரத்தில் வரி விதிப்பு	...	71
ப்ராம்ஹணக்ஷத்ரியாதி வதப்ராயஶ்சித்தம்	...	72
ஸாக்ஷ்யம் சொல்லுவதில் நியமங்கள்	...	73

பக்கம்

பொய்ஸாக்ஷ்யத்தில் தோஷம்	...	74
ப்ராம்ஹாதி விவாஹப் பிரிவுகள்	...	76
சுல்கம்பெற்றுப் பெண்ணைக் கொடுப்பது தோஷம்	...	79
அநத்யயநங்கள்	...	79
ச்ரோத்ரியனுக்கு இரண்டு வித ப்ரஜை	...	81
அநத்யயன காலங்கள்	...	82
ப்ரம்ஹஹத்யாதி ப்ராயஸ்சித்தம்	...	83
ப்ரம்ஹசாரீ சவகர்மத்தைச்செய்தால் புநருபநயனம்	...	87
அவகீர்ணி ப்ராயஸ்சித்தம்	...	88
ஸகோத்ரஸ்த்ரீ விவாஹ ப்ராயஸ்சித்தம்	...	89
ஸமுத்ரயாநாதி ப்ராயஸ்சித்தம்	...	90
உபபாதகங்கள்	...	91
பதிதர்கள் சேர்ந்து வாழ்தல்	...	92
பதிதனின் புத்ரன் பதிதனா?	...	93
எள் விற்பனையில் தோஷம்	...	94
விற்கக்கூடாதவை	...	94
ஸம்ஸர்க்க தோஷம்	...	95
க்ருச்ர லக்ஷணங்கள்	...	96
நித்யகர்மநிஷ்டனுக்கு ப்ரம்ஹலோகம்	...	97
ஸ்வத்துப் பிரிவினை க்ரமம்	...	98
ஔரஸாதி புத்ரலக்ஷணம்	...	99
புத்ரன் க்ஷேத்ரியைச் சேர்ந்தவனா? பீஜியைச் சேர்ந்தவனா?	...	102
மைனர் ஸ்வத்து ரக்ஷணம்	...	103
ஸ்த்ரீகளுக்குத் தாயமில்லை	...	104
ஸ்த்ரீ தோஷாதிகள்	...	106
ப்ராம்ஹணனுக்கு க்ஷத்ரிய ஜீவனம்	...	107
ப்ராம்ஹணன் க்ருஷிசெய்யும் விதம்	...	108
ச்ரௌதகர்மாக்களால் க்ஷேமப்ராப்தி	...	109
ஸ்நானம், அதற்குத் தீர்த்தங்கள்	...	110

		பக்கம்
க்ருஹத்திற்கு வந்தவர்களுக்கு ஆஹார உபசாரம்	...	112
அந்நதான விஷயமாக அன்னகீதம்	...	113
த்ரவ்யங்களில் பங்குபெறக்கூடியவர்கள்	...	113
சில பொதுத் தர்மங்கள்	...	115
வஸிக்க யோக்யமான க்ராமம்	...	117
பூஜ்யர்களைப் பூஜித்தல்	...	119
ஸந்த்யோபாஸனவிதி	...	120
ஸந்த்யாகால நியமம் முதலியவை	...	123
மாத்யாந்ஹிக ஸ்நாந ஸந்த்யாதிகள்	...	125
தேவ ருஷி பித்ரு தர்ப்பணங்கள்	...	128
பஞ்சமஹாயஜ்ஞம், அதன் மஹிமை	...	132
நான்கு ஆச்ரம பேதங்கள்	...	134
க்ருஹஸ்தாச்ரமம் ஒன்று மட்டும் உண்டு	...	137
க்ருஹஸ்தாச்ரம ப்ரசம்ஸை-வைராக்ய நிந்தை	...	139
ப்ராணாஹூதி விதி	...	140
அன்னத்தில் கேசாதி தோஷங்கள்	...	141
போஜன நியமங்கள்	...	141
போஜனத்திற்குப் பிறகு ஆசமனாதி விதிகள்	...	142
முதலில் போஜனம் செய்துவைக்கவேண்டியவர்கள்	...	143
ஆஹிதாக்நி-ப்ரம்ஹசாரீ இருவருக்கும் உபவாஸம் கூடாது	...	144
ச்ராத்தகர்ம விதி	...	146
வாயஸபிண்டம், பித்ருக்கள் வாயஸரூபிகள்	...	147
ப்ரஜாகாமனுக்குச் சில உபதேசங்கள்	...	151
மந்த்ர-ஓஷதி உதவியால் ஸத்புத்ர உத்பாதனம்	...	153
ஸன்யாஸவிதி, ஸந்யாஸக்ரஹணம், ஸந்யாஸி தர்மங்கள் முதலியவை		154—166
சாலீனாதி ஜீவனப்பிரிவுகள் ஒன்பது	...	167
க்ருஷிஜீவனம், அதில் நஞ்சை புஞ்சை குத்தகை ஜீவனம்	...	171
வானப்ரஸ்தாச்ரமம், அதில் பிரிவுகள்	...	175

		பக்கம்
நிஷித்தகார்யம் செய்த ப்ரம்ஹசாரிக்கு ப்ராயஸ்சித்தம்	...	179
அகமர்ஷண ஸ்நாநவிதி	...	181
யாவக வ்ரதம்	...	183
கூச்மாண்டஹோமம்	...	186
சாந்த்ராயண கல்பவிதி	...	190
உபவாஸத்துடன் செய்கிற வேதபாராயணவிதி	...	195
பொதுவான ப்ராயஸ்சித்த விதிகள்	...	200
ப்ராயஸ்சித்த பொதுமந்த்ரங்கள்	...	201
ப்ராயஸ்சித்ததேசம், காலம் முதலியவை	...	202
பற்பலவித தோஷ ப்ராயஸ்சித்தங்கள்	...	204
ருதுவுக்குமுன் கந்யகா தானம் செய்யாவிடில் தோஷம்	...	206
ருதுஸ்நாதையான பார்யையை உபேக்ஷித்தால் தோஷம்	...	207
ப்ராணாயாம லக்ஷணம்	...	209
மறுபடியும் பற்பலவித ப்ராயஸ்சித்த விதிகள்	...	210
அவகீர்ணி ப்ராயஸ்சித்தம்	...	211
மறுபடி பற்பல சுத்திகள்	...	213
ஸகல ஹோமம் ஸர்வபாபஹரம்	...	215
ஸகலபாபசுத்திகர மந்த்ரங்கள்	...	216
இந்தத் தர்மசாஸ்த்ரத்தை பக்தியற்றவனுக்கும் மற்றவருக்கும் உபதேசிக்கக்கூடாது	...	217
சரீரசுத்திகா மந்த்ரங்கள், சில ஜபஹோமாதிகள்	...	218
பஞ்சகவ்யம்-அதன் மஹிமை	...	219
சிசு-யதிசாந்த்ராயணாதிகள்	...	221
சுத்திகர மந்த்ரங்கள், இஷ்டிகள்	...	224
பற்பலசுத்திகளும், மந்த்ரங்களும்	...	227
எட்டுவித கணஹோமங்கள்	...	229
கணஹோமம் செய்யக்கூடியவர்கள்	...	230
மந்த்ரஸித்திக்காக ஹோமங்கள்	...	231

உ

போதாயநதர்மஸூத்ரம் ॥

போதாயன தர்ம ஸூத்ரம்.

கோவிந்தஸ்வாமி பாஷ்யத்தை அனுஸரித்து மொழிபெயர்ப்பு.

ப்ரதமப்ரஶ்நே ப்ரதமோऽத்யாய: ॥

ப்ரதம: கண்ட: ॥

முதல் ப்ரச்னம்—முதல் அத்யாயம்.

முதல் கண்டம்.

உபதிஷ்டோ தர்ம: ப்ரதிவேதம் ॥ ௧ ॥

ஒவ்வொரு வேதசாகையிலும் தர்மம் உபதேசிக்கப்பட்டுள்ளது. (அவைகளை நிபந்தனக்காரர்கள் வ்யவஸ்தை செய்துள்ளார்கள்.)

தஸ்யாநுவ்யாக்யாஸ்யாம: ॥ ௨ ॥

அந்த வைதிகதர்மத்தை இங்கு விவரித்துச் சொல்லுவோம்.

ஸ்மார்தோ த்விதீய: ॥ ௩ ॥

வேதத்தில் உபதேசிக்கப்பட்டுள்ள தர்மம் முதன்மையானது. ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டது இரண்டாவது பக்ஷமான தர்மம். அநுபவித்த விஷயத்தை மறக்காமலிருப்பது ஸ்ம்ருதி. அதை மூலமாகக் கொண்டது ஸ்மார்த்தம். ஸ்ம்ருதிகளால் விதிக்கப்படும் ஸ்மார்த்த தர்மம் இரண்டாவது ப்ரமாணமாகும். இதனல் ஶ்ருதிகளில் விதிக்கப்பட்ட தர்மத்தை விட ஸ்மார்த்ததர்மம் துர்ப்பலமென்பதும் ஸூசிப்பிக்கப்பட்டது, இரண்டிற்கும் விரோதம் இருந்தால்.

த்ருதீய: ஶிஷ்டாகம: ॥ ௪ ॥

சிஷ்டர்களால் ஆசரிக்கப்படுகிற தர்மம் மூன்றாவது படியைச் சேர்ந்தது. ஸ்ம்ருதிக்கு அடுத்த ப்ரமாணம் சிஷ்டாசாரம். இது

ஸ்ம்ருதியை விட துர்ப்பலம். ப்ரத்யக்ஷ ச்ருதி விஹித தர்மம் முதல் ப்ரமாணம். இரண்டாவது ப்ரகீர்ணமாயுள்ள மந்த்ரம் அர்த்த வாதமிவைகளிலிருந்து கல்பிதமானது. மூன்றாவது அநுமித ச்ருதி மூலமானது. மேற்கண்ட ச்ருதி, ஸ்ம்ருதி, சிஷ்டாசாரம் என்பவை வைதிகமதத்தின் ப்ரமாணங்கள். எல்லாம் வேதமூலங்களாயினும் ப்ரத்யக்ஷச்ருதியை விட அநுமிதச்ருதிமூலமானவை துர்ப்பலங்களே.

ஶிஷ்டாঃ ஸலு விগதமத்ஸரா: நிரஹங்காரா: கும்பீதான்யா அலோலுபா: தம்ப தர்ப லோப மோஹ க்ரோத விவர்ஜிதா: ॥ ரு ॥

சிஷ்டர்கள் என்பவர்கள் பிறரிடம் பொறாமையற்றவர்களாயும், கர்வமற்றவர்களாயும், பத்துத் தினங்களுக்கு மட்டும் வேண்டிய தான்யத்தைப் பானையில் சேகரித்து வைத்துக்கொண்டிருப்பவர்களாயும், ஆசையற்றவர்களாயும், டம்பம், கொழுப்பு, க்ருபணத் தன்மை, மோஹம், கோபமிவைகளில்லாதவர்களாயுமாகிய பெரியோர்கள். அவர்களுடைய ஆசாரம் தர்மப்ரமாணமாகும்.

யர்மேணாதிগதோ யேஷாம் வேத: ஸபரிப்ரும்ஹண: ।
ஶிஷ்டாஸ்ததநுமாநஜ்ஞா: ஶ்ருதிப்ரத்யக்ஷஹேதவ: ॥ இதி ॥

மேலும் சிஷ்டலக்ஷணமாவது:—எவர்கள் ஸகல அங்க உபாங்கங்களுடன் கூடிய வேதத்தைத் தர்மசாஸ்த்ரவிதிப்படி அத்யயநம் செய்துள்ளார்களோ அவர்கள் சிஷ்டர்கள். அந்தச் சிஷ்டர்கள் வேதங்களில் ப்ரத்யக்ஷமாயுள்ள தர்மங்களுக்கும், வேதத்திலில்லாத அநுமானபலத்தால் கண்ட வேதத்திலுள்ள தர்மங்களுக்கும், ப்ரமாணமாயிருப்பவர்கள்.

தদபாவே দஶாவரா பரிஷத் ॥ எ ॥

சிஷ்டாசாரப்ரமாணமும் கிடைக்காத தர்மத்தின் ஸந்தேஹ விஷயத்தில் பத்துக்குக் குறையாத சிஷ்டர்கள் பரிஷத்தாகக் கூடி நிர்ணயிப்பது தர்மமாகும்.

அதாப்யுதாஹரந்தி —

சாதுர்வைদ்யம் விகல்பீ ச அங்கவித் தர்மபாடக: ।
ஆஶ்ரமஸ்தாஸ்த்ரயோ விப்ரா: பர்ஷதேஷா দஶாவரா ॥ அ ॥

நான்கு வேதங்களை அறிந்தவர்கள், மீமாம்ஸா சாஸ்த்ரமறிந்த

வன், வேதாங்கமான வ்யாகரணுதிகள் தெரிந்தவன், தர்மசாஸ்த்ரம் படித்தவன், ப்ரஹ்மசர்ய கார்ஹஸ்த்ய ஸந்யாஸாச்ரமத்திலுள்ள மூன்று ப்ராம்ஹணர்கள் ஆகிய இவர்கள் சேர்ந்ததே தசாவரபரிஷத்தாகும் என்று சொல்லுகிறுர்கள்.

பஞ்ச வா ஸ்யுஸ் த்ரயோ வா ஸ்யுர் ஏகோ வா ஸ்யா
த³நிந்தி³த꞉ | ப்ரவக்தா த⁴ர்மஶாஸ்த்ரஸ்ய தேந த⁴ர்ம ஸஹ
ஸ்ரஶ꞉ | ௰ ||

அல்லது மேற்கண்ட பத்துப் பேர்களுக்குப் பதிலாக அந்தக் குணங்களுள்ள ஐந்து பேர்களோ மூன்று பேர்களோ பரிஷத்தாக ஆகலாம். அல்லது தோஷரஹிதனும், நன்கு தர்மத்தை விவரித்துச் சொல்லக்கூடியவனுமான ஒருவனும் பரிஷத்தாக ஆகலாம். மேற்கண்ட குணமற்றவர் ஆயிரம்பேர் இருந்தாலும் அது பரிஷத்தாகாது.

அவ்ரதாநாமமந்த்ராணாம் ஜாதிமாத்ரோபஜீவிநாம் |
ஸஹஸ்ரஶ꞉ ஸமேதாநாம் பரிஷத்த்வம் ந வித்³யதே || இதி ||

வ்ரதானுஷ்டானமில்லாதவர்களும், வேத மந்த்ரங்களையறியாதவர்களும், பிறப்பு ஜாதியை மாத்ரம் ஜீவிகையாகக் கொண்டவர்களுமான அசிஷ்டர்கள் ஆயிரமாகக் கூடியிருந்தாலும், அதற்குப் பரிஷத் என்ற தன்மை கிடையாது.

யதா² தா³ருமயோ ஹஸ்தீ யதா² சர்மமயோ ம்ருக³꞉ |
ப்³ராஹ்மணஶ்சாநதீ⁴யாநஸ் த்ரயஸ்தே நாமதா⁴ரகா꞉ || ௧௧ ||

மரத்தால் செய்யப்பட்ட யானை எப்படியோ, தோலால் செய்யப்பட்ட மான் எப்படியோ, அப்படியே வேதாத்யயனம் செய்யாத ப்ராம்ஹணனும் உபயோகமற்றவன். இம்மூன்றும் வெறும் பெயர் மாத்திரம் வகிப்பவை.

யத்³வத³ந்தி தமோமூடா⁴ மூர்கா² த⁴ர்மமதத்³விஷ꞉ |
தத்பாபம் ஶததா⁴ பூ⁴த்வா தத்³வக்த்ரூநதி⁴க³ச்ச²தி || ௧௨ ||

அக்ஞானத்தால் மோஹித்தவரும், தர்மசாஸ்த்ர தத்வமறியாதவர்களுமான மூடர்கள் ப்ராயச்சித்தாதி தர்மசாஸ்த்ர விதி நிர்ணயம் சொன்னுர்களானுல் அந்தப் பாபம் நூறு பங்குள்ள தோஷமாகி அதைச் சொல்லியவர்களிடம் வந்துசேரும்.

ப³ஹுத்³வாரஸ்ய த⁴ர்மஸ்ய ஸூக்ஷ்மா து³ரநுகா³ க³தி꞉ |
தஸ்மாந்ந வாச்யோ ஹ்யேகேந ப³ஹுஜ்ஞேநாபி ஸம்ஶயே |

தர்மமானது அநேகவித சாஸ்த்ர மார்க்கமுள்ளது. அதனால் அதன் கதி ஸூக்ஷ்மம். தத்வமாகப்பின்பற்றமுடியாத போக்குள்ளது. ஆகையால் அதிக ஞானமுள்ளவனாயினும், ஒருவனாகத் தர்ம ஸந்தேஹங்களில் நிர்ணயம் சொல்லக்கூடாது.

𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌰𑌥𑌾𑌰𑍂𑌢𑌾𑌃 𑌵𑍇𑌦𑌖𑌡𑍍𑌗𑌧𑌰𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑌰𑌮𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥

பரிஷத்தாகப் பலர் சேர்ந்த த்விஜர்கள், தர்மசாஸ்த்ரமென்கிற ரதத்தில் ஏறி, வேதமென்கிற கத்தியைத் தரித்து, விளையாட்டாக ஒன்றைச் சொன்னாலும் அது உத்க்ருஷ்ட தர்மமாகக் கருதப்படுகிறது. சிஷ்ட ஸமூஹத்திற்கு அவ்வளவு மஹிமை உண்டு.

𑌯𑌥𑌾𑌶𑍍𑌮𑌨𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌰𑍍𑌕𑌃 𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌰𑌿 𑌯𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌜𑌲𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌲𑍀𑌯𑌤𑍇 ॥ ௧௫ ॥

ஒரு கல்லில் தேங்கியுள்ள ஜலத்தைக் காற்றும், ஸூர்யனும் எப்படிச் சோஷிக்கச் செய்கின்றனவோ அதுபோல், கர்த்தாவிடமிருந்த தோஷமும் அந்த ஜலம் போல் ப்ராயச்சித்தத்தால் மறைந்துவிடுகிறது.

𑌶𑌰𑍀𑌰𑌂 𑌬𑌲𑌮𑌾𑌯𑍁𑌶𑍍𑌚 𑌵𑌯𑌃 𑌕𑌾𑌲𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌚 ।
𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍇𑌤𑍍 ॥ ௧௬ ॥

தர்மமறிந்தவன், தோஷியின் சரீரநிலைமை, சரீரபலம், ஆயுஸ், வயது, காலம், ப்ராயச்சித்தகர்மாவின் தன்மை இவைகளைத் தனது புத்தியால் நன்கு பரிசீலித்து ப்ராயச்சித்த வ்ரதங்களை விதிக்கவேண்டும்.

𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

முதல் கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

இரண்டாவது கண்டம்.

𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑌸𑍍𑌤𑌥𑍋𑌤𑍍𑌤𑌰𑌤𑌃 ॥ ௧ ॥

தேசத்தின் தெற்குப் பாகத்திலும், வடக்குப்பாகத்திலும் உள்ள சிஷ்டர்களுள் ஐந்து விதமான ஆசார அபிப்ராய பேதமிருக்கிறது.

யாநி தக்ஷிணத꞉ தாநி வ்யாக்யாஸ்யாம꞉ ॥ ௨ ॥

முதலில் தெற்கேயுள்ள ஆக்ஷேபார்ஹமான ஆசாரங்களை விவரித்துக் கூறுகிறோம்.

யதைதத³நுபேதேந ஸஹ போஜநம் ஸ்த்ரியா
ஸஹ போஜநம் பர்யுஷிதபோஜநம் மாதுலபித்ருஷ்வ
ஸ்ருதுஹித்ருகமநமிதி ॥ ௩ ॥

உதாஹரணமாக:— உபநயநமாகாதவனுடன் சேர்ந்து ஒரு பங்க்தியில் போஜனம் செய்வது, ஸ்த்ரீயுடன் சேர்ந்து சாப்பிடுவது, பர்யுஷிதத்தை (முதல் நாள் பக்வமான அந்நம்) சாப்பிடுவது, மாதுலனின் புத்ரீ, அத்தையின் பெண் இவர்களை விவாஹம் செய்து ஸம்பந்தப்படுத்துவது, ஆகிய இவை தக்ஷிண தேச துராசாரமென்று வடதேச சிஷ்டர்களின் ஆக்ஷேபம்.

அதோத்தரத꞉ ஊர்ணாவிக்ரய꞉ ஸீதுபாநமுபயதோ
தத்பிர்வ்யவஹார꞉ ஆயுதீயகம் ஸமுத்ரஸம்யாநமிதி ॥ ௪ ॥

இனி வடக்கில் உள்ள துராசாரங்களாவன:— பலவித கம்பள விக்ரயம், மதுபானம், இரட்டைப் பற்களுள்ள அச்வாதி ப்ராணிகளை விற்று ஜீவிப்பது, ஆயுதம் தரித்து யுத்தம் செய்வது, கப்பலால் ஸமுத்ரம் தாண்டி த்வீபாந்தரம் போவது இவைகளைத் தெற்குத் தேச சிஷ்டர்கள் நிந்திக்கிறார்கள்.

இதரதிதரஸ்மிந் குர்வந் துஷ்யதீதரதிதரஸ்மிந் ॥ ௫ ॥

அநுபநீத ஸஹபோஜனதி தக்ஷிண தேச துராசாரங்களை மற்றொன்றான வடக்கிலும், வடக்கில் உள்ள ஊர்ண கம்பள விக்ரயாதிகளான துராசாரங்களை மற்றொன்றான தெற்கிலும் ஆசரித்தால் தோஷமுள்ளவனாவான். அந்தந்தத் தேசங்களுக்கு அந்தந்த ஆசாரம் தோஷமற்றது.

தத்ர தத்ர தேசப்ராமாண்யமேவ ஸ்யாத் ॥ ௬ ॥

இரண்டு தேச துராசாரங்களுக்கும் மூல ச்ருதியை அந்தந்தத் தேச சிஷ்டர்கள் கல்பிக்கக் கூடுமாகையால், அந்தந்தத் தேச ப்ராமாண்யமே இதில் இருக்கவேண்டியது. ஆகையால் விஷய வ்யவஸ்தையுடனே இது ஆசரிக்கத்தக்கது.

மித்யைததிதி கௌதம꞉ ॥ ௭ ॥

ஆனால் கௌதம மஹர்ஷி மேற்கண்ட துராசாரம் இரண்டும்

சாஸ்த்ர விருத்தம், பொய்யானவை, ஆசரிக்கத்தக்கவையில்லை யென்று கூறுகிறார். ஏனெனில் இரண்டு தேச துராசாரங்களும் சாஸ்த்ரநிஷித்தங்களாகி ப்ராயச்சித்தம் விதிக்கப்பட்டிருப்பதால்.

உஹயம் மெவெவ நாஉ்ரியெசு ॥ அ ॥

ஆகையால் கௌதமாபிப்ராயப்படி இரண்டு தேச துரா சாரங்களும் சாஸ்த்ர நிஷித்தமாகையால் சிஷ்டர்கள் அவைகளை ஆதரிக்கக்கூடாது. போதாயன மதமும் இதுவே.

ஶிஷ்டஸ்ம்ருதிவிரொயஉ்ஶ-நாக ஶிஷ்டாசாரவிரொயஉ்ஶ-நாவு ॥

மேற்கண்ட இரண்டு தேச துராசாரங்களிலும் மநு முதலிய சிஷ்டர்களின் ஸ்ம்ருதிகளுக்கு விரோதம் காணப்படுவதாலும், சிஷ்டாசார விரோதம் காணப்படுவதாலும் இரண்டும் அநாதரணீயம். சாஸ்த்ர விருத்த ஆசார விஷயங்களில் மூல ச்ருத்யனுமான மூலமாக ப்ராமாண்யம் கல்பிக்க முடியாது. விருத்த விஷயங்களில் மூலச்ருத்யநுமானமே ஸம்பவிக்காது.

ப்ராகஉ்ஶ-நாக ப்ரத்யக் காலகவநாக உக்ஷிணெந
ஹிமவநும் உஉக்பாரியாத்ரமெதஉாயவதம் தஸ்மிந்ய
ஆசாரஃ ஸ ப்ரமாணம் ॥ கய ॥

சிஷ்ட தேசமென்பது:— மறைந்துள்ள ஸரஸ்வதீ நதீ தீரத்தின் கிழக்கிலிருந்து காலகவநத்தின் மேற்கிலும், ஹிமவானுக்குத் தெற்கிலும், பாரியாத்ரத்திற்கு வடக்கிலுமுள்ள ப்ரதேசம் ஆர்யாவர்த்தம் எனப்படும். அதில் உள்ள ஆசாரம் எதுவோ அதுவே எங்கும் ப்ரமாணமாகும்.

஗ங்காயமுநயொரநுதரமித்யெகெ ॥ கக ॥

கங்கை யமுனை இவைகளின் நடுப்ரதேசம் ஆர்யாவர்த்தமென்று சிலர் கூறுகிறார்கள்.

அயாப்யத்ர ஹால்லவிநொ காயாமுஉாஹரந்தி ॥ கஉ ॥

ஆர்யாவர்த்த ப்ரதேச விஷயமாகப் பால்லவிகளென்ற சந்தோகர்கள், சில ச்லோகங்களைச் சொல்லுகிறார்கள்.

பஶ்சாத்ஸிந்துர்விஸரணீ ஸூர்யஸ்யொஉயநம் புரஃ ।
யாவத்க்ருஷ்ணொ விதாவதி தாவத்வை ப்ரஹ்மவர்சஸம் ॥ கங ॥

மேற்கில் ப்ரவஹிக்கிற ஸிந்து நதியும், கிழக்கில் ஸூர்யோதயம் தெரியும் ப்ரதேசமும், இதற்குள் க்ருஷ்ண, கறுப்பு மான்

ஸ்வதந்த்ரமாக எவ்வளவு தூரம் ஸஞ்சரிக்கிறதோ அந்த எல்லை வரையில் ப்ரஹ்மதேஜஸ் உள்ள இடம். ப்ரஹ்மதேஜஸ்ஸுக்கு ஆதாரமான வேத ப்ரசாரம், அதை அப்யஸிக்கும் ஆர்யர்கள் இருக்குமிடம்.

சுவஹெபொZஜூஉமயாஃ ஸுராஷ்ட்ரா உக்ஷிணாவயாஃ ।
உவாவ்ருசுஸிஙுஸௌவீரா ஏதெ ஸங்கீணயொநயஃ ॥

அவந்தீ, அங்கதேசம், மகதம், ஸௌராஷ்ட்ரம் தக்ஷிண மார்க்கங்கள், உபாவ்ருத், ஸிந்து, ஸௌவீரம் இந்தத் தேசங்கள் கலப்பு ஜாதியுள்ளவை. சுபாசாரமற்றவை.

ஆரட்டாநு காரஸ்கராநு புண்ட்ராநு ஸௌவீராநு வஙூாநு
கலிஙூாநு ப்ராநூநாநிதி வ மகுா புநஸ்தோமேந யஜெத
ஸவ்வப்ருஷ்டயா வா ॥ கரு ॥

ஆரட்டம், காரஸ்கரம், புண்ட்ரதேசம், ஸௌவீரம், வங்கம், கலிங்கம், ப்ராஹூனம் ஆகிய தேசங்களுக்குப் போனால் ஆஹிதாக்நி புனஸ்தோம யாகமாவது ஸர்வ ப்ருஷ்ட யாகமாவது ப்ராயஶ்சித்தார்த்தமாகச் செய்யவேண்டும். அநாஹிதாக்நிக்கு வேறு ப்ராயஶ்சித்தம் சொல்லப்பட்டுள்ளது.

சுயாவ்யுதாஹரந்தி —
வஜ்ஸ்யாம ஸ கலிஙூாநு வாவம் யஃ கலிஙூாநு ப்ரவஷ்வ
தெ । ஊஷயொ நிஷ்க்ருதிம் தஸ்ய ப்ராஹுர்வெஶ்வாநரம்
ஹவிஃ ॥ சகூ ॥

எவன் கலிங்க தேசத்திற்குள் போகிறானோ அவன் தனது பாதங்களால் பாபங்களைச் செய்கிறான். ருஷிகள் அதற்கு ப்ராயஶ்சித்தமாக வைஶ்வாநர ஹவிஸ்ஸுள்ள இஷ்டியை விதித்துள்ளார்கள், என்று ருஷிகள் உதாஹரிக்கிறார்கள்.

பஹூநாஉவி ஷொஷாணாம் க்ருதாநாம் ஷொஷநிணுயெ ।
பவித்ரெஷ்டிம் ப்ரஶம்ஸந்தி ஸா ஹி பாவநமுத்தம
இதி ॥ கள ॥

பொதுவாகவே அநேக பாபங்களை ஒருவன் செய்தால் அப்படிச் செய்யப்பட்ட அந்தத் தோஷங்களுக்கு நிவாரண விஷயமாகப் பவித்ரேஷ்டியை மஹர்ஷிகள் ப்ரசம்ஸிக்கிறார்கள். ஏனெனில் அது உத்தமமான சுத்திகர ஸாதனம் என்று.

𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑍀𑌂 𑌵𑍍𑌰𑌾𑌤𑌪𑌤𑍀𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇𑌷𑍍𑌟𑌿𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌋𑌤𑌾𑌵𑍃𑌤𑍌 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌃 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௮ ॥

வைஶ்வாநரீஷ்டி, வ்ராதபதீஷ்டி, பவித்ரேஷ்டி ஆகியவைகளை ஒவ்வொரு ருதுவிலும் ப்ரயோகம் செய்தால் (அநுஷ்டித்தால்) ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுவான். இரட்டித்துச் சொல்லுவது அத்யாய ஸமாப்தி ஸூசகம்.

𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

முதல் ப்ரஶ்னத்தில் முதல் அத்யாயம் முற்றிற்று.

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

முதல் ப்ரஶ்னம்—இரண்டாவது அத்யாயம்.

மூன்ருவது கண்டம்.

𑌅𑌷𑍍𑌟𑌾𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌪𑍌𑌰𑌾𑌣𑌂 𑌵𑍇𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑍍 ॥ ௧ ॥

வேதங்களை க்ரஹிப்பதற்காக ஏற்பட்ட ப்ரஹ்மசர்ய வ்ரதமானது வெகு ப்ராசீன காலம் முதல் இருந்து வருகிறது. அது நாற்பத்தெட்டு வர்ஷங்கள் அநுஷ்டிக்கப்படவேண்டும், உபநயநம் முதல்.

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑌮𑍍 ॥ ௨ ॥

அல்லது, எல்லா வேதங்களுக்குமாக இருபத்துநான்கு வர்ஷம். அதுவும் ஸாத்யமில்லையானல், பன்னிரண்டு வர்ஷங்கள் ப்ரஹ்மசர்ய வ்ரதமநுஷ்டிக்கவும்.

𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌵𑌰𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑌾𑌣𑍍𑌡𑌮𑍍 ॥ ௩ ॥

அல்லது, ப்ராஜாபத்யாதி காண்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வர்ஷத்திற்குக் குறையாமல் ப்ரஹ்மசர்யம் அநுஷ்டிக்கவும்.

𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 ॥ ௪ ॥

அல்லது எவ்வளவு காலத்திற்குள் வேதங்கள் க்ரஹிக்கப்படுகின்றனவோ அதுவரையிலாவது ப்ரம்ஹசர்யம் அநுஷ்டிக்கவும்.

ஜீவிதஸ்யாஸ்திரத்வாத் ॥ ௫ ॥

வேதாத்யயனம் முடியும் வரையில் ப்ரஹ்மசர்யமென்கிற பக்ஷமே உசிதம். நீண்டகாலம் கூடாது. ஏனெனில் ஜீவிதம் அஸ்திரமாகையால் நீண்டகாலம் உசிதமன்று. அக்நிஹோத்ராதி கர்மாக்களுக்கும் தடை ஏற்படும்.

க்ருஷ்ணகேஶோ(அ)க்நீநாதததீதேதி (ஹி) ஶ்ருதி: ॥ ௬ ॥

தலையிலுள்ள கேசங்கள் கறுப்பு வர்ணத்துடன் இருக்கையிலேயே, அதாவது அவை நரைப்பதற்குள்ளாகவே, அக்ந்யாதானம் செய்துவிட வேண்டும் (அக்நிஹோத்ராரம்பம்) என்று ச்ருதியே விதிக்கிறதல்லவா? ஆகையால் நீண்டகால ப்ரஹ்மசர்யம் அநுசிதம்.

நாஸ்ய கர்ம நியச்சந்தி கிஞ்சிதா மௌஞ்ஜீபந்தநாத் । வ்ருத்த்யா
ஶூத்ரஸமோ ஹ்யேஷ: யாவத்வேதே ந ஜாயதே ॥ ௭ ॥

ப்ராம்ஹணனுக்கு உபநயநம் ஆகும்வரையில் ஒரு கர்மாவிலும் அதிகாரம் கிடையாது என்கிறார்கள். எதுவரையில் உபநயநமாகிற வேத ஜந்மம் ஏற்படவில்லையோ, அதுவரையில் அவன் ஆசாரத்தினல் சூத்ரஸமனுக இருப்பான். ஸுராபானம் உபநயநத்திற்கு முந்தியும் நிஷித்தம்.

கர்பாதிஸங்க்யா வர்ஷாணாம் ததஷ்டமேஷு ப்ராஹ்
மணமுபநயேத் ॥ ௮ ॥

ப்ராம்ஹணர்களுக்கு வயதுக் காலமானது, கர்ப்பத்தை ஆதியாகக் கொண்டது. ஆகையால், கர்ப்பத்திலிருந்து எட்டாவது வயதில் அவனுக்கு உபநயநம்.

த்ர்யதிகேஷு ராஜந்யமுபநயீத ॥ ௯ ॥

எட்டுக்குமேல் மூன்று வயது அதிகமான வயதில் (பதினெனன்றில்) க்ஷத்ரியனை உபநயநம் செய்விக்கவும்.

தஸ்மாதேகாதிகேஷு வைஶ்யம் ॥ ௧௦ ॥

க்ஷத்ரியனைவிட ஒரு வயது அதிகமான காலத்தில் (பன்னிரண்டு) வைச்யனை உபநயநம் செய்து வைக்கவும்.

2

வஸந்தோ க்ரீஷ்ம: ஶரதித்யருதவோ வர்ணாநுபூர்வ்யேண ‖

வஸந்தம், க்ரீஷ்மம், சரத் என்ற ருதுக்கள் ப்ரஹ்ம க்ஷத்ரிய வைச்ய வர்ணங்களுக்கு வரிசையாக உபநயந காலங்கள்.

காயத்ரீ த்ரிஷ்டுப்ஜகதீபிர்யதாக்ரமம் ‖ ௧௨ ‖

வர்ணக்ரமமாக காயத்ரீ, த்ரிஷ்டுப், ஜகதீ என்ற சந்தஸ்ஸுகளால் உபநயனம்.

ஆஷோடஶாத் ஆத்வாவிம்ஶாத் ஆசதுர்விம்ஶாதித்யநாத்யய வர்ஷாம் க்ரமேண ‖ ௧௩ ‖

மூன்று வர்ணத்தினர்களுக்கும் வரிசையாக, பதினாறு, இருபத்திரண்டு, இருபத்துநான்கு வயது வரையிலும் உபநயநகாலம் தாண்டாது. அதுவரையில் கௌண காலமாகச் செய்யலாம்.

மௌஞ்ஜீ தநுர்ஜ்யா ஶாணீதி மேகலா: ‖ ௧௪ ‖

ப்ராம்ஹணனுக்கு முஞ்ஜைப் புல்லால் செய்யப்பட்ட மேகலை. க்ஷத்ரியனுக்கு வில்லின் நாண்கயிறு மேகலை. வைச்யனுக்குச் சணலால் செய்யப்பட்ட மேகலை.

க்ருஷ்ணரௌரவபஸ்தாஜிநாந்யஜிநாநி ‖ ௧௫ ‖

க்ருஷ்ணமான்தோல் ப்ராம்ஹணனுக்குத் தரிக்கத்தக்கது. க்ஷத்ரியனுக்கு ருரு என்கிற மானின் தோலும், வைச்யனுக்குப் பஸ்த (ஆடு) என்பதின் தோலும்.

மூர்தலலாடநாஸாக்ரப்ரமாணா யாஜ்ஞிகஸ்ய வ்ருக்ஷஸ்ய தண்டா: ‖ ௧௬ ‖

பலாசாதி யாஜ்ஞிக வ்ருக்ஷத்தின் தண்டங்கள் ப்ராம்ஹணனுக்குத் தலையளவும், க்ஷத்ரியனுக்கு நெற்றியளவும், வைச்யனுக்கு மூக்கு நுனியளவும் உள்ளவைகளாகத் தரிக்கப்பட வேண்டும்.

பவத்பூர்வாம் பிக்ஷாமத்யாம் யாச்ஞாந்தாம் ஸப்தாக்ஷராம் க்ஷாம்-ச ஹிம்-ச ந வர்தயேத் ‖ ௧௭ ‖

பிக்ஷையில் ஏழு எழுத்துள்ள வாக்யத்தைச் சொல்லவும். அதில் "பவதி" என்பது முதலிலும், "பிக்ஷாம்" என்பது மத்தியிலும், "தேஹி" என்ற யாச்நாபதம் கடைசியிலுமாக இருக்க வேண்டும். பிக்ஷாம் என்பதிலுள்ள "க்ஷாம்" என்பதையும்,

“தேஹி” என்பதிலுள்ள “ஹி” என்பதையும் த்விவசன, பஹு வசநாதிகளாக வ்ருத்தி பண்ணிச் சொல்லக்கூடாது.

𑌭𑌵𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌿𑌕𑍍𑌷𑍇𑌤 𑌭𑌵𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌂 𑌰𑌾𑌜
𑌨𑍍𑌯𑌃 𑌭𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 ॥ ௧௮ ॥

அந்த வாக்யத்திலுள்ள ‘பவதி’ என்பதை ப்ராம்ஹணன் ஆதியிலும், க்ஷத்ரியன் மத்தியிலும் (பிக்ஷாம்பவதிதேஹி) வைச்யன் கடைசியிலும் (பிக்ஷாம்தேஹிபவதி) சேர்த்துச் சொல்லவும் இந்தப் பிக்ஷையை இங்கு ப்ரக்ருதமான எல்லா வர்ணத்தாரிடமும் (மூன்று வர்ணத்தார்) பெறலாம். சூத்ரவர்ணத்திடம் நிஷித்தம்.

𑌤𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌥𑌾𑌃 ॥ ௧௯ ॥

பிக்ஷை போடும் அதிகாரிகளான அந்த ப்ராம்ஹணாதி வர்ணத்தார்கள் ஸ்வகர்ம நிரதர்களான சிஷ்டர்களாயிருக்கவேண்டும்.

𑌸𑌦𑌾𑌽𑌰𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌮𑌿𑌧 𑌆𑌹𑍃𑌤𑍍𑌯𑌾𑌽𑌽𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 ௨௦ ॥

அரண்யத்திலிருந்து ஸமித்துக்களைக் கொண்டுவந்து அக்னியில் எப்போதும் நித்யமாக “ஸமிதாதான” ஹோமம் செய்யவும்.

𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑍀 𑌹𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌨𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 ॥ ௨௧ ॥

அத்யயனம் செய்யும் மாணவகன் ஸத்யவாதியாயும், நிஷித்த கார்யம் செய்வதில் லஜ்ஜையுள்ளவனாயும், அஹங்காரமற்றவனாயுமிருக்கவேண்டும்.

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌥𑌾𑌯𑍀 𑌜𑌘𑌨𑍍𑌯𑌸𑌂𑌵𑍇𑌶𑍀 ॥ ௨௨ ॥

மாணவகன் ஆசார்யன் படுத்த பிறகு தான் படுப்பவனாயும், அவர் எழுந்திருக்குமுன் தான் எழுந்திருப்பவனாயுமிருக்க வேண்டும்.

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌗𑍁𑌰𑍁𑌵𑌾𑌕𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌪𑌾𑌤𑌕𑌾𑌤𑍍 ॥ ௨௩ ॥

எல்லா விஷயங்களிலும் ஆசார்யனுடைய ஆக்ஞாவார்த்தைகளைத் தடையில்லாமல் அநுஸரிப்பவனாயிருக்கவேண்டும். பாதித்யம் ஏற்படக்கூடிய கார்யம் நீங்கலாக. குரு ஆக்ஞையாயினும் அதைக் கேட்கக்கூடாது.

𑌯𑌾𑌵𑌦𑌰𑍍𑌥𑌸𑌂𑌭𑌾𑌷𑍀 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑌿𑌃 ॥ ௨௪ ॥

மாணவகன் ஸ்த்ரீகளுடன் அவச்ய நிர்ப்பந்தமான விஷயம் எவ்வளவோ அவ்வளவுக்குத்தான் பேசவேண்டும்.

ந்ருத்யகீதவாதித்ர கந்தமால்யோபாநச்சத்ரதாரணாஞ்ஜ
நாப்யஞ்ஜநவர்ஜீ ॥ உரு ॥

நாட்யம், பாட்டு, வாத்யங்கள், சந்தனாதி வாஸனை, புஷ்பம், பாதரக்ஷை, குடைதரிப்பது, கண்ணுக்கு மை, அப்யங்கஸ்நாநம் இவைகளை விலக்கியவனாயிருக்கவேண்டும்.

தக்ஷிணம் தக்ஷிணேந ஸவ்யம் ஸவ்யேந பாதாவுபஸங்க்ருஹ்ணீ
யாத் தீர்க்கமாயுஃ ஸ்வர்க்கம் ப்ரேப்ஸுஃ ॥ உசு ॥

ஆசார்யனுடைய வலது பாதத்தைத் தனது வலது கையி னாலும், இடது பாதத்தை இடது கையினாலும் தொட்டு உப ஸங்க்ரஹணம் பாதஸ்பர்ச நமஸ்காரம் செய்யவும். அதனால் தீர்க்க மான ஆயுஸ்ஸும், ஸ்வர்க்கமும் கிடைக்கும். அவைகளை விரும்பி அப்படிச் செய்யவும்.

அஸாவஹம் போஃ இதி ஶ்ரோத்ரே ஸம்ஸ்ப்ருஶ்ய மனஃஸமா
தாநார்த்தம் ॥ உஎ ॥

மேற்கண்டவாறு பாதஸ்பர்சமாகி உபஸங்க்ரஹணம் செய்கை யில், மாணவகன் தனது காதுகளைத் தொட்டுக்கொண்டு, தனது பெயரைச் சொல்லி "அஹம்போ:" என்றும் சொல்லவும். இப்படிச் செய்வது சித்த ஸமாதானார்த்தமாகும்.

அதஸ்தாஜ்ஜான்வோரா பத்ப்யாம் ॥ உஅ ॥

மேற்கண்டவாறு பாதஸ்பர்சம் செய்வதானது ஆசார்யனின் முழங்கால்களுக்குக் கீழாகவும், இரண்டு பாதங்களுக்கு மத்தி யிலும் இருக்கவேண்டும். பாதங்களுக்கு வெளியில் செய்யக் கூடாது.

நாஸீநோ நாஸீநாய ந ஶயாநோ ந ஶயாநாய
நாப்ரயதோ நாப்ரயதாய ॥ உகூ ॥

பாதஸ்பர்சம் உட்கார்ந்துகொண்டு செய்யக்கூடாது. ஆசார் யன் உட்கார்ந்திருக்கும்போதும் செய்யக்கூடாது. படுத்துக் கொண்டும் செய்யக்கூடாது. ஆசார்யன் படுத்திருக்கையிலும் கூடாது. அசுத்தனாயிருந்தும் செய்யக்கூடாது. ஆசார்யன் அசுத்தனாயிருக்கையிலும் செய்யக்கூடாது.

[illegible] ஸாய[illegible]வ்ருத்தாய [illegible]நாநுஜ்ஞாதஃ ॥ ௩௦ ॥

ஆசார்ய ஸந்நிதானத்தில் வேறு ஸதாசார நிஷ்டரான

பெரியோர் இருந்தால் ஆசார்யாநுக்ஞை பெற்று அவரையும் நமஸ்கார உபஸங்க்ரஹணாதிகள் செய்யலாம், இச்சையிருந்தால். ஆசார்ய அஸந்நிதானத்தில் அநுக்ஞை வேண்டியதில்லை.

ஶக்திவிஷயெ ஈ௱ஹ௰மபி நாஶுசிஸ்ஸ்யாத் ॥ ௩௧ ॥

சக்தியுள்ள நிலைமையில் ஒரு க்ஷணம்கூட அபரிசுத்தனுக இருக்கக்கூடாது. அபரிசுத்திகர கார்யத்தைச் செய்யக்கூடாது. செய்ய நேர்ந்தால் உடனேயே ஸ்நாநாசமனாதிகளால் சுத்திசெய்து கொள்ளாமலுமிருக்கக்கூடாது. இந்த விதி ப்ரம்ஹசாரி க்ருஹஸ்தாதி ஸகலருக்கும் பொதுவானது.

ஸமித்பாணி: உதகும்பபுஷ்பான்னஹஸ்தோ நாபிவாதயே

ச்சாந்யதபி யத்கிஞ்சேவம் யுக்தஃ ॥ ௩௨ ॥

கையில் ஸமித்தை வைத்துக்கொண்டும், ஜலபாத்ரம், புஷ்பம், அந்நம் முதலியவைகளை வைத்துக்கொண்டும் அபிவாதனம் செய்யக் கூடாது. இம்மாதிரி வேறு எந்தக் கார்யம் உள்ள ஸமயத்திலும் கூடாது. தேவ பித்ரு கார்யாதி ஸந்தர்ப்பத்திலும்.

ந ஸமவாயேऽபிவாதநமத்யந்தஶ: ॥ ௩௩ ॥

மிகவும் நெருங்கிய இடத்தில், சேர்க்கையிலும் அபிவாதனம் கூடாது.

ப்ராத்ருபத்நீநாம் யுவதீநாம் ச குருபத்நீநாம் ஜாத வீர்யஃ ॥ ௩௪ ॥

யுவதிகளான ப்ராத்ரு பத்நீமாரையும், ஆசார்ய பத்நீமாரையும் சுக்லம் என்ற வீர்யம் உண்டான பிறகு நமஸ்கார உபஸங்க்ரஹணாதிகள் செய்யக்கூடாது. நெருங்கிய நிலைமையில் என்று சிலர். ஒதுங்கியிருந்து செய்யலாமென்று அவர்கள் கருத்து.

நௌஶிலாபலககுஞ்ஜரப்ராஸாதகடகேஷு சக்ர

வத்ஸு சாதோஷம் ஸஹாஸநம் ॥ ௩௫ ॥

ஓடம், ஒரே பாறைக்கல், பலகை, யானை, மஞ்சாதிகள் அல்லது மாடி, பாய், சக்ரமுள்ள வண்டி, ரதம் முதலியவைகளில் சிஷ்யன் ஆசார்யனுடன் சேர்ந்து உட்காருவது தோஷமாகாது. மற்ற ஸமயத்தில் தோஷம்.

ப்ரஸாரயேந்நாநு ப்ரஸாரயேந்நாபிஷ்டோ ஜநாநீதி க்ரோஃ ॥

சிஷ்யன் ஆசார்யனுக்கு அலங்காரம், குடைபிடித்தல், தேய்த்து ஸ்நானம் செய்துவைத்தல் இவைகளைச் சுச்ரூஷையாகப் பண்ணவேண்டும். ஆசார்யனுடைய போஜன சேஷத்தையும் சாப்பிடவேண்டும்.

𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌵𑌰𑍍𑌜𑌂 𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌽𑌨𑍂𑌚𑌾𑌨𑍇 𑌵𑌾 ॥ ௩௭ ॥

ஆசார்ய புத்ரனிடமும், வேறு வேதாத்யாயியான பெரியவர்களிடமும் மேற்கண்ட மர்யாதைகளைச் செய்யவும். உச்சிஷ்ட போஜனம் நீங்கலாக.

𑌪𑍍𑌰𑌸𑌾𑌧𑌨𑍋𑌤𑍍𑌸𑌾𑌦𑌨𑌸𑍍𑌨𑌾𑌪𑌨𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌵𑌰𑍍𑌜𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌮𑍍 ॥ ௩௮ ॥

ஆசார்யபத்நீ முதலிய ஸ்த்ரீகளிடம், அலங்காரம், குடைபிடித்தல், ஸ்நாநம் செய்துவைத்தல், உச்சிஷ்டபோஜனம் ஆகியவைகளைச் செய்யக்கூடாது.

𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌧𑌾𑌵𑍇𑌤𑍍 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍 ।

ஆசார்யன் கார்ய வசத்தால் ஓடினால் சிஷ்யனும் கூட ஓடவேண்டும். போகும்போது கூடப் போகவும் நிற்கும்போது நிற்கவும்.

𑌨𑌾𑌪𑍍𑌸𑍁 𑌶𑍍𑌲𑌾𑌘𑌮𑌾𑌨𑌃 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌤𑍍 ॥ ௪௦ ॥

ஜலத்தில் வீணாக விளையாடிக்கொண்டோ, உத்ஸாஹப்பட்டுக் கொண்டோ ஸ்நானம் செய்யக்கூடாது.

𑌦𑌣𑍍𑌡 𑌇𑌵 𑌪𑍍𑌲𑌵𑍇𑌤𑍍 ॥ ௪௧ ॥

மரக்கட்டைப்போல் மிதந்து எழுந்திருக்கவும். அழுக்குத் தேய்த்துக் குளிப்பதைத் தடுக்கும் நோக்கமிதற்கு.

𑌅𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑌾𑌪𑌦𑌿 ॥ ௪௨ ॥

ப்ராம்ஹண ஆசார்யன் கிடைக்காத ஆபத்காலத்தில் ப்ராம்ஹணனல்லாத க்ஷத்ரிய வைச்யர்களிடமிருந்தும் அத்யயனம் செய்யலாம்.

𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌨𑍁𑌵𑍍𑌰𑌜𑍍𑌯𑌾 𑌚 𑌯𑌾𑌵𑌦𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍍 ॥ ௪௩ ॥

க்ஷத்ரிய வைச்யர்களிடம் அத்யயனம் செய்ய நேர்ந்தால் அந்த ஆசார்யர்களுக்குச் சுச்ரூஷையும், அநுகமநமும் அத்யயனம் முடியும் வரையில்தான். பிறகு வேண்டாம்.

𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑌦𑍇𑌵 𑌪𑌾𑌵𑌨𑌮𑍍 ॥ ௪௪ ॥

அந்த இரண்டு ஆசார்யர் விஷயத்தில் அதுவே புண்யமாகும். ஜாதி தர்மத்தை மீறுததாகும்.

ப்ராத்ருபுத்ரஶிஷ்யேஷு சைவம் ॥ ௪௫ ॥

ப்ராதா, புத்ரன், சிஷ்பன் இவர்களிடம் அத்யயனம் செய்ய நேர்ந்தாலும் முன் சொல்லியது போல் அத்யயனம் முடியும் வரையில் சுச்ரூஷை.

ருத்விக்ஶ்வஶுரபித்ருவ்யமாதுலாநாம் து யவீயஸாம்
ப்ரத்யுத்தாய அபிபாஷணம் ॥ ௪௬ ॥

அத்யயனம் செய்துவைக்கும் ருத்விக், மாமனார், பிதாவின் ப்ராதா, மாதுலன் இவர்கள் சிறிய வயதுள்ளவர்களாயிருந்தால் அவர்கள் வரும்போது எழுந்திருந்து பேசவேண்டும்.

ப்ரத்யபிவாத இதி காத்ய: ॥ ௪௭ ॥

மேற்கண்ட ருத்விக் முதலானவர்களிடம் அத்யயனம் செய்கிறவன் வயதில் பெரியவனாயிருந்தால் அவனுக்கு அவர்கள் ப்ரதி அபிவாதனம் செய்யவேண்டுமென்று காத்யர் என்ற ருஷி நினைக்கிறார்.

ஶிஶாவாங்கிரஸே தர்ஶநாத் ॥ ௪௮ ॥

ஆங்கிரஸர் என்றவர் குழந்தையாயிருக்கும்போதே அத்யயனம் செய்துவைத்ததும், வயது பெரியவர்களான சிஷ்யர்களைப் பிள்ளைகளே! என்று அழைத்ததும் சரித்ரத்தால் தெரிவதால் சிறியவர்களும் பெரியவர்களுக்கு ஆசார்யராகலாம். சுச்ரூஷை செய்யலாம்.

இதி த்ருதீய: கண்ட: ॥

மூன்றுவது கண்டம் முற்றிற்று:

அத சதுர்த: கண்ட: ॥

நான்காவது கண்டம்.

தர்மார்தௌ யத்ர ந ஸ்யாதாம் ஶுஶ்ரூஷா வாபி தத்விதா ।
வித்யயா ஸஹ மர்தவ்யம் ந சைநாம் ஊஷரே வபேத் ॥ ௧ ॥

தர்மமோ, அர்த்தமோ, எவனிடமிருக்கவில்லையோ, அதற்கொப்பான சுச்ரூஷையும் இல்லையோ, அந்த மனிதனுக்கு வித்யோபதேசம் செய்யக்கூடாது. வித்யையை அப்படி நிஷ்ப்ரயோஜன

மாக அநர்ஹனுக்கு உபதேசிப்பதைவிட அந்த வித்யையுடன் இறந்து போனாலும் போகலாம். அதை ஊஷரபூமியில் விதைக்கக்கூடாது.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵 𑌕𑌕𑍍𑌷𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑌾𑌦𑍃𑌤𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑍈 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌨 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌾𑌨𑌮𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌮𑌿𑌤𑌿 ॥

அநாதரவு செய்யப்பட்ட வேதமானது புல்லை அக்நி தஹிப்பது போல் தஹிக்கும். ஆகையால் வேதத்தை முடிந்தவரை கௌரவம் செய்யாதவர்களுக்கு உபதேசிக்கக்கூடாது.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑌤𑍍𑌰 𑌵𑍈 𑌵𑍇𑌦𑍋 𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍇 । ௩ ॥

இந்த விடத்தில் ப்ரம்ஹசாரியின் பொருட்டு ஒரு இதிஹாஸ வாக்யத்தை வேதங்கள் தெரிவிக்கின்றன.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍈 𑌮𑍃𑌤𑍍𑌯𑌵𑍇 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌮𑍇𑌵 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤𑍍𑌸𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌦𑌸𑍍𑌤𑍁 𑌮𑌹𑍍𑌯𑌮𑌪𑍍𑌯𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌭𑌾𑌗 𑌇𑌤𑌿 𑌯𑌾𑌮𑍇𑌵 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌸𑌮𑌿𑌧𑌂 𑌨𑌾𑌽𑌽𑌹𑌰𑌾𑌤𑌾 𑌇𑌤𑌿 ॥ ௪ ॥

அந்த இதிஹாஸ வாக்யமாவது:—

ஜகத்காரணமான ப்ரஹ்மமானது ப்ரஜைகளை முடிவுக்காலத்தில் ம்ருத்யுவினிடம் கொடுத்தது. ஆனால் வேதாத்யயனம் செய்யும் ப்ரஹ்மசாரியை ம்ருத்யுவினிடம் கொடுக்கவில்லை. ப்ரம்ஹத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால். ப்ரம்ஹம் என்பது வேதஸ்வரூபி. ம்ருத்யு ப்ரம்ஹத்தினிடம் கேட்டான், ப்ரம்ஹசாரியினிடமும் தனக்குப் பாகம் வேண்டுமென்று. அதாவது அவர்களுக்கும் மரணம் உண்டாக்கவேண்டுமென்று. அதற்கு ப்ரம்ஹம் பதில் சொல்லிற்று. எந்த இரவில் (தினத்தில்) ப்ரம்ஹசாரீ அக்நியில் ஸமித் ஆதானம் செய்யவில்லையோ, அன்று அவனை ம்ருத்யு பாகமாகக் கொள்ளலாம், என்று. ஸமிதாதானம் செய்யாதவனை ம்ருத்யு பரிக்ரஹிக்கலாமென்று ஆக்ஞை ம்ருத்யுவுக்கு. ஸமிதாதானம் என்பது பிக்ஷாசரணாதி, மற்ற ப்ரம்ஹசாரிதர்மங்களுக்கும் உபலக்ஷணம்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌯𑌾𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌂 𑌸𑌮𑌿𑌧𑌂 𑌨𑌾𑌹𑌰𑌤𑌿 𑌆𑌯𑍁𑌷 𑌏𑌵 𑌤𑌾𑌮𑌵𑌦𑌾𑌯 𑌵𑌸𑌤𑌿 ॥ ௫ ॥

ஆகையால் ப்ரம்ஹசாரீ எந்தத் தினத்தில் ஸமித்ஹோமம்

செய்யவில்லையோ, அன்று அவன் தனது ஆயுஸ்ஸில் ஒரு பாகத்தை விண்டு போடுகிறவனாக இருப்பான்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑍀 𑌸𑌮𑌿𑌧𑌮𑌾𑌹𑌰𑍇𑌨𑍍 𑌨𑍇𑌦𑌾𑌯𑍁𑌷𑍋
𑌽𑌵𑌦𑌾𑌯 𑌵𑌸𑌾𑌨𑍀𑌤𑌿 ॥ ௬ ॥

ஆகையால் ப்ரஹ்மசாரியானவன், தனது ஆயுஸ் குறைந்து கொண்டுவரும் நிலைமைக்கு இடமளிக்க மாட்டேனென்கிற பாவத்துடன் ப்ரதிதினம் ஸமிதாதானம் செய்யவும்.

𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑌤𑍍𑌰𑌂 𑌹 𑌵𑌾 𑌏𑌷 𑌉𑌪𑍈𑌤𑌿 𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌚𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 ॥ ௭ ॥

ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிப்பவன் நீண்ட கால ஸத்ர யாகத்தை அனுஷ்டிப்பவனாகிறான்.

𑌸 𑌯𑌾𑌮𑍁𑌪𑌯𑌨𑍍 𑌸𑌮𑌿𑌧𑌮𑌾𑌦𑌧𑌾𑌤𑌿 𑌸𑌾 𑌪𑍍𑌰𑌾𑌯𑌣𑍀𑌯𑌾,
𑌅𑌥 𑌯𑌾𑌂 𑌸𑍍𑌨𑌾𑌸𑍍𑌯𑌨𑍍 𑌸𑍋𑌦𑌯𑌨𑍀𑌯𑌾, 𑌅𑌥 𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇𑌣
𑌸𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌾𑌃 ॥ ௮ ॥

எந்தத் தினத்தில் உபநயநமாகி, ஸமிதாதானத்தை ஆரம்பிக்கின்றானோ அது ப்ராணீயா என்ற யாகாரம்பதினத்திற்கு ஸமமாகும். எந்தத் தினத்தில் ஸ்நானம் (ஸமாவர்த்தனம்) செய்து வ்ரதம் முடிக்கின்றானோ அது உதயநீயா என்கிற யாக முடிவு தினமாகும். இவ்விரண்டுக்கும் நடுவில் உள்ள ராத்ரிகள் (தினங்கள்) யாகம் செய்யும் தினங்களாகக் கருதப்படும். இவ்வாறாக ப்ரஹ்மசர்யம் தீர்க்க ஸத்ரமென்று ப்ரசம்ஸிக்கப்படுகிறது.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌹 𑌵𑍈 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌯𑌨𑍍 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌤𑌿 । 𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑌦𑌾 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌪𑌦𑌾 𑌆𑌚𑌾
𑌰𑍍𑌯𑌂 𑌪𑌦𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌪𑌾𑌦𑌃 𑌪𑌰𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌸 𑌯𑌦𑌗𑍍𑌨𑌯𑍇 𑌸𑌮𑌿𑌧𑌮𑌾𑌦𑌧𑌾𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑍌 𑌪𑌾𑌦𑌸𑍍𑌤𑌮𑍇𑌵
𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 । 𑌤𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌧𑌤𑍍𑌤𑍇 । 𑌸
𑌏𑌨𑌮𑌾𑌵𑌿𑌶𑌤𑌿 । 𑌅𑌥 𑌯𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌅𑌹𑍍𑌰𑍀
𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌭𑌿𑌕𑍍𑌷𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯
𑌮𑍃𑌤𑍍𑌯𑍌 𑌪𑌾𑌦𑌸𑍍𑌤𑌮𑍇𑌵 𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 । 𑌤𑌂 𑌸𑌂
𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌧𑌤𑍍𑌤𑍇 । 𑌸 𑌏𑌨𑌮𑌾𑌵𑌿𑌶𑌤𑌿 । 𑌅𑌥 𑌯𑌦𑌾
𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌚𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍇 𑌪𑌾𑌦𑌸𑍍𑌤𑌮𑍇𑌵

𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 । 𑌤𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌧𑌤𑍍𑌤𑍇 । 𑌸 𑌏𑌨𑌮𑌾𑌵𑌿𑌶𑌤𑌿 । 𑌅𑌥 𑌯𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌮𑌧𑍀𑌤𑍇 𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑌾𑌦𑌃 𑌤𑌮𑍇𑌵 𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 𑌤𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸 𑌏𑌨𑌮𑌾𑌵𑌿𑌶𑌤𑌿 । 𑌨 𑌹 𑌵𑍈 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑌿𑌕𑍍𑌷𑍇𑌤𑌾𑌪𑌿 𑌹 𑌵𑍈 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌂 𑌚𑌰𑌤𑍍𑌯𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍀𑌨𑌾𑌮𑌶𑌨𑌾𑌯𑌾𑌪𑌿 𑌵𑌿𑌤𑍃𑌣𑌾 𑌮𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍁𑌃 𑌸 𑌯𑌦𑌨𑍍𑌯𑌾𑌂 𑌭𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤𑌾𑌪𑌿 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌾𑌮𑍇𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌜𑌾𑌯𑌾𑌂 𑌭𑌿𑌕𑍍𑌷𑍇𑌤𑌾𑌥𑍋 𑌸𑍍𑌵𑌾𑌂 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌨𑍈𑌨𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑍍𑌯𑌭𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌽𑌤𑍀𑌯𑌾𑌤𑍍 ॥ ௯ ॥

𑌭𑍈𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾𑌚𑌰𑌣𑍇 𑌦𑍋𑌷𑌃 𑌪𑌾𑌵𑌕𑌸𑍍𑌯𑌾𑌽𑌸𑌮𑌿𑌨𑍍𑌧𑌨𑍇 ।
𑌸𑌪𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌕𑍃𑌤𑍍𑌵𑍈𑌤𑌦𑌵𑌕𑍀𑌰𑍍𑌣𑌿𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥
𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌮𑍇𑌵𑌂𑌚𑌰𑌨𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌆𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 ॥

ப்ரம்ஹசர்யத்தை அடைந்துள்ள ப்ராம்ஹணன் நான்குவிதமாய், பூதங்களை ப்ரவேசிக்கிறான். நான்கிலொரு பாகத்தினால் அக்நியையும், மற்றொரு பாகத்தினால் ம்ருத்யுவையும், மற்றொரு பாகத்தினால் ஆசார்யனையும், மற்றொரு பாகத்தினால் தன்னையும் அடைகிறான். நான்காவது பாகமானது ப்ரம்ஹசாரியிடமே பாக்கி நிற்கும். அக்நியில் இவன் ஹோமம் செய்வதால் அக்நியிடமுள்ள தனது பாகத்தை க்ரயம் செய்து வாங்கித் தன் வசத்தில் வைத்துக் கொள்ளுகிறான். அந்தப் பாகமானது இவனிடம் வருகிறது.

இரண்டாவதாக ப்ரம்ஹசாரீ தன்னைத் தரித்ரனாகச் செய்து கொண்டு லஜ்ஜையை விட்டுப் பிக்ஷை வாங்கி, ப்ரம்ஹசர்யம் அனுஷ்டித்தால் அதனால் ம்ருத்யுவிடமிருந்து தனது பாகத்தைத் திரும்பி அடைகிறான். அது இவனிடம் வந்து சேருகிறது. அதை ஸம்ஸ்கரித்துத் தன்னிடம் வைத்துக்கொள்ளுகிறான்.

மூன்றாவதாக ப்ரம்ஹசாரீ ஆசார்யனின் வார்த்தைகளை (ஆக்ஞைகளை)க் கேட்பதால் ஆசார்யனிடமிருக்கும் நான்கிலொரு பாகத்தைப் பரிக்ரயம் செய்து ஸம்ஸ்கரித்துத் தன்னிடம் தரிக்கிறான். அந்தப் பாகம் இவனிடம் வந்து சேருகிறது.

நான்காவதாக ப்ரம்ஹசாரீ ஸ்வாத்யாயமென்கிற வேதாத்யயனத்தைச் செய்து தன்னிடமுள்ள நான்காவது பாகத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளுகிறான்.

இவ்வாருக அக்கி, யமன், ஆசார்யன், ஆத்மா என்ற பூதங்களிலிருந்து முறையே, ஸமிதாதானம், பிக்ஷாசரணம், ஆசார்ய சுச்ரூஷை, வேதாத்யயனம் இவைகளைச் செய்து விடுபெற்றுப் பூர்ணனுகிருன்.

ஸ்நானம் செய்த பிறகு பிக்ஷை வாங்கக்கூடாது. ஸ்நானம் செய்து பிக்ஷாசரணம் செய்தால் இவன் செய்யும் பிக்ஷையானது இவனது ஜ்ஞாதிகளுடைய ஆஹாரத்திற்கும், பித்ருக்களுக்கும் மற்றக் கார்யங்களுக்கும் உபயோகமாகும். பிக்ஷை போட வேறு ஸ்த்ரீ கிடைக்காவிடில் தனது ஆசார்ய ஸ்த்ரீகளிடமும், அல்லது தனது தாயாரிடமும் பிக்ஷிக்கலாம். இப்படிச் செய்வதால் ஏழு க்ருஹத்தில் பிக்ஷை கிடைக்காத நிலைமை தாண்டிவிடும்.

பிக்ஷாசரணம் செய்யாவிட்டாலும், ஹோமம் செய்யாவிட்டாலும் ஏழு நாள் தாண்டினுல் அவகீர்ணிவ்ரதம் செய்யவும். மேற்கண்ட தர்மங்கள் யாவற்றையும் அறிந்து செய்கிறவனை எல்லா வேதங்களும் வந்து அடைகின்றன.

இதி வதுாயஃ வணுஃ ॥

இதி ஷிதீயொzஜ்யாயஃ ॥

நான்காவது கண்டம் முற்றிற்று.

முதல் ப்ரச்னத்தில் இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

சுய தூதீயொzஜ்யாயஃ ॥

சுய வஞஃ வணுஃ ॥

முதல் ப்ரஶ்னம்—மூன்ருவது அத்யாயம்.

ஐந்தாவது கண்டம்.

சுய ஷாதகஸ்ய ॥ க ॥

ப்ரம்ஹசாரியின் வ்ரதம் சொல்லப்பட்டது. இனி ஸ்நாதகனுடைய வ்ரதம் சொல்லப்படுகிறது.

வேத ஸ்நாதகன், வ்ரத ஸ்நாதகன், வேதவ்ரத ஸ்நாதகன் என்று மூன்றுவிதம் ஸ்நாதகர்கள் சாஸ்த்ரங்களில் கூறப்படுகிருர்கள். அவர்களுடைய தர்மம் சொல்லப்படுகிறது. ஸமாவர்த்தனமாகி வ்ரத ஸமாப்தியுமாகிவிட்டால் உடனேயே பார்யையை விவாஹம் செய்துகொள்ளவேண்டும். அநாச்ரமியாக இருக்கக்கூடாது என்

பது சாஸ்த்ர விதி. அப்படியிருக்க ஸ்நாதகனுக்குத் தனியாகத் தர்மங்கள் எப்படி ஸம்பவிக்கும். க்ருஹஸ்த தர்மங்கள் தானே அவனுக்குப் பொருந்தும்? ஆயினும் ஸமாவர்த்தனமான பிறகும் பார்யையை அடைய விக்நங்கள் ஏற்பட்டால், மறுபடி விவாஹம் ஏற்படும் வரையில் மத்ய காலத்தில் ஸ்நாதக தர்மம் அநுஷ்டிக்க அவகாசமிருக்கிறது. அநாச்ரமி தோஷம் அதுவரையில் ஏற்படுகிற தில்லையென்று இங்குப் பாஷ்யகாரர் கோவிந்தஸ்வாமி நிர்ணயித் திருக்கிறார்.

கஉுவ-ிாவஸ்ர௱ஹத்ரீயவாநு ॥ உ ॥

கடிஸூத்ரம், அதாவது உள்வஸ்த்ரம் (கௌபீநம்), மேல் உத்தரீயம் இரண்டையும் ஸ்நாதகனுகியவுடன் தரிக்கவேண்டும். ப்ரம்ஹசாரிக்கு ஏகவஸ்த்ரமே.

வெவணவம் உணம் யாரயெகஃ ॥ ந ॥

வேணு, அதாவது மூங்கில்மயமாகத் தண்டம் (கழியை) தரிக்கவும். அது கட்டைவிரல் அளவு பருமனும், சிரஸ்வரை நீள அளவும் உள்ளது (யஷ்டி).

ஸொாஉகஂ௦ வ கஊணுஶ௱ஹ் ॥ ச ॥

தீர்த்தத்துடன் கூடிய கிண்டியையும் தரிக்கவேண்டும்.

ஆியஜொவவீதீ ॥ ரு ॥

இரண்டு யக்ஞோபவீதம் தரித்தவனுக இருக்கவேண்டும்.

உஷ்ணீஷஜிநஉ௱ஹத்ரீயஉ௱வாநஹள ஃ௦ வளவாஸநஂ௦ உபெ-ிவ-மிண-ிஉாஸஸ ॥ கூ ॥

சிரஸ்ஸில் முண்டாசு, க்ருஷ்ணஜிநம், உத்தரீயம், காலில் பாத ரக்ஷை, குடை இவைகளையும் தரிக்கவும். இவனுக்கு ஔபாஸனம், தர்சபூர்ணமாஸ ஸ்தாலீபாகம் இவைகளும் உண்டு இவ்விரண்டும் விவாஹானந்தரம்.

வவ-ிஸ௱ வ கெஶஶ்ருஶ௱ரொஉநவவாவநஂ ॥ எ ॥

பர்வங்களில், தலைக்கேசம், முகத்திலுள்ள ரோமங்கள், குஹ்ய ப்ரதேசங்களிலுள்ளவைகளான லோமங்கள், நகங்கள் இவைகளை வபநம் செய்துகொள்ளவேண்டும். பர்வ என்ற காலம் ஸ்நாதக னுக்கு மட்டும்.

தஸ்ய வ்ருத்திஃ ॥ அ ॥

அந்த ஸ்நாதகனுக்கு ஜீவனோபாயமாக வ்ருத்தி சொல்லப் படுகிறது. இது க்ருஹஸ்தனுக்கு வற்றது. ஆசரிக்கத்தக்கது.

ப்ராஹ்மணராஜந்யவைஶ்யரதகாரேஷ்வாமம் ஹவிர்வேத ॥ கூ ॥

ஸ்நாதகன் பசி நிவ்ருத்திக்காக ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன், ரதகாரன் என்கிற ஜாதி இவர்களிடம் பக்வமாகாத த்ரவ்யத்தைப் பெறலாம்.

பைக்ஷம் வா ॥ கo ॥

அவை யில்லாவிட்டால் பலரிடமிருந்து பிக்ஷை பெறலாம்.

வாக்யதஸ்திஷ்டேத் ॥ கக ॥

மௌனத்துடன் இருக்கவும். அல்லது அவசியமான விஷயம் தவிர மற்றவைகளில் வாக் நியமத்துடனிருக்கவும்.

ஸர்வாணி சாஸ்ய தேவபித்ருஸம்யுக்தானி பாகயஜ்ஞ
ஸம்ஸ்தான்யாயுஷ்யக்ருதிகர்மாணி குர்வீத ॥ கஉ ॥

இவனுக்குத் தேவபித்ரு ஸம்பந்தமாயுள்ள கர்மாக்கள், பாக யக்ஞமென்கிற பஞ்சமஹாயக்ஞங்கள், ஆயுஸ் வ்ருத்திகராதிகளான மங்கள கர்மாக்களும் உண்டு. பிக்ஷாந்நத்தினால் செய்யவும்.

ஸதேந விதிநா ப்ரஜாபதே: பரமேஷ்டிந: பரம
ருஷய: பரமாம் காஷ்டாம் கச்சந்தீதி போதாயந: ॥ கங ॥

மேற்சொல்லிய ஸ்நாதக தர்ம விதியை அநுஷ்டிப்பதால் பரமருஷிகள் பரமேஷ்டியான ப்ரஜாபதியின் உத்க்ருஷ்ட நிலைமையை அடைவார்களென்று போதாயனர் கூறுகிறார்.

இங்கு ஸூத்ரத்தில் "போதாயந:" என்று சொல்லுவது ஸூத்ரகாரர் தம்மையே தாம் நிர்த்தேசிப்பதாகக் கூறலாம். அல்லது காண்வாயந போதாயனராக இருக்கலாம். போதாயனரின் ஆசார்யனும் போதாயனரென்ற பெயருள்ளவராயிருக்கலாம். அல்லது மனுசிஷ்யர் ப்ருகு மனுஸ்ம்ருதியைப் போல் போதாயன சிஷ்யர் இந்தத் தர்மஸூத்ரத்தை எழுதியிருக்கலாம். இத்யாதி ஸமாதானங்கள் பாஷ்யத்தில் காணப்படுகின்றன.

இதி பஞ்சம: கண்ட: ॥

இதி த்ருதீயோऽத்யாய: ॥

ஐந்தாவது கண்டம் முற்றிற்று.

முதல் ப்ரச்னத்தில் மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

அத² சதுர்தோ²(அ)த்⁴யாய꞉ ॥

அத² ஷஷ்ட²꞉ க²ண்ட³꞉ ॥

முதல் ப்ரஶ்னம்—நான்காவது அத்யாயம்.

ஆருவது கண்டம்.

அத² கமண்ட³லுசர்யோபதே³ஶம் வ்யாக்²யாஸ்யாம꞉ (வேத³விதா³꞉) ॥ ௧ ॥

க்ருஹஸ்தன் தீர்த்தம் நிறைந்த கமண்டுலுவை எப்போதும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டது. அந்தக் கமண்டலு ஸம்பந்தமான சில ஆசாரணங்கள் சுத்திமுதலியதை தர்மக்ஞர்கள் உபதேசிக்கிறூர்கள். அது இங்கே சொல்லப்படுகிறது.

ஆஜஸ்ய த³க்ஷிணே கர்ணே பாணௌ விப்ரஸ்ய த³க்ஷிணே । அப்ஸு சைவ குஶஸ்தம்பே³ பாவக꞉ பரிபட்²யதே ॥ தஸ்மாச்சௌசம் க்ருத்வா பாணினா பரிம்ருஜீத பர்யக்³நிகரணம் ஹி தத் । 'உத்³தீ³ப்யஸ்வ ஜாதவேத³' இதி பாத³ ஏதாம் அபி⁴ஶிஷ்யதே ॥ ௨ ॥

கமண்டலு பரிசுத்தமாயிருக்கவேண்டியது. அதற்கு அசுத்தி யேற்பட்டால் சுத்தி முறை இங்குச் சொல்லப்படுகிறது.

ஆட்டின் வலது காதிலும், ப்ராம்ஹணனின் வலது கையிலும், ஜலத்திலும், தர்ப்பஸ்தப்பத்திலும் அக்நியிருப்பதாக வேதத்தில் படிக்கப்படுகிறது. ஆகையால் கமண்டலுவுக்கு அசுத்தியேற்பட்டால் ப்ராம்ஹணன் தனது வலது கையால் துடைத்து, சுத்தியைச் செய்யவும். இதில் "உத்தீப்யஸ்வ" என்பது மந்த்ரம். இது பர்யக்நிகரண கர்மாவாக ஆகிறது (ஹவிஸ்ஸைச்சுற்றி அக்நியைச் சுற்றுவது பர்யக்நிகரணம்). இது கமண்டலுவுக்கு மறுபடி அக்நியில் போட்டுச் சுத்தி செய்வதைவிட ச்ரேஷ்டமான சுத்தி.

அத²வா கிஞ்சித³ஸம்ஸ்ப்ருஷ்டம் மனஸி மன்யதே த³ர்பே⁴ண த்ருணேன வா ப்ரஜ்வால்ய ப்ரத³க்ஷிணம் பரி த³ஹேத் ॥ ௩ ॥

அதிலும், கொஞ்சம் அசுசி ஸம்பந்தம் இருப்பதாக மனஸில் நினைத்தாலுகில், தர்ப்பத்தினுலாவது, புல் த்ருணத்தினுலாவது அக்நியை ஜ்வலிக்கச் செய்து, கமண்டலுவைச்சுற்றி ப்ரதக்ஷிணமாகக் கொளுத்தவும்.

அத ஊர்த்⁴வம் ஶ்வவாயஸப்ரப்⁴ருத்யுபஹதாநாமக்³நிவர்ண இத்யுபதி³ஶந்தி ॥ ௪ ॥

நாய், காக்கை முதலியவைகளால் கமண்டலு அசுத்தமாகிவிட்டால், கீழே சொல்லிய சுத்தி செய்ததின் மேல், நெருப்பில் போட்டு, நெருப்பு வர்ணம் ஏற்படும்படி செய்யவேண்டுமென்று சிஷ்டர்கள் உபதேசிக்கிறார்கள்.

மூத்ரபுரீஷலோஹிதரேத꞉ப்ரப்⁴ருத்யுபஹதாநாமுத்ஸர்க³꞉ ॥ ௫ ॥

மூத்ரம், மலம், ரக்தம், ரேதஸ் முதலியவையால் அசுத்தமாகி விட்ட கமண்டலுக்களை த்யாகம் செய்துவிடவேண்டும். சுத்தி இல்லை.

பி⁴ந்நே கமண்ட³லௌ வ்யாஹ்ருதீபி⁴꞉ ஶதம் ஜுஹுயாத் ॥ ௬ ॥

கமண்டலு உடைந்து போய்விட்டால், வ்யாஹ்ருதிமந்த்ரங்களால் நூறுதரம் ஆஜ்யஹோமம் செய்யவும்.

ஜபேத்³வா ॥ ௭ ॥

அல்லது வ்யாஹ்ருதி மந்த்ரங்களை நூறு தடவை ஜபிக்கவும்.

'பூ⁴மிர்பூ⁴மிமகா³ந்மாதா மாதரமப்யகா³த் । பூ⁴யாஸ்ம புத்ரை꞉ பஶுபி⁴ர்யோ நோ த்³வேஷ்டி ஸ பி⁴த்³யதாம் ॥' இதி கபாலாநி ஸம்ஹ்ருத்யாப்ஸு ப்ரக்ஷிப்ய ஸாவித்ரீம் த³ஶாவராம் க்ருத்வா புநரேவாந்யம் க்³ருஹ்ணீயாத் ॥ ௮ ॥

உடைந்த கமண்டலுவின் கபாலங்களை (சல்லிகளை) ஒன்று சேர்த்து, ஸூத்ரத்தில் சொல்லிய மந்த்ரத்தால் ஜலத்தில் போட்டு விட்டு, பத்துத்தடவைக்குக் குறையாமல் காயத்ரீ ஜபம் செய்து விட்டு, மறுபடியும் வேறு கமண்டலுவை க்ரஹித்துக் கொள்ளவும்.

வாருணமாஶ்ரித்ய 'யத்தே வாருண வருணைவ த மாமோம்' இத்யக்ஷரம் த்⁴யாயேத் ॥ ௯ ॥

பிறகு வருண தேவதையை த்யானித்து, ஸூத்ரத்திலுள்ள மந்த்ரத்தைச் சொல்லி, ஓம் என்ற அக்ஷரத்தை த்யானிக்கவும்.

ஶூத்³ராது³த்³ருத்ய ஶதம் குர்யாத் வைஶ்யாத³ர்த⁴ஶதம் ஸ்ம்ருதம் । க்ஷத்ரியாத் பஞ்சவிம்ஶத்து ப்³ராஹ்மணாத்³த³ஶ கீர்திதா꞉ ॥ ௧௦ ॥

கமண்டலுவைச் சூத்ரனிடம் வாங்கினுல் நூறு காயத்ரியை ஜபிக்கவும். வைச்யனிடம் வாங்கினுல் ஐம்பதும், க்ஷத்ரியனிடம் வாங்கினுல் இருபத்தைந்தும், ப்ராம்ஹணனிடம் வாங்கினுல் பத்தும் ஜபிக்கவும். இது ப்ரதிக்ரஹித்ததற்காக ப்ராயஶ்சித்தம்.

𑌸𑌾𑌯𑌮𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌉𑌦𑌕𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌨 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌦𑌿𑌤𑌿
𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 ॥ ௧௧ ॥

கமண்டலுவில் தீர்த்தம் க்ரஹிப்பதை ஸூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு செய்யலாமா, கூடாதா என்று வேதமறிந்தவர்கள் விசாரம் செய்கிருர்கள். கூடாதென்று சிலர். ஸூர்யனில்லாத காலத்தில் ஜலம் சுத்தமன்று என்று சாஸ்த்ரமிருப்பதால்.

𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌪𑌰𑌮𑍍 ॥ ௧௨ ॥

ராத்ரியிலும் க்ரஹிக்கலாமென்பது மற்ருெரு ஸித்தாந்தம்.

𑌯𑌾𑌵𑌦𑍁𑌦𑌕𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌤𑍍 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌯𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 ॥ ௧௩ ॥

கமண்டலுவில் தீர்த்தத்தை க்ரஹிக்கும்போது அது பூர்ணமாகும் வரை ப்ராணனை அடக்கிக்கொண்டு க்ரஹிக்கவும். இது பரிஹாரம்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌹𑌿 𑌵𑍈 𑌹𑍍𑌯𑍁𑌦𑌕𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 ॥ ௧௪ ॥

ப்ராணுயாமத்தினுல் வாயு அதிகரித்து, வாயுவால் அக்நியும் சரீரத்தில் வ்ருத்தியாவதால், அக்நியே தீர்த்தத்தை க்ரஹிப்பதாக ஆகிறது. ஆகையால் ராத்ரியாயிருந்தாலும் ப்ராணுயாம பூர்வமாக க்ரஹிக்கலாம்.

𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍂𑌦𑌕𑍇𑌨𑌾𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌃 𑌯𑌾𑌵𑌦𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌂
𑌤𑌾𑌵𑌦𑌶𑍁𑌚𑌿𑌃 𑌪𑌰𑍇𑌷𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 𑌪𑍂𑌤𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿
𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌤𑍇𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 ॥ ௧௫ ॥

கமண்டலு ஜலத்தால், கை கால்களை அலம்பினுல், அந்த ஜலம் ஈரம் இருக்கும்வரை அசுத்தியுண்டு. பிறர் விஷயத்தில். இவன் மாத்திரம் தன்னைப் பரிசுத்தனுக்கிக் கொள்ளுகிருன். மேலும் கமண்டலு ஜலத்தால் வேறு கர்மாக்களைச் செய்யக்கூடாதென்றும் அறியப்படுகிறது.

𑌅𑌪𑌿 𑌵𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑍌𑌚𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌿 𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌸 𑌶𑍁𑌚𑍀𑌨𑍀𑌤𑌿 𑌬𑍋
𑌧𑌾𑌯𑌨𑌃 ॥ ௧௬ ॥

கமண்டலு ஜலத்தால் நனைந்த கால் கை ஈரம் உலரும் வரை அசுத்தியென்ற விஷயத்தில், வேறு ஜலத்தால் மணிக்கட்டுவரையில் அலம்பி, மாற்றுச் சௌசம் செய்துகொண்டால் சுத்தியென்று போதாயனர் கூறுவார். கமண்டலுஜலம் ஸம்பந்தப்பட்ட இடத்தை வேறு ஜலத்தால் ப்ரதி சுத்தி செய்துகொண்டால் சுத்தி யேற்படும்.

𑌇𑌤𑌿 𑌷𑌷𑍍𑌠𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

ஆருவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

ஏழாவது கண்டம்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿—

𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍌𑌚𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑌾 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌮𑍁𑌨𑌿𑌸𑌙𑍍𑌘𑍈(𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍈)𑌶𑍍𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌂 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍
𑌸𑌦𑌾 ॥ 𑌤𑌤𑌶𑍍𑌶𑍌𑌚𑌂 𑌤𑌤𑌃 𑌪𑌾𑌨𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌮𑍇𑌵 𑌚 ।
𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌙𑍍𑌕𑍇𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯 𑌇𑌚𑍍𑌛𑍇𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 ॥ ௧ ॥

கமண்டலு விஷயமாக, சிஷ்டர்கள் சொல்லுகிறார்கள்:— "த்விஜர்களுக்குக் கமண்டலுவானது சுத்யர்த்தமாக ப்ரம்ஹாவி னாலும், முனிவர்களாலும் முன்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் அதை எப்போதும் தரிக்கவும். அதிலுள்ள தீர்த்தத் தால் சுத்தியையும் தீர்த்தபானம், ஸந்த்யோபாஸனம் இவைகளை யும், தனக்கு ச்ரேயஸ்ஸை விரும்புகிறவன் நிஸ்ஸந்தேகமாகச் செய் யவும்" என்று.

𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍌𑌚𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌨 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌦𑍂𑌷𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃
𑌯𑌃 । 𑌸𑌹 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌨𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍𑌭𑍂𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑌮𑌣𑍍𑌡
𑌲𑍁𑌨𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

ஸ்வயம்பூவான ப்ரம்ஹா கமண்டலுவுடனேயே பிறந்தார். ஆகையால் கமண்டலு தீர்த்தத்தால், முன் சொன்னவைகளைச் செய்யவும். சுத்தமான மனதுடன், மனதைக் கலக்கிக்கொள்ளாமல் சாஸ்த்ரவஶ்யன் அதைச் செய்யவும்.

உ௵த்ரபுரீஷெ கமண்டலு ஹஸ்தோ ஹ்ருஹ்ணாதி ஸவ்யே ஆசமனீயம் ॥ ௩ ॥

மூத்ர புரீஷ உத்ஸர்க்க காலத்தில் கமண்டலுவை வலது கையில் வைத்துக் கொள்ளவும். ஆசமநம் செய்யும்போது இடது கையில் தரிக்கவும்.

ஏவம் ஹி ஸித்யதி ஸாதுநாம் ॥ ௪ ॥

நிஸ்ஸங்கமாகக் கமண்டலு கார்யங்களைச் செய்யும் ஸாது விற்குக் கமண்டலு விஷயமாகச் சொன்ன தர்மம் ஸித்திக்கும்.

யதா ஹி ஸோமஸம்யோகாத் சமஸோ மேத்ய உச்யதே ।
அபாம் ததைவ ஸம்யோகாந் நித்யோ மேத்ய: கமண்டலு: ॥

யாகத்தில் ஸோமரஸ ஸம்பந்தத்தால், சமஸ பாத்ரமானது எப்படிப் பரிசுத்தமாகிறதென்று சொல்லப்பட்டதோ, அதுபோல் தீர்த்த ஸம்பந்தத்தால் கமண்டலுவானது நித்யம் பரிசுத்தமான தாகச் சொல்லப்படுகிறது.

பித்ருதேவாக்நிகார்யேஷு தஸ்மாத் தம் பரிவர்ஜயேத் ॥ ௬ ॥

பித்ரு, தேவ, அக்நி கார்யங்களில் கமண்டலு தீர்த்தத்தை உபயோகிக்கக்கூடாது. விலக்கவும். ஆசமநாதி புருஷ சுத்திக் காக ஏற்பட்டது.

தஸ்மாத் விநா கமண்டலுநா நாத்வாநம் வ்ரஜேத் ந ஸீமாந்தம் ந க்ருஹாத் க்ருஹம் ॥ ௭ ॥

கமண்டலு சுத்திகரமாயிருப்பதால் கமண்டலுவைத் தரிக்கா மல் வழி நடக்கக்கூடாது. க்ராம நகர எல்லையைத் தாண்டக் கூடாது. ஒரு க்ருஹத்திலிருந்து மற்றொரு க்ருஹத்திற்கும் போகக்கூடாது.

பதமபி ந கச்சேத் இஷுமாத்ராதித்யேகே ॥ ௮ ॥
யதேச்சேத் தர்மஸந்ததிமிதி போதாயந: ॥ ௯ ॥

ஒரு அடிகூட கமண்டலு இல்லாமல் போகக்கூடாது. அம்பு விழும் அளவுள்ளவரையில் என்று சிலர் கூறுகிறார்கள். தர்ம வ்ருத்தியை இச்சிப்பவன் மேற்கண்டவாறு இருக்கவேண்டு மென்றே போதாயனர் நினைக்கிறார்.

அக்நியத்யாக்நியாதாநம் ப்ரபத்யதி ॥ ௧௦ ॥

ருக்விதானம் என்ற ப்ராம்ஹண வாக்யமானது இந்தக் கமண்டலு தாரண விஷயத்தில் ருக் (வேத வாக்யம்) கூட இருக்கிறதென்று சொல்லுகிறது.

𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஏழாவது கண்டம் முற்றிற்று.

முதல் ப்ரச்னத்தில் நான்காவது அத்யாயம் முற்றிற்று.

𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥𑌾𑌷𑍍𑌟𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

முதல் ப்ரஶ்னம்—ஐந்தாவது அத்யாயம்

எட்டாவது கண்டம்.

𑌅𑌥𑌾𑌤𑌶𑍍𑌶𑍌𑌚𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 ॥ ௧ ॥

இனி சுத்திகாரணம் சொல்லப்படுகிறது.

𑌅𑌦𑍍𑌭𑌿𑌶𑍍𑌶𑍁𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌗𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ।
𑌅𑌹𑌿𑌂𑌸𑌯𑌾 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌮𑌨𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 𑌇𑌤𑌿 ॥

சரீராவயவங்கள் ஜலத்தால் சுத்தமாகின்றன. புத்தி, அந்தராத்மா ஜ்ஞாநத்தால் சுத்தியடைகிறது. அஹிம்ஸையால் பூதாத்மா சுத்தமாகிறது. மனஸ் ஸத்யத்தால் சுத்தமாகிறது. பூதாத்மா என்பது கார்யகர்த்தா. மனஸ் என்பது ஸங்கல்ப விகல்பாத்மகம்.

𑌮𑌨𑌶𑍍𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌶𑍌𑌚𑌮𑍍 ॥ ௨ ॥

ஸத்யத்தாலும், ஞானத்தாலும் சொல்லப்பட்ட மனச் (புத்தி) சுத்தியானது உள் இந்த்ரிய சுத்தியாகும்.

𑌬𑌹𑌿𑌶𑍍𑌶𑍌𑌚𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃 ॥ ௩ ॥

இனி வெளி இந்த்ரிய சுத்திமுறையை விவரிப்போம்.

𑌕𑍌𑌶𑌂 𑌸𑍌𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑍃𑌦𑍍 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌮𑌾
𑌨𑌾𑌭𑍇𑌃 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌬𑌾𑌹𑍁𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌸𑌵𑍍𑌯𑍇𑌽𑌵𑌧𑌾𑌯
𑌶𑌿𑌰𑍋𑌽𑌵𑌦𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௫ ॥

யஜ்ஞோபவீதம் சொல்லப்படுகிறது. குசத்தினலோ, பஞ்சு

ஸூத்ரத்தாலோ செய்யப்பட்டது யஜ்ஞோபவீதம். அது மூன்று முப்புரியுள்ளதாயிருக்கவேண்டும். கொப்பூழ் வரையில் தொங்க வேண்டும். வலது கையை உயரத் தூக்கியும், இடது கையைக் கீழே தரித்தும் யஜ்ஞோபவீத ஸூத்ரத்தைச் சிரஸ் வழியாகப் போட்டுக் கொள்ளவும்.

விபரீதம் பித்ருப்ய: ॥ ௬ ॥

இடது கையை உயர்த்தி, வலது கையைத் தாழ்த்தி யக்ஞோபவீதம் தரிப்பது பித்ருக்களுக்கு ஏற்றது. (இதை ப்ராசீனாவீதம் என்பார்கள்.) பித்ருகர்மாக்களுக்கு இது.

கண்டே(அ)வஸக்தம் நிவீதம் ॥ ௭ ॥

கழுத்தில் மாத்திரம் தொங்கும்படி தரிப்பது நிவீதமெனப் படும். இது மனுஷ்ய கார்யங்களுக்கு ஏற்றது.

அதோ(அ)வஸக்தமதோவீதம் ॥ ௮ ॥

நாபிக்குக் கீழாக இடுப்பில் சுற்றிக்கொள்வது "அதோவீதம்" என்று சொல்லப்படும். எண்ணெய், அரைப்பு தேய்த்து ஸ்நானம் செய்வதுபோன்ற மநுஷ்ய கார்யங்களில் இது ஏற்றது.

(இம்மாதிரி இடுப்பில் சுற்றுவதைச் சில ஸ்ம்ருதிகள் கண்டிக்கின்றன. ஆதலால் இது சிஷ்டாசாரத்தில் வரவில்லை)

ப்ராங்முக உதங்முகோ வாஸீன: ஶௌசமாரபேத ஶுசௌ தேஶே தக்ஷிணம் பாஹும் ஜாந்வந்தரா க்ருத்வா ப்ரக்ஷால்ய பாதௌ பாணீ சாமணிபந்தாத் ॥ ௯ ॥

கிழக்கு முகமாகவாவது, வடக்கு முகமாகவாவது உட்கார்ந்து ஆசமநம் செய்ய ஆரம்பிக்கவும். பரிசுத்தமான இடத்தில் வலது கையை இரண்டு முழங்கால்களுக்கும் நடுவில் வைத்துக்கொண்டு செய்யவும். முன்னால் கால்களை ப்ரக்ஷாளனம் செய்தும், கைகளையும் மணிக்கட்டு வரையில் அலம்பிக்கொள்ளவும்.

பாதப்ரக்ஷாலனோச்சேஷணேன நாசாமேத் । யத்யாசாமேத் பூமௌ ஸ்ராவயித்வாசாமேத் ॥ ௧௦ ॥

கால் அலம்பிய தீர்த்த சேஷத்தால் ஆசமநம் செய்யக்கூடாது. ஆசமனம் செய்ய நேர்ந்தால் அந்த ஜலத்தைப் பூமியில் சிறிது கொட்டிவிட்டுப் பாக்கியால் ஆசமநம் செய்யலாம்.

ப்ராஹ்மேண தீர்த்தேநாசாமேத் ॥ ௧௧ ॥

உள்ளங்கையிலுள்ள ப்ராம்ஹ தீர்த்தமென்கிற வழியாக ஆசமனம் செய்யவும்.

அங்குஷ்டமூலம் ப்ராஹ்மம் தீர்த்தம் ॥ ௧௨ ॥

உள்ளங்கையில் கட்டைவிரலின் மூலஸ்தானமானது ப்ராம்ஹ தீர்த்தமென்று சொல்லப்படுகிறது. அந்தக் கட்டைவிரல் மூலம் வழியாக ஆசமன ஜலம் வழியும்படி செய்து ஆசமனம் செய்யவும்.

அங்குஷ்டாக்ரம் பித்ர்யம், அங்குல்யக்ரம் தைவம், அங்குலி மூலமார்ஷம் ॥ ௧௩ ॥

கட்டைவிரலின் நுனி பித்ரு தீர்த்தம். பித்ருகார்ய தர்ப்பணாதிகளில் கட்டைவிரல் நுனி வழியாகத் தீர்த்தம் விடவும். மற்ற விரல்களுடைய நுனிப்பாகம் தைவதீர்த்தம். தேவகார்யங்களில் விரல்களின் நுனி வழியாகத் தீர்த்தம் விடவும். விரல்களின் மூலமானது ருஷிதீர்த்தம். ருஷிகளைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணாதி தீர்த்தம் விரல்களின் மூலம் (அடிப்பாகம்) வழியாக விடவேண்டும்.

நாங்குலீபி:, ந ஸபுத்புதாபி:, ந ஸபேநாபி:, நோஷ்ணாபி:, ந க்ஷாராபி:, ந லவணாபி:, ந கடுகாபி:, ந கலுஷாபி:, ந விவர்ணாபி:, ந துர்கந்தரஸாபி: ॥

விரல்களில் வழிந்த தீர்த்தத்தால் ஆசமநம் செய்யக்கூடாது. கொப்புளமுள்ள ஜலத்தினாலும், நுரையுள்ளதாலும், உஷ்ணமாயிருப்பதாலும், காரமுள்ளதாலும், உப்பு உள்ளதாலும், கடுப்பு உள்ளதாலும், கலங்கியதாலும், நிறம் மாறியுள்ளதாலும், துர்க்கந்தம், கெட்ட ருசியுள்ளதாலும் ஆசமனம் செய்யக்கூடாது.

ந ஹஸந் ந ஜல்பந் ந திஷ்டந் ந விலோகயந் ந ப்ரஹ்வ: ந ப்ரணத: ந முக்தஶிக: ந ப்ராவ்ருதகண்ட: ந வேஷ்டிதஶிரா: ந த்வரமாண: நாயஜ்ஞோபவீதீ ந ப்ரஸாரிதபாத: நாபத்தகக்ஷ்ய: நபஹிர்ஜாநு: ஶப்தமகுர்வந் த்ரிராபோ ஹ்ருதயங்கமா: பிபேத் ॥ ௧௫ ॥

சிரித்துக்கொண்டும், பேசிக்கொண்டும், நின்றுகொண்டும், அங்குமிங்கும் பார்த்துக்கொண்டும், குனிந்துகொண்டும், தலையைத்

தொங்கவிட்டும், சிகையை அவிழ்த்துக்கொண்டும், கழுத்தை மறைத்துக்கொண்டும், சிரஸ்ஸை மூடிக்கொண்டும், வேகமாயும், யக்ஞோபவீதியாயில்லாமலும், கால்களை நீட்டிக்கொண்டும், ஆஸனம் போட்டுக்கொள்ளாமலும், அல்லது கச்சம் கட்டாமலும், முழங்காலுக்கு வெளியிலுமாகவும் ஆசமனம் செய்யக்கூடாது. சப்தமில்லாமல் மூன்றுதடவை தீர்த்தத்தைப் பானம் செய்யவும். அந்தத் தீர்த்தம் ஹ்ருதயம் வரையில் போகக்கூடிய அளவுள்ளதாயிருக்கவேண்டும்.

த்ரி: பரிம்ருஜேத் த்விரித்யேகே ॥ ௧௬ ॥

ஆசமனம் செய்தவுடன் மூன்றுதடவை வாய் மேல்பக்கத்தைத் துடைத்துக்கொள்ளவும் இரண்டுதடவையென்று சிலர்.

ஸக்ருதுபயம் ஸ்த்ரீஶூத்ரயோஶ்ச ॥ ௧௭ ॥

ப்ராம்ஹணரல்லாதி ஸ்த்ரீகளுக்கும், சூத்ர ஜாதியாருக்கும் ஆசமனம், துடைத்தல் ஆகிய இரண்டும் ஒரு தடவைதான்.

அதாப்யுதாஹரந்தி—

கதாபிர்ஹ்ருதயம் விப்ர: கண்ட்யாபி: க்ஷத்ரிய: ஶுசி: ।
வைஶ்யோத்பி: ப்ராஶிதாபிஸ்யாத் ஸ்த்ரீஶூத்ரௌ ஸ்ப்ருஶ்ய சாந்தத: ॥ இதி ॥ ௧௮ ॥

ஆசமன விஷயமாகப் பெரியோர் சொல்லுகிறார்கள். ப்ராம்ஹணன் ஆசமனதீர்த்தம் ஹ்ருதயம் வரையில் செல்லுவதால் சுத்தனாகிறான். க்ஷத்ரியன் கழுத்து வரையிலும், வைச்யன் ப்ராஶநம் செய்த மாத்ரத்தாலும், ஸ்த்ரீ சூத்ரர்கள் (வாயில்) ஜலம் பட்ட மாத்ரத்தாலும் சுத்தர்களாகிறார்கள் என்று.

தந்தவத்தந்தஸக்தேஷு தந்தவத்தேஷு தாரணா । ஸ்ரஸ்தேஷு தேஷு நாசாமேத் தேஷாம் ஸம்ஸ்ராவவச்சுசி: ॥ இதி ॥ ௧௯ ॥

தந்தத்தில் ஸம்பந்தப்பட்ட ஆசமந தீர்த்தங்களுக்குத் தந்த விஷயத்தில்போல் நியமம். அந்த ஆசமன தீர்த்தம் பற்களில் ஸம்பந்தபட்டபின் ஸ்ரவித்து வெளிவந்தாலும் அதற்கான சுத்யர்த்த ஆசமனமும் வேண்டியதில்லை. வாய் ஜலம் ஸ்ரவித்தால் எப்படிச் சுத்தியோ அப்படியே இந்த ஆசமந தீர்த்த ஸ்ராவத்திலும் (வழிதலிலும்) சுத்தி.

அதாப்யுதாஹரந்தி—

தந்தவத் தந்தஸக்தேஷு யச்சாப்யந்தர்முகே பவேத் | ஆசா-
ந்தஸ்யாவஶிஷ்டம் ஸ்யாத் நிகிரந்நேவ தச்சுசி: || இதி ||

தந்தங்களில் ஸம்பந்தப்பட்டவைகளிலும் வாய்க்குள் தங்கி விட்டதாகவும் உள்ள ஆசமந சேஷத்தை விழுங்கி விட்டால் சுத்தி ஏற்படுகிறது.

கான்யத்பிஸ்ஸம்ஸ்ப்ருஶ்ய பாதௌ நாபிம் ஶிரஸ்ஸவ்யம் பாணிமந்தத: ||

ஆசமன தீர்த்த ப்ராசனத்திற்குப் பிறகு கண் முதலிய இந்த்ரியங்களை ஜலத்தால் தொட்டு, பிறகு கால்கள், நாபி, சிரஸ், கடைசியாக இடது கையையும் தொடவும். (இதில் விரல்களின் நியமத்தை ஸ்ம்ருதிகளில் காண்க)

தைஜஸம் சேதுபாதாயோச்சிஷ்டீ ஸ்யாத் ததுதஸ்யாசம்யா-
தாஸ்யந் அத்பி: ப்ரோக்ஷேத் || ௨௨ ||

கையில் லோஹாதி தைஜஸ பாத்ரங்களை வைத்துக்கொண்டிருக்கும்போது உச்சிஷ்டியாக (அசுசியாக) ஆகிவிட்டால், அந்தப் பாத்ரத்தைப் போட்டுவிட்டு ஆசமனம் செய்யவும். மறுபடி அந்தப் பாத்ரத்தை எடுக்க விரும்பினால் தீர்த்தத்தால் அதை ப்ரோக்ஷிக்கவும்.

அத சேதந்நேநோச்சிஷ்டீ ஸ்யாத் ததுதஸ்யாऽऽசம்யாऽऽதா-
ஸ்யந் அத்பி: ப்ரோக்ஷேத் || ௨௩ ||

தைஜஸ பாத்ரம் போல் கையில் அந்நமிருக்கையில் ஏதாவது காரணத்தால் உச்சிஷ்டியாகிவிட்டால், அந்த அந்நத்தை எறிந்துவிட்டு ஆசமநம் செய்யவும். அதை எடுத்துக்கொள்ள விரும்பினால் தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்கவும்.

அத சேதத்பிருச்சிஷ்டீ ஸ்யாத் ததுதஸ்யாऽऽசம்யாऽऽதா-
ஸ்யந் அத்பி: ப்ரோக்ஷேத் || ௨௪ ||

ஏததேவ விபரீதமமத்ரே || ௨௫ ||

தீர்த்தம் கையில் இருக்கும்போது அசுத்தனாகிவிட்டால் முன் ஸூத்ரத்தில் சொல்லியது போல் செய்யவும். ஆனால் மண் பாத்ர விஷயத்தில் விபரீதம். அதாவது அதை எறிந்துவிடவேண்டியதே. மறுபடி க்ரஹிக்கக்கூடாது.

வாநஸ்பத்யே விகல்ப: ॥ ௨௬ ॥

மரங்கள் ஸம்பந்தமான பாத்ரமாயிருந்தால் விகல்பம். அதாவது எறிந்துவிடலாம். அல்லது மறுபடி விரும்பினுல் க்ரஹிக்கலாம் என்று.

தைஜஸாநாமுச்சிஷ்டாநாம் கோஶக்ருந்ம்ருத்பஸ்மபி: பரிமார்ஜநமந்யதமேந வா ॥ ௨௭ ॥

லோஹ பாத்ரங்கள் உச்சிஷ்டங்களாகிவிட்டால் (அசுத்தம்) அவைகளைப் பசுஞ்சாணி, மண், சாம்பல் இவைகளால் தேய்த்துச் சுத்தி செய்யவும். ஜலமும் கலந்து. அல்லது மேற்கண்ட த்ரவ்யங்கள் ஏதாவதொன்றினுலும் சுத்தி செய்யலாம்.

தாம்ரரஜதஸுவர்ணாநாமம்லை: ॥ ௨௮ ॥

தாம்ரம், வெள்ளி, தங்கம் ஆகிய தைஜஸ பாத்ரங்களுக்குப் புளியால் சுத்தி, லேபம் ஏற்பட்டிருந்தால். இல்லையேல் தீர்த்தமே சுத்திகரம்.

ம்ருந்மயாநாம் தஹநம் ॥ ௨௯ ॥

மண்மயமான பாத்ரங்களுக்கு அசுத்தியேற்பட்டால் நெருப்பில் காய்ச்சுவது சுத்தி.

தாரவாணாம் தக்ஷணம் ॥ ௩௦ ॥

மரங்களால் செய்த பாத்ரங்களுக்கு அசுத்தியேற்பட்டால் உளியால் செதுக்குவது சுத்தி.

வைணவாநாம் கோமயேந ॥ ௩௧ ॥

மூங்கிலால் செய்யப்பட்ட பாத்ரங்களுக்கு கோமயத்தால் சுத்தி.

பலமயாநாம் கோவாலரஜ்ஜ்வா ॥ ௩௨ ॥

பில்வம், தேங்காய் முதலிய பழங்களுக்கு அசுத்தியேற்பட்டால் பசுவின் வால் ரோமத்தால் துடைத்துச் சுத்தி செய்யவும்.

க்ருஷ்ணாஜிநாநாம் பில்வதண்டுலை: ॥ ௩௩ ॥

க்ருஷ்ணாஜிநத்திற்கு அசுத்தியேற்பட்டால், பில்வ அரிசி மாவினுல் லேபநம்செய்து சுத்தி பண்ணவும்.

குதபாநாமரிஷ்டை: ॥ ௩௪ ॥

ஆட்டு ரோமத்தால் நிர்மிதமான கம்பளங்களுக்குப் பூயமென்கிற வ்ருக்ஷ பலத்தால் சுத்தி.

𑌔𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇𑌨 ॥ ௩௫ ॥

செம்மறி முதலிய ஆட்டுரோம கம்பளங்களுக்கு ஸூர்யனால் (வெய்யிலினால்) சுத்தி.

𑌕𑍍𑌷𑍌𑌮𑌾𑌣𑌾𑌂 𑌗𑍌𑌰𑌸𑌰𑍍𑌷𑌪𑌕𑌲𑍍𑌕𑍇𑌨 ॥ ௩௬ ॥

க்ஷௌமம் என்கிற வெண்பட்டுகளுக்கு வெண்கடுகு மெழுகினால் சுத்தி.

𑌮𑍃𑌦𑌾 𑌚𑍈𑌲𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ ௩௭ ॥

பஞ்சினால் செய்யப்பட்ட வஸ்த்ரங்களுக்கு அசுத்தியேற்பட்டால் செவிட்டு மண்ணால் சுத்தி.

𑌚𑍈𑌲𑌵𑌚𑍍𑌚𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 ॥ ௩௮ ॥

தோல்களால் செய்யப்பட்ட வஸ்துக்களுக்கும் மேற்சொன்ன வஸ்த்ர சுத்திபோல் மண்ணால் சுத்தி.

𑌤𑍈𑌜𑌸𑌵𑌦𑍁𑌪𑌲𑌮𑌣𑍀𑌨𑌾𑌮𑍍 ॥ ௩௯ ॥

கற்களுக்கும், மணிகளுக்கும், தைஜஸங்களுக்குப்போல் சுத்தி, கோமயாதிகளால்.

𑌦𑌾𑌰𑍁𑌵𑌦𑌸𑍍𑌥𑍍𑌨𑌾𑌮𑍍 ॥ ௪0 ॥

எலும்புப் பதார்த்தங்களுக்கு மரத்தைப்போன்ற சுத்தி, உளியால் செதுக்குவது.

𑌕𑍍𑌷𑍌𑌮𑌵𑌚𑍍𑌛𑌙𑍍𑌖𑌶𑍃𑌙𑍍𑌗𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌦𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ ௪௧ ॥

சங்கு, கொம்பினால் செய்யப்பட்டவை, சிப்பி, யானைத்தந்தம் போன்றவை இவைகளுக்கு க்ஷௌமத்திற்குச் சொல்லியது போல் சுத்தி. (வெண் கடுகு).

𑌪𑌯𑌸𑌾 𑌵𑌾 ॥ ௪௨ ॥

பாலாலும் மேற்கண்ட வஸ்துக்களைச் சுத்தி செய்யலாம் (அலம்புதல்).

𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌾𑌸𑍃𑌕𑍍
𑌶𑍁𑌕𑍍𑌰𑌕𑍁𑌣𑌪𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌯𑌤𑌮𑍇𑌨
𑌤𑍍𑌰𑌿𑌃𑌸𑌪𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 ॥ ௪௩ ॥

மேற்சொன்ன தைஜஸ பாத்ரங்களுக்கு, மூத்ர, புரீஷ, ரக்த, ரேதஸ், சவம் இவைகளின் ஸம்பந்தமேற்பட்டிருப்பதாய், கண்ணாலோ, மூக்கின் உதவியாலோ தெரிந்து கொண்டால், முன்சொன்ன கோமயாதி சுத்தி த்ரவ்யங்களுள் ஏதாவது ஒன்றினால் 21 தடவை தேய்த்துச் சுத்தி செய்யவும். ஜலத்துடன் சேர்த்து.

அதைஜஸாநாமேவம்பூதாநாமுத்ஸர்க: ॥ ௪௪ ॥

லோஹ பாத்ரமல்லாத மண் முதலிய பாத்ரங்களுக்கு மேற்சொன்ன மூத்ராதி ஸ்பர்ச தோஷம் நேர்ந்தால் அவைகளை த்யஜித்துவிட வேண்டியதே.

வசநாத்யஜ்ஞே சமஸபாத்ராணாம் ॥ ௪௫ ॥

யாகத்தில் ஸோமபானம் செய்ய உபயோகிக்கப்படும் சமஸம் என்ற மரப் பாத்ரங்களுக்கு உச்சிஷ்டாதி தோஷங்கள் கிடையாதென்று சாஸ்த்ர வசனமிருப்பதால் அவைகளுக்குச் சுத்தி வேண்டியதில்லை த்யாகமும் இல்லை. ஆனால் அவைகளுக்கும் மூத்ராதி ஸ்பர்ச தோஷம் நேர்ந்தால் த்யாகமே.

ந ஸோமேநோச்சிஷ்டா பவந்தீதி ஹி ச்ருதி: ॥ ௪௬ ॥

"ஸோமரஸத்தால் ஸம்பந்தப்பட்ட ருத்விக்குகளோ, ஸோமரஸமோ, சமஸ பாத்ரங்களோ, மற்ற எதுவுமோ, உச்சிஷ்டமாகிறதில்லை" யென்று ச்ருதி கூறுகிறது.

காலோ(அ)க்நிர்மநஸ: சுத்திருதகாத்யுபலேபநம் ।
அவிஜ்ஞாதம் ச பூதாநாம் ஷட்விதம் சௌசமுச்யதே ॥ இதி ॥

காலம், அக்னி, மனஸ்சுத்தி, ஜலம் முதலியது, மெழுகுதல், தேய்த்தல், தோஷமென்று அறியாமல் செய்தது ஆக ஆறுவித சௌசம் ப்ராணிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசௌசாதிகளுக்குக் காலத்தால் சுத்தி. மனஸ்துஷ்டியும் சுத்திஹேது.

அதாப்யுதாஹரந்தி —

காலம் தேசம் ததா(அ)த்மாநம் த்ரவ்யம் த்ரவ்யப்ரயோஜநம் ।
உபபத்திமவஸ்தாம் ச விஜ்ஞாய சௌசம் சௌசஜ்ஞ:
குசலோ தர்மேப்ஸு: ஸமாசரேத் ॥ ௪௮ ॥

சுத்தி தத்வங்களை யறிந்தவனும், சாஸ்த்ர ஸாமர்த்யமுள்ளவனும், தர்மச்ரத்தையுள்ளவனுமான புருஷன், காலம், தேசம், தனதுநிலை, த்ரவ்ய ஸௌகர்யம், த்ரவ்ய ப்ரயோஜனம், ந்யாயம்,

ரோகாதி நிலைமை ஆகியவைகளை அறிந்து, சுத்தியை ஆசரிக்க வேண்டும். காலம்—சீத, உஷ்ணாதி காலம்-இரவு, பகல். தேசம்-காடு முதலியவை அநுஷ்டிக்க முடியாத இடம். த்ரவ்யம்-சுத்திக்கு வேண்டிய பதார்த்த நிலைமை. அவைகளில் ப்ரயோஜனம், ந்யாயம், இவைகளைக் கவனிக்க வேண்டும். ஸாத்யமானதைச் செய்ய வேண்டும்.

𑌇𑌤𑌿 𑌅𑌷𑍍𑌟𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

எட்டாவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌨𑌵𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

ஒன்பதாவது கண்டம்.

𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌃 𑌕𑌾𑌰𑍁𑌹𑌸𑍍𑌤𑌃 𑌪𑌣𑍍𑌯𑌂 𑌯𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌗𑌤𑌂 𑌭𑍈𑌕𑍍𑌷𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌮𑍇𑌧𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ॥

சில்பியின், அல்லது வேலைக்காரனின், கையானது எப்போதும் சுத்தம். கடைகளில் க்ரயம் செய்வதற்காகப் பரப்பி வைக்கப்பட்டிருக்கும் பண்யங்கள், வஸ்துக்கள், ப்ரம்ஹசாரியிடமிருக்கும் பிக்ஷாந்நம், இவை எப்போதும் சுத்தமென்று ச்ருதி சொல்லுகிறது.

𑌵𑌤𑍍𑌸𑌃 𑌪𑍍𑌰𑌸𑍍𑌰𑌵𑌣𑍇 𑌮𑍇𑌧𑍍𑌯𑌃 𑌶𑌕𑍁𑌨𑌿𑌃 𑌫𑌲𑌶𑌾𑌤𑌨𑍇 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 𑌰𑌤𑌿𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑍇 𑌶𑍍𑌵𑌾 𑌮𑍃𑌗𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌶𑍁𑌚𑌿𑌃 ॥ ௨ ॥

பால் சுரக்கச் செய்வதில் கன்றுக்குட்டியின் வாய் சுத்தம். பழங்களைக் கடித்துக் கீழே உதிர்க்கும் விஷயத்தில் பக்ஷியின் வாய் சுத்தம். ரதிகால ஸம்ஸர்க்கத்தில் உச்சிஷ்டாதி கலப்புகளில் ஸ்த்ரீகள் சுத்தர்கள். வேட்டைக் காலத்தில் ம்ருகங்களைப் பிடிப்பதில் ச்வாவின் (நாயின்) வாய் படுவது சுத்தம். சுத்தி வேண்டியதில்லை.

𑌆𑌕𑌰𑌾𑌃 𑌶𑍁𑌚𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌰𑍍𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌰𑌾𑌕𑌰𑌮𑍍 ।
𑌅𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌤𑌾 𑌧𑌾𑌰𑌾 𑌵𑌾𑌤𑍋𑌦𑍍𑌧𑍂𑌤𑌾𑌶𑍍𑌚 𑌰𑍇𑌣𑌵𑌃 ॥

எந்தப் பதார்த்தங்களுக்கும் உத்பத்திஸ்தானம் சுத்தமானது. எண்ணெய் செக்கு, கரும்பு ஆலை, சர்க்கரை உத்பத்திஸ்தானம் போன்றவை ஆகரம். ஆனால் ஸுரையின் உத்பத்திஸ்தானம் சுத்தமன்று. தாரையாக விழும் ஜலம் தோஷமற்றது. காற்றினால் கிளப்பப்பட்ட தூசிகளும் தோஷமற்றவை.

அமேத்யேஷு ச யே வ்ருக்ஷா: உப்தா: புஷ்பபலோபகா: ।
தேஷாமபி ந துஷ்யந்தி புஷ்பாணி ச பலானி ச ॥ ௪ ॥

அசுத்தங்களான இடங்களில் பயிர் செய்யப்பட்ட வ்ருக்ஷங்கள் புஷ்ப பலங்களுடன் கூடியவைகளாயிருந்தால் அவைகளின் புஷ்பங்களும் பலங்களும் தோஷமற்றவை.

சைத்யவ்ருக்ஷம் சிதிம் யூபம் சண்டாளம் வேதவிக்ரயம் ।
ஏதானி ப்ராஹ்மண: ஸ்ப்ருஷ்ட்வா ஸசேலோ ஜலமாவிஶேத் ॥

ச்மசாந வ்ருக்ஷம், சிதை, யாகம் முடிந்தபிறகு யாகசாலையிலுள்ள யூபம், சண்டாளன், வேதவிக்ரயம் செய்தவன் ஆகிய இவைகளை ப்ராம்ஹணன் தொட்டுவிட்டால் ஸசேலமாக ஜலஸ்நானம் செய்யவும்.

ஆத்மஶய்யாஸனம் வஸ்த்ரம் ஜாயாபத்யம் கமண்டலு: ।
ஶுசீன்யாத்மன ஏதானி பரேஷாமஶுசீனி து ॥ ௬ ॥

தன்னுடைய படுக்கை, ஆஸனம், வஸ்த்ரம், பத்நீ, குழந்தை, கமண்டலு என்கிற தீர்த்த பாத்ரம் ஆகியவை தனக்கு மட்டுமே சுத்தங்கள். பிறர்களுக்கு இவை அசுத்தங்களே.

ஆஸனம் ஶயனம் யானம் நாவ: பதி த்ருணானி ச ।
சண்டாலபதிதஸ்ப்ருஷ்டம் மாருதேனைவ ஶுத்யதி ॥ ௭ ॥

ஆஸனம், படுக்கை, வண்டி, ஓடம், ரஸ்தா, புல்லுகள் இவைகள் சண்டாளன், பதிதன் இவர்களால் தொடப்பட்டால் காற்றினாலேயே சுத்தியையடைகின்றன.

கலக்ஷேத்ரேஷு யத்தான்யம் கூபவாபீஷு யஜ்ஜலம் ।
அபோஜ்யாதபி தத்போஜ்யம் யச்ச கோஷ்டகதம் பய: ॥ ௮ ॥

களம், வயல் இவைகளிலுள்ள, உழுது நட்ட க்ஷேத்ரத்திலுள்ள தான்யம், கிணறு, குளம் இவைகளிலுள்ள ஜலம் இவைகள் சாப்பிடத்தகாத இடத்திலிருந்தாலும் சாப்பிடத்தக்கவைகளே. அதுபோல் மாட்டுக்கொட்டிலில் உள்ள பாலும் எப்போதும் போஜ்யம். கறந்தவுடனேயே கிடைத்தபால் என்று கருத்து.

த்ரீணி தேவா: பவித்ராணி ப்ராஹ்மணானாமகல்பயன் ।
அத்ருஷ்டமத்பிர்நிர்ணிக்தம் யச்ச வாசா ப்ரஶஸ்யதே ॥ ௯ ॥

தேவர்கள் ப்ராம்ஹணர்களுக்கு மூன்றுவித சுத்தியைக் கல்பித்துள்ளார்கள். ப்ரத்யக்ஷத்தில் தோஷம் காணப்படாதது

ஒரு வித சுத்தி. அது போல் தீர்த்தத்தால் அலம்பப்பட்டது ஒரு வித சுத்தி. வாக்கினால் ப்ரசம்ஸை செய்யப்பட்டது மற்றொரு சுத்தி. ஸந்தேஹம் ஏற்பட்ட விதத்தில் மேற்கண்ட மூன்றுவித சுத்தியில் ஸந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி ஒன்றை க்ரஹிக்கலாம்.

ஶுசஃ பவித்ரம் (ா) ஸ்ஹிமதாஃ மொதாஶ்வித்பாமாஸஸா
ஜாயதெ । சுவ்யாவத்தாஶ்வுசுஅெஸெவ்யெ ந ஸாமவண ஶாஸாஙிதாஃ ॥

பூமி ஸம்பந்தமுள்ள ஜலங்கள் பரிசுத்தங்கள். பசுக்கள் அந்த ஜலத்தை த்ருப்தியுடன் சாப்பிடக்கூடியதாயிருக்கவேண்டும். மேலும் புரீஷாதி அமேத்ய வஸ்துக்களால் அந்த ஜலம் வ்யாபிக்கப்பட்டதாயிருக்கக்கூடாது. ஜலத்திற்கு ஸ்வபாவமாக இருக்க வேண்டிய வாஸனை, வர்ணம், ருசி இவைகளுடன் கூடியவையாக இருக்கவேண்டும்.

ஸ்ஹிஶுஸ ஸம்மாஜநொப்ரொக்ஷணொபலெபநாவஸ்து
ரொாகெவைநஃ யயாஶாநம் தொஷவிஶேஷாத் ப்ராய
த்யம் । சக ॥

பூமிக்குப் பெருக்குதல், ப்ரோக்ஷித்தல், மெழுகுதல், தர்ப்பாதிகளால் பரப்புதல், மண்வெட்டியால் கொத்திவிடுதல், இத்யாதிகளான சுத்திகளை ஸ்தானத்திற்கேற்றபடி செய்யவும். தோஷங்களுக்கேற்றபடி இவைகளால் சுத்தி ஏற்படும்.

ஶயாவ்யாஷாஹரந்தி ॥ சஉ ॥

சுத்தி விஷயமாக மேலும் சிஷ்டர்கள் கூறுவதாவது:—

இதி நவமஃ வண்டஃ ॥

ஒன்பதாவது கண்டம் முற்றிற்று.

அய உஶமஃ வண்டஃ ॥

பத்தாவது கண்டம்.

மொவாமாத்ரமஷ்விநுஃ ஸ்ஹிமஶ்யுஸ்தி வாதிதஃ ।
ஸமஹிஸமஸமஸம் வா யத்ராஸெஸ்யம் ந லக்ஷ்யதெ ॥ இதி ॥

சுத்த தீர்த்தத்தின் பிந்து (திவிலை) கூடப் பூமியில் விழுந்தால், அல்லது ப்ரோக்ஷிக்கப்பட்டால், அந்தப் பூப்ரதேசத்தில் கோ சர்ம (பசுத்தோல்) அளவுக்கு உள்ள இடமானது சுத்தியடைகிறது. அந்த

இடம், பெருக்கப்பட்டுச் சுத்தமானதாயிருந்தாலும், பெருக்கப் படாததாயிருந்தாலும் ஸரி. ஆனால் எங்கு அமேத்யம் அசுத்த மில்லையோ அங்குத்தான் இந்தச் சுத்தி.

பரோக்ஷமதிஶ்ரிதஸ்யாந்நஸ்யாவத்³யோத்யாப்⁴யுக்ஷணம் ॥ ௨ ॥

போக்தாவுக்கு எதிரில் இல்லாமல் மறைவில் சமையல் செய்யப்பட்ட அந்நத்திற்கு (ஸந்தேஹமிருந்தால்) அக்நியால் காய்ச்சி, தீர்த்தத்தால் ப்ரோக்ஷிப்பது சுத்தி.

ததா²பணீயாநாம் ச ப⁴க்ஷ்யாணாம் ॥ ௩ ॥

கடைகளில் விற்பனைக்காக வைத்துள்ள பக்ஷயங்களுக்கும் (அந்நம் நீங்கலாக) முன் ஸூத்ரத்தில் சொன்ன சுத்தி.

ஸங்கஸுகா: ஶுசிகாமா ஹி தே³வா: நாஶ்ரத்³த³தா⁴நஸ்ய ஹவிர்ஜுஷந்த இதி ॥ ௪ ॥

தேவர்கள் ஸங்கோசமுள்ளவர்கள், சுத்தியை விரும்புகிறவர்கள். ச்ரத்தையில்லாதவனுடைய ஹவிஸ்ஸைப் புஜிப்பதில்லை. ஆகையால் ச்ரத்தையுடன் ஹவிஸ்ஸைக் கொடுக்கவேண்டும்.

ஶுசேரஶ்ரத்³த³தா⁴நஸ்ய ஶ்ரத்³த³தா⁴நஸ்ய சாஶுசே: ।
மீமாம்ஸித்வோப⁴யம் தே³வா: ஸமமந்நமகல்பயந் ॥
ப்ரஜாபதிஸ்தாநுவாச ந ஸமம் விஷமம் ஹி தத் ।
ஹதமஶ்ரத்³த³தா⁴நஸ்ய ஶ்ரத்³தா⁴பூதம் விஶிஷ்யதே ॥ இதி ॥

ச்ரத்தையற்றவன் ஒருவன், ஆனால் சுத்தன். மற்றொருவன் அசுத்தன், ஆனால் ச்ரத்தையுள்ளவன். இவ்விருவர்களுடைய நிலைமையைத் தேவர்கள் ஆலோசனை செய்து இரண்டு பேருடைய ஹவிள் ஸமம் (அந்நம்) ஸமயோக்யதையுள்ளதென்று தீர்மானித்தார்கள். இரண்டு பேரிடமும் ஒவ்வொரு விசேஷமிருப்பதால்.

ஆனால், ப்ரம்ஹா தேவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்:— நீங்கள் ஸமமென்று செய்த வ்யவஸ்தை விஷமமானது. ஸமமில்லாதது. ஏனெனில் ச்ரத்தையற்றவனுடைய ஹவிஸ் ஹதமானது (வீணானது). ஆகையால் சுத்தனைவிட ச்ரத்தா பரிசுத்தியுள்ளவனுடைய அந்நம் (ஹவிஸ்) விசேஷமானது, மேற்பட்டது என்று.

அதா²ப்யுதா³ஹரந்தி —

ஶுத்³தா⁴ மக²: வாயுஸ்தா² ஶுத்³தா⁴ ஹி மமம் தவ: ।
தத்ராபிஶுத்³தா⁴ உத்தம் ஹவிர்நாஶ்நந்தி தே³வதா: ॥ ௫ ॥

ச்ரத்தை விஷயமாகப் பெரியோர்கள் கூறுவதாவது:—ச்ரத்தையில்லாமையானது பெரிய பாபமாகும். ச்ரத்தைதான் உத்தம தபஸ். ஆகையால் அச்ரத்தையால் கொடுக்கப்பட்ட ஹவிஸ்ஸைத் தேவர்கள் புஜிப்பதில்லை.

ஐஷ்டா ஏகூாzவி ஃஷிவ-ஃஃ ஷுஶ-ஃ௦ ந ஹி ஸ ஶஷு தி ॥எ॥

ச்ரத்தையற்றவன், ச்ரத்தையின் மஹிமையறியாத மூர்க்கன், யாகம் செய்தாலும், தானம் செய்தாலும் ஸ்வர்க்கமென்கிற பரலோகத்தை அவன் அடையமாட்டான்.

ஶஜ்ஞாவிஹிதவாரிதுஃ யஃஷாவிபாயஶாஶ்ரிதஃ । ஶாஸ்ரா
திஶஃ ஷூதொ ஃஷிவெ-ஃா யஃ-ஃதஜெராவபொாயநாக ॥
ஐதி ॥ அ ॥

மூர்க்கன் என்பவன் யார்? பரலோக ச்ரேயஸ்ஸில் ஸந்தேஹத்தால் சாஸ்த்ராநுஷ்டானத்தை மறைத்தவனும், தன் அபிப்ராயத்தை அநுஸரிப்பவனும், ஸ்வச்சந்தசாரீ. இதனால் சாஸ்த்ரத்தை மீறியவன் மூர்க்கன் எனப்படுகிறான். தர்மாநுஷ்டானத்திற்கு உபரோதம் செய்கிறவனானதால் மூர்க்கன்.

ஶாகவஷ்பஹஃஷிஃளஷமூாம் தஃ பூக்ஷாஉநஜ ॥ கூ ॥

கறி காய்கள், புஷ்பம், பழம், கிழங்கு, பச்சிலைகள் இவைகளுக்கு ப்ராக்ஷாளனமே சுத்தி. மூத்ராதி தோஷமேற்பட்டால் த்யாகமே.

ஶஷ்க௦ தூணஶாஜிகு௦ காஷ்௦ லொஷ்௦ வா திரஷ்ரூ
தூாஹொாாதுயொ ஶஹூக்ஷிணாஃவஃ பூாவுதூ ஶிர
உஷுஃாஷவஃஹொஹா ॥ க௦ ॥

மல மூத்ர உத்ஸர்க்க ஸமயத்தில், காய்ந்த புல், அல்லது யாகார்ஹ வ்ருக்ஷமல்லாத மரத்தின் காஷ்டம், அல்லது ஓட்டுச்சல்லி இவைகளால் பூமியை மறைத்து, அதன் மீது மலமூத்ர விஸர்ஜனம் செய்யவும். பகலில் வடக்கு முகமாய், இரவில் தெற்கு முகமாய். சிரஸ்ஸை மூடிக்கொள்ளவும்.

ஃஷிதெ ஃஜாzஜிஃ பூக்ஷாஉநஜ ॥ கக ॥

மூத்ர விஸர்ஜனத்தில் மண், ஜலம் இரண்டினாலும், ப்ராக்ஷாளன சுத்தி செய்யவும்.

திஃ வாணெஃ ॥ கஉ ॥

மூத்ர சுத்தியில் இருகைகளுக்கும் மூன்று தடவை மண், ஜலம் இரண்டையும் போட்டுச் சுத்தி செய்யவும்.

தத்வத் புரீஷே ॥ ௧௩ ॥

அதுபோல் புரீஷ விஸர்ஜனத்திலும், மண், ஜலம் இரண்டும் சுத்திகரம்.

பாய்வாதாயாஶ்ச பாய்வோ: பாண்யோஶ்ச ॥ ௧௪ ॥

புரீஷ விஸர்ஜனத்தில் பாயு என்கிற அபாந தேசத்திற்கும், கைகளுக்கும் முக்யமாக இடது கைக்கும் மூன்று மூன்று பர்யாயங்கள் (தடவைகள்) மண் ஜலம் கொண்டு சுத்தி செய்யவும். (மல மூத்ர சுத்தி விஷயத்தில் பலவித விகல்ப பக்ஷங்களிருப்பதால் நிபந்தனகாரர்களின் வ்யவஸ்தைப்படி அநுஷ்டானம்).

மூத்ரவத் ரேதஸ உத்ஸர்கே ॥ ௧௫ ॥

ரேதஸ் விஸர்ஜனத்திலும் மூத்ரசௌசப் போல் சுத்தி உண்டு.

நீவீம் விஸ்ரஸ்ய பரிதாயாப உபஸ்ப்ருஶேத் । ஆர்த்ரம்
த்ருணம் கோமயம் பூமிம் வா ஸமுபஸ்ப்ருஶேத் ॥ ௧௬ ॥

வஸ்த்ரத்தை உடுத்திக்கொள்ளக் கட்டப்படும் முடிச்சு நீவி. அதைத் தொட்டுத் தளர்த்திக்கொண்டாலும், கட்டிக்கொண்டாலும் தீர்த்தஸ்பர்சம் செய்யவும். அல்லது ஈரமுள்ள புல், ஈரமுள்ள கோமயம், ஈரமுள்ள பூமி இவைகளில் ஒன்றையாவது ஸ்பர்சிக்கவும், சுத்திக்காக.

நாபேரத:ஸ்பர்ஶனம் கர்மயுக்தோ வர்ஜயேத் ॥ ௧௭ ॥

தேவபித்ரு கார்யங்களில் ப்ரவ்ருத்தித்திருக்கையில் (செய்கையில்) கர்த்தா நாபிக்குக் கீழ்பட்ட அவயவ இடங்களைத் தொடுவதை விலக்கவும். தொடக்கூடாது.

ஊர்த்வம் வை புருஷஸ்ய நாப்யை மேத்யமவாசீநம்
அமேத்யமிதி ஶ்ருதி: ॥ ௧௮ ॥

யஜுர்வேத ச்ருதியானது "மனிதனுடைய நாபிக்கு மேற்பட்ட இடம் பரிசுத்தம், நாபிக்குக் கீழ்பட்ட இடம் அபரிசுத்தம்" என்று கூறுகிறது.

𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌧𑌮𑌾𑌸𑌿 𑌮𑌾𑌸𑌿 𑌵𑌾 𑌵𑌪𑌨𑌮𑍍 ॥

மூன்று வர்ணத்தாரிடமுள்ள (சாஸ்த்ராசாராதிகளில் மேற்பார்வையிடப்பட்ட) சூத்ரர்களுக்கு (ஸச்சூத்ரர்களுக்கு)ப் பதினைந்து நாட்களுக்கு ஒருதடவை, அல்லது ப்ரதிமாஸம் வபநமுண்டு.

𑌆𑌰𑍍𑌯𑌵𑌦𑌾𑌚𑌮𑌨𑌕𑌲𑍍𑌪𑌃 ॥ ௨௰ ॥

ஸச்சூத்ரர்களுக்கு ஆர்யர்களுக்குப்போல் ஆசமனவிதி. உபவீதாதி நியமம் நீங்கலாக.

𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 𑌕𑍁𑌸𑍀𑌦𑌮𑍁𑌪𑌜𑍀𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௧ ॥

வைச்ய ஜாதியினர் ஜீவிகைக்காக குஸீதம் என்ற கொடுக்கல் வாங்கல் ப்ரயோகத்தை வட்டிக்காகச் செய்து ஜீவிக்கலாம்.

𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌵 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌷𑌿𑌕𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௨௨ ॥

கார்ஷாபணம் என்பது ப்ராசீன நாணயத்தின் பெயர். அதன் இருபதில் ஒருபாகமானது மாஷம் என்ற அளவு. ஆக இருபத்தைந்து கார்ஷாபணம் ஒருவனுக்குக் கடனாகக் கொடுத்தால் அதற்கு மாதாமாதம் ஐந்து மாஷம் வட்டியாகும். வட்டி கொடுக்கவும்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 —

𑌯𑌸𑍍𑌸𑌮𑌰𑍍𑌘𑌮𑍃𑌣𑌂 𑌗𑍃𑌹𑍍𑌯 𑌮𑌹𑌾𑌰𑍍𑌘𑌂 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜
𑌯𑍇𑌤𑍍 । 𑌸 𑌵𑍈 𑌵𑌾𑌰𑍍𑌧𑍁𑌷𑌿𑌕𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇𑌷𑍁
𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌃 ॥ 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌚 𑌭𑍍𑌰𑍂𑌣𑌹𑌤𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌤𑍁𑌲𑌯𑌾 𑌸𑌮
𑌤𑍋𑌲𑌯𑌤𑍍 । 𑌅𑌤𑌿𑌷𑍍𑌠𑌦𑍍𑌭𑍍𑌰𑍂𑌣𑌹𑌾 𑌕𑍋𑌟𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌰𑍍𑌧𑍁
𑌷𑌿𑌃 𑌸𑌮𑌕𑌮𑍍𑌪𑌤𑍇𑌤𑌿 ॥ ௨௩ ॥

எந்த மனிதன் ஸ்வல்ப வட்டிக்குப் பிறரிடம் கடன் பெற்று, அந்தப் பணத்தை அதிக வட்டிக்காகப் பிறரிடம் கொடுக்கிறானோ, அல்லது தான் ஸ்வல்ப வட்டியால் ஸம்பாதித்த தனத்தையே அதிக வட்டிக்குக் கொடுக்கிறானோ அவன் வார்த்துஷிகன், வட்டியால் ஜீவிப்பவன். அவன் ஸகல தர்ம கார்யங்களிலும் ஸம்பந்தப் பட நிந்திக்கப்பட்டவன்.

பெரியோர்கள் வட்டிக்கு வாங்குதல் என்கிற தோஷத்தையும், ப்ரூணஹத்யா என்ற ப்ராம்ஹண வத தோஷத்தையும் தராசில் சேர்த்து வைத்தார்கள். இதில் ப்ரூணஹா என்பவன் நிறையில் மேலே தூக்கி நின்றான். வார்த்துஷி என்கிற வட்டி ஜீவி கீழே

ஆட்டம் கொண்டான், என்று வட்டி விஷயமாகப் பெரியோர்கள் உதாஹரிக்கிறார்கள்.

கோரக்ஷகாந் வாணிஜகாந் ததா காருகுஶீலவாந் ।
ப்ரேஷ்யாந் வார்துஷிகாம்ஶ்சைவ விப்ராந் ஶூத்ரவதாசரேத் ॥

பசுரக்ஷணத்தைத் தொழிலாகக் கொண்டு ஜீவிப்பவர்களும், வ்யாபார ஜீவனம் செய்கிறவர்களும், சில்பவேலை, ஸங்கீதம் இவைகளால் ஜீவிப்பவர்களும், பிறரிடம் ஸேவக வேலை செய்கிறவர்களும், வட்டி (நிஷித்தவட்டி) வாங்கி ஜீவிப்பவர்களுமான விப்ரர்களைச் சூத்ரனைப்போல் நடத்தவும்.

காமம் து பரிலுப்தக்ருத்யாய கதர்யாய நாஸ்திகாய
பாபீயஸே பூர்வௌ தத்யாதாம் ॥ ௨௫ ॥

வட்டி விஷயத்தில், ஆசார லோபமுள்ளவனும், க்ருபணனும், நாஸ்திகனும், பாபகார்யம் செய்கிறவனுமான கடன்காரனுக்கு ப்ராம்ஹண க்ஷத்ரியர் இருவரும் அதிக வட்டிக்காகப் பணம கொடுக்கலாம். அவர்களிடம் அதிக வட்டி பெறலாம். ப்ராம்ஹணனுக்கு வட்டி வாங்கும் நிஷேதமானது தனிகன் விஷயம்.

அயஜ்ஞேநாவிவாஹேந வேதஸ்யோத்ஸாதநேந ச ।
குலாந்யகுலதாம் யாந்தி ப்ராஹ்மணாதிக்ரமேண ச ॥ ௨௬ ॥

யாகம் செய்யாததாலும், சாஸ்த்ரீய விவாஹ தர்மமில்லாததாலும், வேதாத்யயநம் செய்யாததாலும், அல்லது அத்யயனம் செய்த வேதத்தை மறந்ததாலும், ப்ராப்ஹணர்களை, வேதாத்யாயிகளானவர்களை, அதிக்ரமம் செய்வதாலும், அதாவது பூஜா புரஸ்காராதிகள் செய்யாமலிருப்பதாலும், குலங்கள், குலமற்ற நிலைமையை அடைகின்றன. நிக்ருஷ்ட குலங்களாகிவிடுகின்றன.

ப்ராஹ்மணாதிக்ரமோ நாஸ்தி மூர்கே மந்த்ரவிவர்ஜிதே ।
ஜ்வலந்தமக்நிமுத்ஸ்ருஜ்ய ந ஹி பஸ்மநி ஹூயதே ॥ ௨௭ ॥

வேதாத்யயநம் செய்யாதவனும் சாஸ்த்ராதிலங்கனம் செய்கிறவனுமான மூர்க்கன் விஷயத்தில் ப்ராம்ஹணாதிக்ரம தோஷம் கிடையாது. ஜ்வலிக்கிற அக்நியிருக்கையில் அதை விட்டு, சாம்பலில் ஹோமம் செய்யும் வழக்கமில்லையல்லவா? நிமந்த்ரண, பூஜாதிகளில் அத்யயனம் செய்த ப்ராம்ஹணனிருக்கையில் அவனை அதிக்ரமித்து, வேதமில்லாதவனைப் புரஸ்கரிக்கக் கூடாதென்பது மூர்க்கன் விஷயத்தில் தோஷமாகாது.

𑌗𑍋𑌭𑌿𑌰𑌶𑍍𑌵𑍈𑌶𑍍𑌚 𑌯𑌾𑌨𑍈𑌶𑍍𑌚 𑌕𑍃𑌷𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑍋𑌪𑌸𑍇𑌵𑌯𑌾 ।
𑌅𑌕𑍁𑌲𑌾𑌨𑍍𑌯𑌕𑍁𑌲𑌤𑌾𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌹𑍀𑌨𑌾𑌨𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 ॥ ௨௮ ॥
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌕𑍁𑌲𑌾𑌨𑍍𑌯𑌲𑍍𑌪𑌧𑌨𑌾𑌨𑍍𑌯𑌪𑌿 ।
𑌕𑍁𑌲𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌷𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌮𑌹𑌦𑍍𑌯𑌶𑌃 ॥ ௨௯ ॥

தனம் ஸம்பாதிக்க வேண்டி, மாடுகள், குதிரைகள், வண்டிகள் இவைகளை வ்யாபாரம் செய்வதாலும், அதே மாதிரி க்ருஷியாலும், ராஜாவிடம் ஸேவா வ்ருத்தி செய்வதாலும், குலங்கள் நிக்ருஷ்டங்களாகின்றன. அவை போல் மந்த்ர (வேதம்) ஹீந குலங்களும் நிக்ருஷ்டங்களாகின்றன. மந்த்ரத்தால் வேதத்தால் நிறைந்த குலங்கள் ஸ்வல்ப தனமுள்ள குடும்பங்களாயிருந்தாலும், நல்ல குலங்களென்கிற கணனத்தை அடைகின்றன. மகத்தான கீர்த்தியையும் ஸம்பாதிக்கின்றன.

𑌵𑍇𑌦𑌃 𑌕𑍃𑌷𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌕𑍃𑌷𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑍀 ।
𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍁𑌭𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌶𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌕𑍃𑌷𑌿𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥ ௩௦ ॥

க்ருஷி வேலையைக் கவனிக்க அவகாச மேற்படாததால் வேதாத்யயனமானது க்ருஷி கார்யத்திற்கு விநாசகமாகும். அது போலவே க்ருஷியும் வேத விநாசிநீ. ஆனால் இரண்டையும் ஸமாளிக்கும் சக்தியுள்ளவன் இரண்டையும் செய்யலாம். சக்தியற்றவன் க்ருஷியைத்தான் விடலாம். வேதத்தை விடக்கூடாது.

𑌨 𑌵𑍈 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌪𑍀𑌵𑌰𑍋𑌽𑌸𑌂𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌰𑍋𑌰𑍂𑌯𑌮𑌾-
𑌣𑌃 𑌕𑌕𑍁𑌦𑍀 𑌸𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 । 𑌚𑌲𑌤𑍍𑌤𑍁𑌨𑍍𑌦𑍀 𑌰𑌭𑌸𑌃 𑌕𑌾𑌮𑌵𑌾𑌦𑍀 𑌕𑍃-
𑌶𑌾𑌸 𑌇𑌤𑍋𑌽𑌣𑌵𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 ॥ ௩௧ ॥

மாம்ஸாதி ஆஹாரங்களால் பெருத்த சரீரமுள்ளவனும், நிஷித்த கார்யங்களிலிருந்து தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளாதவனும், நிஷித்த ஸங்கீதம் நரஸ்துதி இவைகளால் சப்தித்துக் கொண்டிருப்பவனும், காளைமாடு மேய்த்து ஜீவிப்பவனும், வயிறு பெருத்து அலைகிறவனும், தீக்ஷ்ணமாயிருப்பவனும், ஸ்வச்சந்த வாதம் செய்கிறவனும், துர்ப்பலர்களைத் தொந்தரவு செய்கிறவனும், க்ஷாத்ரர்களும் ஆகிய இவர்கள் தேவர்களை அடையமாட்டார்கள். தாம் பிறந்த இடத்திலேயே சுற்றிக்கொண்டிருப்பார்கள். மேற்கண்டவர்களுக்கு நல்லகதி கிடையாதென்று கருத்து.

𑌯𑌦𑍍𑌯𑍌𑌵𑌨𑍇 𑌚𑌰𑌤𑌿 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑌦𑍍𑌵𑌾𑌸𑌦𑍍𑌵𑌾 𑌯𑌾𑌦𑍃𑌶𑌂
𑌵𑌾 𑌯𑌥𑌾 𑌵𑌾 । 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇 𑌚𑍇𑌦𑍍𑌵𑌯𑌸𑌿 𑌸𑌾𑌧𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌤𑌦𑍇𑌵𑌾
𑌸𑍍𑌯 𑌭𑌵𑌤𑌿 𑌨𑍇𑌤𑌰𑌾𑌣𑌿 ॥ ௰௪ ॥

மனிதன், யௌவந காலத்தில், மோஹத்தால், நல்லதோ கெட்டதோ எத்தகைய கார்யத்தையோ, எந்த விதத்திலோ செய்த போதிலும், அவன் பின்வயதில் (50-க்கு மேல்) நல்ல நடத்தை ஏற்பட்டு ஸதாசாராநுஷ்டானம் செய்தால் அதுவே அவனுக்கு ச்ரேயஸ்கரமாக ஆகிறது. முன்வயதில் செய்த கார்யங்கள் மற்றவை துஷ்டங்களாயிருந்தாலும் இவனைக் கெடுப்பதில்லை. ஸ்வல்ப ப்ராயஶ்சித்தம் போதுமென்று கருத்து.

𑌶𑍋𑌚𑍇𑌤 𑌮𑌨𑌸𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ।
𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌚𑌾𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍀 𑌚 𑌤𑌤𑌃 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௰௫ ॥

மனிதன் ப்ரதி தினமும் தான் செய்த துஷ்க்ருத்யங்களை நினைத்து, மனதால் பஶ்சாத்தாபமடைந்து துக்கிக்கவேண்டும். மறுபடியும் தவறு செய்யாதவனாயும், க்ருச்ராதி தபஸ் செய்பவனாயுமிருந்தால் பிறகு பாபத்திலிருந்து விடுபடுகிறான்.

𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍𑌤𑌿 𑌬𑌿𑌨𑍍𑌦𑌵𑌃 𑌪𑌾𑌦𑍌 𑌯 𑌆𑌚𑌾𑌮𑌯𑌤𑌃 𑌪𑌰𑌾𑌨𑍍 ।
𑌨 𑌤𑍈𑌰𑍁𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌭𑌾𑌵𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑍂𑌮𑌿𑌗𑍈𑌃 𑌸𑌹 ॥

பிறருக்கு ஆசமன தீர்த்தத்தை ஒருவன் சேர்க்கும்போது அந்தத் தீர்த்த பிந்துக்கள் பூமியில் விழுந்து அவனுடைய கால்களில் பட்டால் அதனால் அவன் அசுத்தனாகிறதில்லை. அந்த ஜலமானது பூமியிலுள்ள ஜலங்களுக்கு ஸமமே.

𑌇𑌤𑌿 𑌦𑌶𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

பத்தாவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥𑍈𑌕𑌾𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

பதினோராவது கண்டம்.

𑌸𑌪𑌿𑌣𑍍𑌡𑍇𑌷𑍍𑌵𑌾 𑌦𑌶𑌾𑌹𑌮𑌾𑌶𑍌𑌚𑌮𑌿𑌤𑌿 𑌜𑌨𑌨𑌮𑌰𑌣𑌯𑍋𑌰𑌧𑌿
𑌕𑍃𑌤𑍍𑌯 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿, 𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌮𑍍 ॥ ௧ ॥

ஜநநம், மரணம் இரண்டு நிமித்தமாக ஸபிண்டர்களுக்குப் பத்துநாள் வரையில் ஆசௌசமென்று பெரியோர்கள் சொல்லுகி

ருர்கள். ஆனால் யாகம் செய்து வைக்கையில் ருத்விக்குக்கும், யாகம் செய்கிற ஸமயத்தில் தீக்ஷிதனுக்கும், வேதாத்யயனம் செய்கிற ப்ரம்ஹசாரிக்கும், தவிர. இந்த மூன்றுபேர்களுக்கும் அந்தக் காலத்தில் அந்தக் கர்மா நடக்கும் காலத்தில் ஆசௌசம் கிடையாது.

ஸபிண்டாக்ஷாஸப்தபோக ஸபிண்டேஷு ॥ ௨ ॥

ஸபிண்டர்களிடம், ஏழு தலைமுறை வரையில் ஸபிண்டத்வம் நீடிக்கும்.

சுஸப்தமாஸாதந்தஜநநாத் உதகோவஸம்ப்ருஷ்டி ॥ ௩ ॥

சிசு மரணத்தில், ஏழாவது மாஸம் வரையிலோ, அல்லது பல் முளைக்கும் காலம் வரையிலோ ஸபிண்டர்களுக்கு உதக ஸ்நாநம் மட்டும்.

பிண்டோதகக்ரியா ப்ரேதே நாத்ரிவர்ஷே விதீயதே ।
ஆதந்தஜநநாத்வாபி தஹநம் வ ந காரயேத் ॥ ௪ ॥

மூன்று வயது ஆகாத பாலமரணத்தில் ஸபிண்டர்களுக்குப் பிண்டோதக தானங்கள் செய்யவேண்டிய விதியில்லை. அல்லது தந்த உத்பத்தியாகும்வரையிலாவது. அந்தக் காலம் வரையில் பாலனுக்குத் தஹனமும் செய்யக்கூடாது.

அப்ரத்தாஸ்து கந்யாஸு ப்ரத்தாஸ்வப்யேஷ ஸம்ஸ்ருதே ।
லோகஸங்க்ரஹணார்த்தம் ஹி யதமந்த்ராः ஸ்த்ரியோ மதாः ॥ ௫ ॥

தானம் செய்யப்படாத கன்யைகள் மரண விஷயத்திலும், தானம் செய்யப்பட்டவர்கள் மரணத்திலும் ஸபிண்டர்கள் பிண்டோதகம் செய்கிறார்கள் சிலர். அது லோக ஸங்க்ரஹணார்த்தம் செய்யும் கார்யமேயாகும். ஏனெனில் கந்யாஸ்த்ரீகள் மந்த்ரக்ரியைக்கு அர்ஹதையுள்ளவர்களல்ல. கந்யாதானம் செய்யப்பட்ட ஸ்த்ரீமரணத்தில் பர்த்ரு பக்ஷத்தில் ஆசௌச பிண்டோதகாதிகள் நிர்விவாதமாக உண்டு.

ஸ்த்ரீணாம் க்ருதவிவாஹாநாம் த்ர்யஹாச்சுத்யந்தி பாந்தவாः ।
யதோக்தேநைவ கல்பேந சுத்யந்தி வ ஸநாபயः ॥ ௬ இதி ॥

விவாஹமான ஸ்த்ரீயின் மரணத்தில் பித்ரு, மாத்ரு, பந்துக்கள் மூன்றுநாள் ஆசௌசம் காத்து, சுத்தர்களாவார்கள். அந்தப் பெண் வாழ்க்கைப்பட்ட இடமாகிய ஸநாபிகள் என்ற பர்த்ருபக்ஷ

ஸபிண்டர்கள் யதோக்தமான விதிப்படி, அதாவது தசராத்ராதி நியமப்படி, சுத்தர்களாவார்கள்.

சுவிவ— ஹுவிதாமஹஃ விதாமஹஃ விதா ஸ்வயம் ஸோ
உபஜாஃ ஹ்ராதரஃ ஸவணாயாஃ வுத்ரஃ வௌத்ரஃ வு
வௌத்ரஃ தத்ஃ வுத்ரவஜ்ஜம் தேஷாம் வ வுத்ரவௌத்ரவி
ஹக்தஃாயம் ஸவிண்டாநாவக்ஷதே ॥ எ ॥

ப்ரபிதாமஹன், பிதாமஹன், பிதா, தான், தனது ஸமான வயிற்றில் பிறந்த ப்ராதாக்கள், தன்னுடைய ஸவர்ணஸத்ரீயிடம் தனக்குப் பிறந்த புத்ர பௌத்ர ப்ரபௌத்ரர்கள், அவர்களுடைய புத்ரபௌத்ர ஸந்ததி ஆகிய இவர்கள் தாயபாகம் செய்துகொள்ளாதவர்கள் ஸபிண்டர்களென்று சொல்லுகிறார்கள்.

விஹக்தஃாயாநவி ஸகுல்யாநாவக்ஷதே ॥ அ ॥

தாயவிபாகம் செய்துகொண்டுவிட்டவர்களேயும் ஸகுல்யர்களென்று (ஸமானகுலம்) சொல்லுகிறார்கள். ஸபிண்டர்களுக்கே ஸகுல்யரென்றும் வ்யவஹாரம்.

சுஸத்ஸு சுநேஷு தஹாமீ ஹ்யெஷா ஹவதி ॥ கூ ॥

தாயவிபாக க்ரமத்தில் மற்றவர்கள் இல்லாவிட்டால் தாயமானது அந்த ஸகுல்யர்களேயல்லவோ அடைகிறது. ஆக அவர்களும் ஸபிண்டரே.

ஸவிண்டாஹாவெ ஸகுல்யஃ ॥ கo ॥

ஆதலால் ஸபிண்டர் என்ற தாயபாகம் பெறத்தக்க ஸமீப ஜ்ஞாதிகள் இல்லாவிட்டால் வ்யவஹித ஸபிண்டரான ஸகுல்யரும் தாயம் பெறப் பாத்யமுள்ளவர்கள்.

தஷஹாவெ விதாஜவாபெஜாஜெவாஸீ ஜீசுவிஹாஹணெஸ ॥ கக ॥

ஸகுல்யனுமில்லாவிட்டால் பிதாஸ்தானத்திலுள்ளவன், ஆசார்யன், சிஷ்யன், ருத்விக் இவர்களும் தாயம் அடையலாம்.

தஷஹாவெ ராஜா ஸ்வம் த்ரைவித்யவ்ருத்தேஷ்ய: ஸம்ப்ரயச்சேத் ॥

மேற்கண்டவர்களுமில்லாவிட்டால் வார்சு இல்லாத தாய தனத்தை, முக்யமாக ஸத்துக்களான ப்ராம்ஹணரின் ஸ்வத்தை, அரசன் வேதவித்யா வ்ருத்தர்களான சிஷ்டர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

𑌨 𑌚𑍈𑌵 𑌕𑌦𑌾𑌚𑌨 𑌰𑌾𑌜𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌵𑌮𑌾𑌦𑌦𑍀𑌤 ॥ ௧௩ ॥

ஒருகாலும் ராஜா ப்ராம்ஹண ஸ்வத்தைத் தான் எடுத்துக் கொள்ளக்கூடாது.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 —
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌘𑍍𑌨𑌂 𑌵𑌿𑌷𑌮𑍇𑌕𑌾𑌕𑌿𑌨𑌂 𑌹𑌰𑍇𑌤𑍍 ।
𑌨 𑌵𑌿𑌷𑌂 𑌵𑌿𑌷𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌂 𑌵𑌿𑌷𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌵𑌂 𑌨𑌾𑌦𑌦𑍀𑌤 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌪𑌰𑌮𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌂 𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 ॥ ௧௪ ॥

ப்ராம்ஹண ஸ்வத்தானது அபஹரிக்கப்பட்டால் அது புத்ர பௌத்ர பரம்பரையையும் கொல்லும். விஷம் ஒருவனை (சாப்பிட்டவனை) மாத்ரமே கொல்லும். ஆகையால் விஷத்தை விஷமென்று சொல்லமாட்டார்கள், ப்ரம்ஹஸ்வம் தான் விஷம். ஆகையால் ராஜா ஒருகாலும் ப்ரம்ஹஸ்வத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. ப்ரம்ஹஸ்வமென்பது பெரிய விஷமல்லவா? என்று சிஷ்டர்கள் உதாஹரிக்கிறார்கள்.

𑌜𑌨𑌨𑌮𑌰𑌣𑌯𑍋𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌪𑌾𑌤𑍇 𑌸𑌮𑍋 𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌃 ॥ ௧௫ ॥

ஜனனசௌசம், மரணசௌசம் இரண்டும் சேர்ந்தால் ஒரு தசராத்ரமே ஸமானமான ஆசௌசம். தனியாக இரண்டு கிடையாது. (ஆசௌச ஸங்நிபாத விஷயத்தில் பற்பல விதிகளும் பலவித அபிப்ராயங்களுமுண்டு. இதர ஸ்ம்ருதிகளையும் கலந்து நிபந்தனங்களில் வ்யவஸ்தை செய்யப்பட்டபடி அநுஷ்டானம்.)

𑌅𑌥 𑌯𑌦𑌿 𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌪𑌤𑍇𑌯𑍁𑌰𑌾𑌦𑍍𑌯𑌂 𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌾
𑌶𑍌𑌚𑌮𑌾 𑌨𑌵𑌮𑌾𑌦𑍍𑌦𑌿𑌵𑌸𑌾𑌤𑍍 ॥ ௧௬ ॥

தசராத்ர ஆசௌசங்கள் சேர்ந்தாலும் த்ரிராத்ரம் சேர்ந்தாலும் முதல் முதலாக வந்த தசராத்ர ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டும். இது ஒன்பது நாள் முடிவுக்குள் வந்தால்.

𑌜𑌨𑌨𑍇 𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌰𑍍𑌦𑌶𑌾𑌹𑌮𑌾𑌶𑍌𑌚𑌮𑍍 ॥ ௧௭ ॥

ஜநநத்தில் மாதாபிதாக்களுக்குத் தசாஹம் ஆசௌசம்.

𑌮𑌾𑌤𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑍇 𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ॥ ௧௮ ॥

சில ருஷிகள், ஜனனத்தில் மாதாவுக்கு மட்டும் ஆசௌசம், பிதாவுக்கு இல்லையென்கிறார்கள். லோகத்தில் தாயாரை மாத்திரமே விலக்கும் வழக்கும் காணப்படுவதால் என்கிறார்கள்.

𑌪𑌿𑌤𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌏𑌕𑍇 𑌶𑍁𑌕𑍍𑌰𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௧௯ ॥

ஜநநத்தில் பிதாவுக்கு மட்டும் ஆசௌசமென்று வேறு சில ருஷிகள் சொல்லுகிறார்கள். ப்ரஜோத்பத்தி ஸாதநமான சுக்லம் பிதாவிடமே ப்ரதானமாயிருப்பதால் என்று காரணம் கூறுகிறார்கள்.

𑌅𑌯𑍋𑌨𑌿𑌜𑌾𑌹𑍍𑌯𑌪𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌶𑍍𑌰𑍂𑌯𑌨𑍍𑌤𑍇 ॥ ௨௦ ॥

மாத்ரு யோநி, ப்ரஜோத்பத்திக்கு ஸாதனமென்கிற கக்ஷியைச் சொல்ல முடியவில்லை. ஏனெனில் அயோநிஜர்களாகவும் பல புத்ரர்கள் இருந்ததாகக் கேள்விப்படுகிறதல்லவா?

𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍍𑌰𑍋𑌰𑍇𑌵 𑌤𑍁 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௨௧ ॥

ஆனாலும் ப்ரஜோத்பத்தி விஷயமான சேர்க்கையானது மாதா பிதா இருவருக்கும் பொதுவாக ஸம்பந்தப்பட்டிருப்பதால் இருவரும் காரணம். இருவருக்கும் ஜநநத்தில் தீட்டு உண்டு என்று நிர்ணயம்.

𑌮𑌰𑌣𑍇 𑌤𑍁 𑌯𑌥𑌾— 𑌬𑌾𑌲𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀
𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌸𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌵𑌤𑍀𑌰𑍍𑌯 𑌸𑌕𑍃𑌤𑍍𑌸𑌕𑍃𑌤𑍍
𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌨𑌿𑌮𑌜𑍍𑌜𑍍𑌯 𑌉𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌯𑌾𑌚𑌮𑍍𑌯 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌤𑌸𑍍𑌯𑍋𑌦𑌕𑌂 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾
𑌅𑌥 𑌪𑍁𑌨𑌰𑍁𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌯𑌾𑌚𑌮𑍍𑌯 𑌗𑍃𑌹𑌦𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌮𑍁𑌦𑌕𑌮𑌿𑌤𑌿 𑌸𑌂
𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯 𑌅𑌕𑍍𑌷𑌾𑌰𑌲𑌵𑌣𑌾𑌶𑌿𑌨𑍋 𑌦𑌶𑌾𑌹𑌂 𑌕𑌟𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑍀𑌰𑌨𑍍 ॥

மரண விஷயத்தில் பாலனை, அதாவது கநிஷ்டனை, முன்னிட்டுக்கொண்டும், யக்ஞோபவீதங்களை அபஸவ்யமாக ப்ராசீனாவீதமாக மாற்றிக்கொண்டும், தீர்த்தத்தில் இறங்கி ஒரே தடவையில் மூன்று தடவை முழுக்கிட்டு, கரையேறி, ஆசமனம் செய்து, அந்த ப்ரேத நாமோச்சாரணம் செய்து, உதகதானம் செய்து, மறுபடி எழுந்து, ஆசமனம் செய்து, வீட்டுக்குள் ப்ரவேசிக்கையில் வாசற்படியில் அக்நியையும், தீர்த்தத்தையும் ஸ்பர்சித்து விட்டு, காரம், உப்பு இல்லாமல் பத்துத்தினங்கள் புஜித்து, தர்ப்பப்புல் ஆஸனத்தில் உட்கார்ந்து தசாஹத்தைப் போக்கவும்.

𑌏𑌕𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌕𑌰𑍍𑌮 ॥ ௨௩ ॥

பதினொன்று பன்னிரண்டாவது நாளில் ஏகோத்திஷ்ட, ஸபிண்டீகரண ச்ராத்தத்தைச் செய்யவும்.

ஶேஷக்ரியாயாம் லோகோऽநுரோத்⁴ய: ॥ ௨௪ ॥

ப்ரேத கார்யங்களில் சாஸ்த்ரங்கள் சொன்னவை தவிர மற்றப்பாக்கி ஸம்ப்ரதாயங்களை லோகத்தை அநுஸரித்து வழக்கப்படி செய்யவும்.

அஸபிண்டே³ஷு யதா²ஸந்நம் த்ரிராத்ரமஹோராத்ரமேகாஹமிதி குர்வீத ॥ ௨௫ ॥

இதில் ஸபிண்டர்களல்லாத மற்றவர்களான தாயாதி, பந்துக்கள் விஷயத்தில், ஸம்பந்த நெருக்கத்தையனுஸரித்து, மூன்றுநாள், பக்ஷிணீ, ஒருநாள் என்கிற காலங்களை நிர்ணயித்து ஆசரிக்கவும்.

ஆசார்யோபாத்⁴யாயதத்புத்ரேஷு த்ரிராத்ரம் பக்ஷிண்யேகாஹம் ॥ ௨௬ ॥

ஆசர்ய மரணத்தில், த்ரிராத்ரம். உபாத்யாய மரணத்தில் பக்ஷிணீ. அவர்களுடைய புத்ரமரணத்தில் ஒருநாள்.

ருத்விஜாம் ச ॥ ௨௭ ॥

யாகம் செய்து வைக்கிறவர்களான ருத்விக்குகளின் மரணத்தில் யாக கர்த்தாவுக்கு ஒரு நாள் தீட்டு. (குடும்பத்திற்கு ருத்விக்காக வரிக்கப்பட்டவன் ருத்விக்.)

ஶிஷ்யஸதீர்த்²யஸப்³ரஹ்மசாரிஷு த்ரிராத்ரமேகாஹமிதி குர்வீத ॥ ௨௮ ॥

சிஷ்யன், ஒரு குருவிடத்தில் சேர்ந்து வாசித்தவன், கூட வேதாத்யயனம் செய்தவன் இவர்களின் மரணத்தில் வரிசையாக மூன்றுநாள், பக்ஷிணீ, ஒருநாள் ஆசௌசம் கொள்ளவும்.

க³ர்ப⁴ஸ்ராவே க³ர்ப⁴மாஸஸம்மிதா ராத்ரய: ஸ்த்ரீணாம் ॥ ௨௯ ॥

கர்ப்பவிச்சேதம் என்கிற கர்ப்பஸ்ராவம் நேர்ந்தால் எவ்வளவு மாதத்தில் நேர்ந்ததோ அந்த மாஸ ஸங்க்யையுள்ள தினங்கள் ஸ்த்ரீகளுக்கு (கர்ப்பிணிக்கு) ஆசௌசம். மூன்றாவது மாதம் மூன்றுநாள், நான்காவது மாதமானல் நான்குதினம் இத்யாதி.

ப்³ராஹ்மணஸ்யாநார்ஷேயஸ்பர்ஶநே ஸசேலோऽப: ஸ்ப்ருஷ்ட்வா ஸத்³ய: ஶுத்³தோ⁴ ப⁴வதி ॥ ௩௦ ॥

புத்தி பூர்வமில்லாமல் பிறர் சவத்தைத் தொட்டுவிட்டால் ஸசேலமாக ஸ்நானம் செய்தால் உடனே சுத்தனாகிறான்.

ஊஹிஸஸிவெ஬ெஷ்ம் த்ரிராத்ரம் ॥ ௬௧ ॥

புத்தி பூர்வமாக பிறர் சவத்தைத் தொட்டால் மூன்று நாள் அசுத்தி.

ஐதஸ்ஊத்ர்யாம் வ ॥ ௬௨ ॥

ஸ்த்ரீ ரஜஸ்வலையாயிருக்கும் போது தொட்டாலும் முன் சொன்ன விதி. புத்தி பூர்வமானால் மூன்று நாள். இல்லாவிடில் ஸசேல ஸ்நானம். சவஸ்பர்சம் செய்தவன், ரஜஸ்வலையைத் தொட்டவன் இவர்களைத் தொட்டாலும் ஸ்நாநமுண்டு.

யஜுஷிதொஜாயதெ ஹொஸவிஸ்ஸு: ஐதி வ்யாவ்யாதாந்ய வெஷ்யவ்ராதாநி ॥ ௬௩ ॥

ரஜஸ்வலையாயிருக்கும்போது ஸ்த்ரீகள் அநுஸரிக்கவேண்டிய நியமங்களை யஜுர்வேதம் மேற்கண்ட வாக்யம் முதலாக விவரமாகச் சொல்லுகிறது.

வெஷவிக்ரயிணம் யஷவம் வதிதம் விதிஶேவ வ ।

ஸ்ரஷ்டா ஸஶவஜெசஸ் ஸ்நாநம் ஸ்வாநம் உண்டாஐஶேவ வ ॥ ௬௪ ॥

வேத விக்ரயம் செய்தவன், யூபம், பதிதன், ப்ரேத தஹநார்த்தமான காஷ்டம், ச்வா, சண்டாளன் இவைகளைத் தொட்டால் ஸ்நானம் சுத்தி. (இதே மாதிரி ச்லோகம் முன்பும் சொல்லப்பட்டிருக்கிறது. த்ருடீகரணார்த்தமாக மறுபடி கூறப்படுகிறது.)

ஸ்ராஹ்மணஸ்ய வ்ரணத்ஊரெ வஷயஶொணிதஸம்ஹவெ ।

க்ரிமிருத்பத்யதெ தத்ர ப்ராயஸ்சித்தம் கயம் ஹவெக் ॥ ௬௫ ॥

ஶொஸூத்ரம் ஶொமயம் க்ஷீரம் தயி ஸர்பி: குஶொதகம் ।

த்ர்யஹம் ஸ்நாத்வா வ பீத்வா வ க்ரிமிதஷ்ட ஶுசிர்ஹவெக் ॥ ௬௬ ॥

ப்ராம்ஹணனுடைய சரீரத்தில் புண் ஏற்பட்டு அதில் அசுத்த ரக்தமும், க்ருமியும் உண்டானால் அதற்கு ப்ராயஸ்சித்தம் எப்படி?

கோமூத்ரம், கோமயம், பால், தயிர், நெய் (பஞ்சகவ்யம்), தர்ப்ப தீர்த்தம் இவைகளால் மூன்றுநாள் ஸ்நானம் செய்வதோடு பானமும் செய்தால் க்ருமி தோஷம் நீங்கிச் சுத்தனாகிறான்.

ஶுநொவஹதஸ்ஸவெஹொஸவஶாஹெத ॥ ௬௭ ॥

ச்வாவினால் தொடப்பட்டவன், ச்வாவைத் தொட்டவன், ஸசேலமாக ஸ்நானம் செய்தால் சுத்தனுவான்.

𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌵𑌾 𑌤𑌂 𑌦𑍇𑌶𑌮𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃
𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌪𑌾𑌦𑌾𑌵𑌾𑌚𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥ ௩௮ ॥

அல்லது நாய் ஸ்பர்சம் ஏற்பட்ட இடத்தை அலம்பி, நெருப்பினால் காய்ச்சி, மறுபடி அலம்பி, பாதப்ரக்ஷாளனமும் செய்து, ஆசமனம் பண்ணினால் சுத்தனாகிறான்.

𑌶𑍁𑌨𑌾 𑌦𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 𑌯𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌨𑌦𑍀𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌗𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌶𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌘𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌯 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ॥
𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌰𑌜𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌗𑌵𑌾𑌂 𑌶𑍃𑌙𑍍𑌗𑍋𑌦𑌕𑍇𑌨 𑌵𑌾 ।
𑌨𑌵𑍈𑌶𑍍𑌚 𑌕𑌲𑌶𑍈𑌃 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌦𑍍𑌯 𑌏𑌵 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ॥ ௩௯ ॥

ஶ்வாவினால் கடிக்கப்பட்ட விப்ரன் ஸமுத்ரகா நதிக்குச் சென்று ஸ்நானம் செய்து, ப்ராணாயாமம் நூறு செய்தும், க்ருதம் சாப்பிட்டும் சுத்தனாகிறான். மேலும் ஸ்வர்ணத்தினாலோ, வெள்ளியாலோ செய்யப்பட்ட பாத்ரத்தாலும், பசுவின் கொம்பிலிருந்து விழும் தீர்த்தத்தாலோ, அல்லது புதிய மண்கலசங்களாலோ ஸ்நானம் செய்தால் உடனே சுத்தனாகிறான்.

𑌇𑌤𑌿 𑌏𑌕𑌾𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

பதினோராவது கண்டம் முற்றிற்று.

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

பன்னிரண்டாவது கண்டம்.

𑌅𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌗𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌾𑌃 ॥ ௧ ॥

𑌕𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌦𑌾𑌃 𑌶𑌕𑍁𑌨𑌯𑌶𑍍𑌚 ॥ ௨ ॥

𑌤𑌥𑌾 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌸𑍂𑌕𑌰𑌮𑍍 ॥ ௩ ॥

𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌜𑌾𑌵𑌿𑌕𑍇𑌭𑍍𑌯𑌃 ॥ ௪ ॥

𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌃 𑌶𑍍𑌵𑌾𑌵𑌿𑌡𑍍𑌗𑍋𑌧𑌾 𑌶𑌶 𑌶𑌲𑍍𑌯𑌕 𑌕𑌚𑍍𑌛𑌪 𑌖𑌡𑍍𑌗𑌾𑌃 𑌖𑌡𑍍𑌗
𑌵𑌰𑍍𑌜𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌪𑌞𑍍𑌚𑌨𑌖𑌾𑌃 ॥ ௫ ॥

𑌤𑌥𑌰𑍍𑌶𑍍𑌯 𑌹𑌰𑌿𑌣 𑌪𑍃𑌷𑌤 𑌮𑌹𑌿𑌷 𑌵𑌰𑌾𑌹 𑌕𑍁𑌲𑍁𑌙𑍍
𑌗𑌾𑌃 𑌕𑍁𑌲𑍁𑌙𑍍𑌗𑌵𑌰𑍍𑌜𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌦𑍍𑌵𑌿𑌖𑍁𑌰𑌿𑌣𑌃 ॥ ௬ ॥

𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌤𑌿𑌰𑌿 𑌕𑌪𑍋𑌤 𑌕𑌪𑌿𑌞𑍍𑌜𑌲 𑌵𑌾𑌰𑍍𑌧𑍍𑌰𑌾𑌣𑌸
𑌮𑌯𑍂𑌰 𑌵𑌾𑌰𑌣𑌾𑌃 𑌵𑌾𑌰𑌣𑌵𑌰𑍍𑌜𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚 𑌵𑌿𑌷𑍍𑌕𑌿𑌰𑌾𑌃 ॥ ௭ ॥

மத்ஸ்யா: ஸஹஸ்ரதம்ஷ்ட்ர: சிலிசிமோ வர்மி ப்ருஹச்சிரோ
ரோமஶ ஶகரி ரோஹித ராஜீவா: ॥ ௮ ॥

[மேற்கண்ட ஸூத்ரங்களில் மாம்ஸபக்ஷணத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறது. கலியுகத்தில் மாம்ஸபக்ஷணம் நிஷித்தம். ஆகையால் ஸூத்ரங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை.]

அநிர்தஶாஹஸந்தினீக்ஷீரமபேயம் ॥ ௯ ॥

கன்று போட்டுப் பத்துநாள் ஆகாத மாட்டுப் பாலும், சினையுள்ள மாட்டுப் பாலும் பானம் செய்யத்தக்கதல்ல.

விவத்ஸாந்யவத்ஸயோஶ்ச ॥ ௧௦ ॥

கன்று இறந்த மாடு, பிற மாட்டின் கன்றால் கறக்கப்படும் மாடு இவைகளின் பாலும் கூடாது.

ஆவிகமௌஷ்ட்ரிகமேகஶபம் ॥ ௧௧ ॥

செம்மறி ஆட்டின் பால், ஒட்டகைப் பால், ஒரு குளம்புள்ளவைகளின் பால் வர்ஜ்யம்.

அபேயபய:பானே க்ருச்ச்ரோऽந்யத்ர கவ்யாத் ॥ ௧௨ ॥

பசுமாடு பால் நீங்கலாக, சாப்பிடத்தகாத பாலைச் சாப்பிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம்.

கவ்யே து த்ரிராத்ரமுபவாஸ: ॥ ௧௩ ॥

நிஷேதிக்கப்பட்ட பசும்பாலைச் சாப்பிட்டால் மூன்று நாள் உபவாஸம் (கன்று இல்லாத மாடு முதலியவை நிஷித்தங்கள்.)

பர்யுஷிதம் ஶாகயூஷமாம்ஸஸர்பிர்தானாகுடததிமது
ஸக்துவர்ஜம் ॥ ௧௪ ॥

பர்யுஷிதம், ஒரு நாள் தாண்டிய வஸ்துக்களைச் சாப்பிடக் கூடாது. ஆனால், காய்கறிகள், யூஷம், மாம்ஸம், நெய், பொரி, வெல்லம், தயிர், தேன், மாவு இவைகள் நீங்கலாக. மேற்கண்டவைகளுக்குப் பர்யுஷித தோஷம் கிடையாது.

ஶுக்தானி ॥ ௧௫ ॥

சூதாட்டம், அபிசார கர்மாக்கள் (பிறரை ஹிம்ஸிக்க), ஆஹிதாக்நியாயில்லாதவன் உஞ்சவ்ருத்தி செய்வது, க்ருஹஸ்தன் பிக்ஷாசரணம் செய்வது, க்ருஹஸ்தனை பிறகு மறுபடி நாலு மாதத்திற்குப் பிறகு குருகுலவாஸம் செய்வது, அவனுக்கு அத்யயநம் செய்துவைப்பது, ஜ்யோதிஷம் சொல்லுவது இவைகள் அசுசிகரங்கள். நக்ஷத்ரங்களைக் குறிப்பிட்டு அவைகளின் பலாபலன்களைச் சொல்லுவது, அதாவது ஜ்யோதிஷமாகும்.

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑌃 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌸𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌰𑍍𑌧𑌮𑌾
𑌸𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌷𑌡𑌹𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶
𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌹𑌂 𑌷𑌡𑌹𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌹𑌮𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍇𑌕𑌾
𑌹𑌮𑌿𑌤𑌿 𑌯𑌥𑌾𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑌃 ॥ ௯ ॥

மேற் சொல்லிய அசுசிகரங்களுக்கு ப்ராயஶ்சித்தமாவது, பன்னிரண்டு மாதம், பன்னிரண்டு அர்த்த மாஸம் (பக்ஷம்), பன்னிரண்டு பன்னிரண்டு நாள், பன்னிரண்டு ஆறுநாள், பன்னிரண்டு மூன்றுநாள், ப்ராஜாபத்ய க்ருச்ர வ்ரதம் செய்யவும். அல்லது பன்னிரண்டுநாள், ஆறுநாள், மூன்றுநாள், ஒருநாள், ஒருபகல் என்று உபவாஸமிருக்கவும். தோஷ பலாபலங்களுக்கும் அப்யாஸத்திற்கும் ஏற்றபடி குரு லகு வ்யவஸ்தை செய்துகொள்ளவும்.

𑌅𑌥 𑌪𑌤𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌵𑌸𑌾𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑍇𑌯𑍁𑌰𑌿𑌤𑌰𑍇𑌤𑌰𑌯𑌾
𑌜𑌕𑌾𑌃 𑌇𑌤𑌰𑍇𑌤𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌪𑌕𑌾 𑌮𑌿𑌥𑍋 𑌵𑌿𑌵𑌹𑌮𑌾𑌨𑌾𑌃 𑌪𑍁
𑌤𑍍𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌵𑌿𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌤𑌾𑌽𑌸𑍍𑌮𑌤𑍍𑌤𑌃 𑌏𑌵
𑌮𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌸𑍍𑌯𑌥 𑌇𑌤𑌿 । 𑌅𑌥𑌾𑌪𑌿 𑌨 𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃
𑌪𑌤𑌤𑌿। 𑌤𑌦𑍇𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌙𑍍𑌗𑌹𑍀𑌨𑍋𑌽𑌪𑌿 𑌹𑌿 𑌸𑌾𑌙𑍍𑌗𑌂
𑌜𑌨𑌯𑌤𑍀𑌤𑌿 ॥ ௧௦ ॥

பதிதர்களாயிருந்து ப்ராயஶ்சித்தம் செய்துகொண்ட பிறகும் ஸம்ஸர்க்க அனர்ஹர்களாக நிர்ணயிக்கப்பட்ட தோஷிகள் பற்பல விதமாயிருப்பவர்கள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குள் தர்மங்களை

அனுஷ்டிக்கலாம். அவர்களுள் பரஸ்பரம் விவாஹம் செய்து கொண்டும், யாஜனம், அத்யாபனம் செய்துகொண்டும் கலந்து கொள்ளலாம். பிள்ளைகளை உத்பத்தி செய்த பிறகு அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டும். "பிள்ளைகளே! நீங்கள், பதிதர்களான எங்களை விட்டுப் பிரிந்து போய்விடுங்கள். இப்படிப் பிரிந்தால் நீங்கள் ஆர்யர்களுடன் கலந்துகொள்வீர்கள்" என்று. பதித புத்ரர்கள் பிரிந்து போய்விட்டால் சுத்தர்களாக நினைக்கப்படுவார்கள். ஆனால் பதிதன் பிள்ளையும் பதிதனல்லவா, என்ற கேள்விக்குப் பதில் கூறப் படுகிறது. ஒருவன் பதிதனானாலும் அவன் இந்த்ரியத்துடன் (சுக்லம்) பதிதனாகிறதில்லை. ஆகையால் அவனுடைய சுக்லம் சுத்தம். அதில் பிறந்தவனும் சுத்தன். ஆனால் ஸம்ஸர்க்கமில்லாமல் விலகிவிடவேண்டும். சுக்லம் தோஷமாகிறதில்லை என்பதற்கு உதாஹரணம் — ஒருவன் அங்கஹீனனாயிருந்தாலும் அவனுக்குப் பிறக்கும் பிள்ளை பூர்ண அங்கமுள்ளவனாயிருப்பதைக் காண்கிறோம். ஆதலால் சுக்லம் தோஷமாகிறதில்லை, என்று தெரிகிறது.

𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌤𑌦𑌿𑌤𑌿 𑌹𑌾𑌰𑍀𑌤𑌃 । 𑌦𑌧𑌿𑌧𑌾𑌨𑍀𑌸𑌧𑌰𑍍𑌮𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌭𑌵𑌤𑌿
𑌯𑍋 𑌹𑌿 𑌦𑌧𑌿𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌮𑌪𑍍𑌰𑌯𑌤𑌂 𑌪𑌯 𑌆𑌤𑌚𑍍𑌯 𑌮𑌨𑍍𑌥𑌤𑌿 𑌨 𑌤𑌚𑍍
𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 𑌧𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍𑌯𑍇𑌷𑍂𑌪𑌯𑍋𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 । 𑌏𑌵𑌮𑌶𑍁𑌚𑌿 𑌶𑍁𑌕𑍍𑌲𑌂
𑌯𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌨 𑌤𑍇𑌨 𑌸𑌹 𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

ஆனால் மேற்சொன்னது விருத்தமென்று ஹாரீதஆசார்யர் நினைக்கிறார். ஏனெனில், ஸ்த்ரீகள் தயிர்கடையும் பாத்திரத்திற்கு ஸமமாவார்கள். அந்தத் தயிர்ச்சட்டியில் அசுத்தமான பாலைத் தோய்த்துக் கடைந்தால் அந்தத் தயிரைச் சிஷ்டர்கள் தர்மகார்யங்களுக்கு உபயோகிக்கமாட்டார்கள். இவ்வாறு அசுத்தமான சுக்லம் தரித்த ஸ்த்ரீயிடம் பிறந்தவனும் அசுத்தனே. அவனுடன் கலப்புக் கிடையாது.

𑌅𑌶𑍁𑌚𑌿𑌶𑍁𑌕𑍍𑌰𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌤𑍇𑌷𑌾𑌮𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌿𑌃 ।
𑌪𑌤𑌨𑍀𑌯𑌾𑌨𑌾𑌂 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌂𑌶𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌂𑌶𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 ॥ ௧௨ ॥

மேற்கண்டபடி அசுத்த சுக்லத்திலிருந்து பிறந்தவர்கள் இஷ்டப்பட்டால் அவர்களுக்கு ப்ராயஶ்சித்தம் உண்டு. பதநீயதோஷங்களுக்குச் சொல்லப்பட்ட ப்ராயஶ்சித்தத்தில் மூன்றிலொரு பாகம் செய்யவும். ஸ்த்ரீயாயிருந்தால் அதில் மூன்றில் ஒரு பாகம்.

𑌭𑍋𑌜𑌨𑌾𑌭𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑌾𑌦𑍍𑌦𑌾𑌨𑌾𑌦𑍍 𑌯𑌦𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌿𑌲𑍈𑌃 ।
𑌶𑍍𑌵𑌵𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌕𑍃𑌮𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑌿𑌤𑍃𑌭𑌿𑌸𑍍𑌸𑌹 𑌮𑌜𑍍𑌜𑌤𑌿 ॥ 𑌇𑌤𑌿 ॥

எள் ஸம்பந்தமான விதி சொல்லப்படுகிறது. போஜனம், அப்யங்கம், தானம் ஆகிய மூன்று கார்யங்களுக்கு மட்டுமே எள்ளை உபயோகிக்கலாம். இம்மூன்று தவிர மற்றக் கார்யங்களுக்கு க்ரய விக்ரயாதிகளுக்கு அதை உபயோகித்தால் ச்வ விஷ்டையில் க்ரிமியாகப் பிறந்து பித்ருக்களுடன் மூழ்கிப்போவான்.

வித்ரூநு வா ஷை விக்ரீணீதெ யஸ்திலாநு விக்ரீணீதெ ।
ப்ராணாநு வா ஷை விக்ரீணீதெ யஸ்தண்டுலாநு விக்ரீணீதெ ॥

எவன் எள்ளை விற்கிறானோ அவன் பித்ருக்களை விற்பவனாகிறான். எவன் தண்டுலங்களை (அரிசி) விற்கிறானோ அவன் தனது ப்ராணனை விற்பவனாகிறான்.

ஸுக்ருதாம்ஸ்தாநு வா ஷை விக்ரீணீதெ யஃ பணமானோ துஹிதரம் ததாதி ॥ ௧௫ ॥

எவன் விலை கூறித் தன் பெண்ணை மற்றொருவனுக்குக் கொடுக்கிறானோ அவன் தனது புண்யாம்சங்களையே விற்பவனாகிறான்.

த்ருணம் காஷ்டமவிக்ருதம் விக்ரேயம் ॥ ௧௬ ॥

புல், காஷ்டம் இவைகளை விற்கலாம். ஆனால் அவைகளால் செய்த வஸ்துவை விற்கக் கூடாது.

அதாப்யுதாஹரந்தி—

பசவ ஏகதொதந்தாஃ அச்மா ச லவணோத்ருதஃ ।
ஏதத் ப்ராஹ்மண தெ பண்யம் தந்துச்சாரஜநீக்ருதஃ ॥ இதி ॥

ப்ரம்ஹா ப்ராம்ஹணனிடம் சொல்லுகிறார். ப்ராம்ஹணரே! உமக்கு, கொம்புள்ளம்ருகம், ஒருபக்கம் பல் உள்ள ம்ருகம், உப்பு நீங்கலாக கல்லுகள், சாயம் ஏற்றப்படாத நூல் இவைகள் விற்கத் தக்கவையென்று சிஷ்டர்கள் சொல்லுகிறார்கள், என்று.

பாதகாபண்யம் வா விக்ரீய லோஹிதம் லோமசம் ஸுவர்ணவர்ணம் வா பசும் ஸர்பிஷாऽக்தம் க்ருஷ்ணதிலைரவகீர்ய ப்ராஹ்மணாய தத்யாத் ॥ ௧௭ ॥

விற்கக்கூடாத வஸ்துவை விற்றால், சிவப்பு, அல்லது பொன் நிறமுள்ள ரோமம் அடர்ந்ததான பசுவை நெய்யால் பூசி, க்ருஷ்ண திலங்களால் இரைத்து, வேதாத்யயனம் செய்த ப்ராம்ஹண

னுக்குக் கொடுக்கவும். இது பாதக தோஷமில்லாத ஸாதாரண தோஷங்களில்.

கூமிஸ்ூாணெ்ணுவ-ா ாஉஶாஹு ॥ கக ॥

அல்லது கூச்மாண்ட மந்த்ரங்களால் ஹோமம் பன்னிரண்டு நாள் செய்யவும்.

யஉவ-ாவீ நஜெஜெநா ஹ ஙணஹத்யாயாஸுஸூாநூவ்வுத ஜதி ॥

ப்ரூணஹத்தி வரையில் உள்ள எல்லாப் பாபங்களிலிருந்தும் கூச்மாண்டஹோமம் செய்தவன் விடுபடுகிறான் என்று ச்ருதி.

வாதகாஹிஶஂஸநெ க்ருவு: ॥ உக ॥

ஒருவனைப் பாதகியென்று ஜனங்கள் அபவாதமாகக் கூறினாலும், (உண்மையாகப் பாதகியில்லாவிட்டாலும்) அபவாததோஷத்திற்காக ப்ராஜாபத்யக்ருச்ரம் செய்யவும்.

தஉவெொZஹிஶஂஹி தா: ॥ உஉ ॥

பாதகியல்லாதவனைப் பாதகியாக அபவாதம் செய்தவன் அந்த க்ருச்ரம் ஒரு வர்ஷம் செய்யவும். அபவாதம் சொன்ன தோஷத்திற்காக.

ஸஂவகஸுரெண வதகி வதிகெந ஸஹாவராு ।
யாஜநாஜ்யாவநாஉ்ளநாகூ நதா யாநாஸநாஶநாஉிதி ॥

பாநம், ஆஸநம், போஜநம் இவைகளைப் பதிதனுடன் செய்தால் ஒரு வர்ஷத்தில் பதிதனாகிறான். யாஜநம், அத்யாபனம், யௌநம் இவைகளைச் செய்தால் உடனேயே பதிதனாகிறான். (பெண்ணைக் கொடுப்பதும் வாங்குவதும் யௌநம்.)

கூமெஜ்யப்ராஶநெ வூாயஸ்ிதஂ நெஷுரீஷவு । தகூ
ஸவுராஹெ்ணாவாவுதெ । கூவ: வயொ வுதஂ வராகூ
ஜதி வூதிக்ருஹூஷாநி ஸ தவக்ருவு: ॥ உச ॥

அமேத்யத்தைச் சாப்பிட்டுவிட்டால் அதற்கு ப்ராயஸ்சித்தம் வயிற்றில் புரீஷமில்லாமல் செய்துகொள்வது. அந்த நிலைமை ஏழு தினங்களில் ஏற்படும்.

தப்தக்ருச்ரமாவது:--ஜலம், பால், க்ருதம் இவைகளை மட்டும் உஷ்ணமாகத் தனித்தனியாக மூன்று மூன்றுநாள் சாப்பிடுவது.

மறு மூன்று நாள்களில் உபவாஸம். இவ்வாறு பன்னிரண்டு நாள் வ்ரதமிருப்பது தப்தக்ருச்ரமாகும்.

த்ர்யஹம் ப்ராதஸ்தயா ஸாயம் த்ர்யஹமந்யதயாசிதம் ।
த்ர்யஹம் பரம் து நாஶ்நீயாத் பராக இதி க்ருச்ச்ர: ॥ ௨௫ ॥

பராக க்ருச்ரமாவது:— மூன்று நாள் பகல் மட்டும், மூன்று நாள் ராத்ரிமட்டும் போஜனம். மறு மூன்று நாள் தானாகக் கிடைத்ததைச் சாப்பிடவும். அதன்பின் மறு மூன்று நாள் ஒன்றும் சாப்பிடாமல் உபவாஸம். இவ்வாறு பன்னிரண்டு நாள் வ்ரதம் பராக க்ருச்ரம்.

ப்ராதஸ்ஸாயமயாசிதம் பராக இதி த்ரயஶ்சதுரா த்ரா:
ஸ வத்ஸ ஸ்த்ரீபாலவ்ருத்தாநாம் க்ருச்ச்ர: ॥ ௨௬ ॥

பகல் ஒரு நாள் போஜனம், இரவு ஒரு நாள். மூன்றுவது நாள் தானாகக்கிடைத்தது. நான்காவது நாள் உபவாஸம். ஆக நான்கு தினங்களில் செய்யப்படும் க்ருச்ரம் ஸ்த்ரீ, பாலர், வ்ருத்தர் இவர்களுக்கு.

யாவத்ஸக்ருதாததீத தாவதஶ்நீயாத் பூர்வவத் ஸோऽதிக்ருச்ச்ர: ॥

முன் சொன்னபடியே த்வாதசாஹ வ்ரதத்தில், போஜநம் செய்யும்போது ஒரே தடவையில் எவ்வளவு அந்நம் கையில் எடுக்க முடியுமோ அவ்வளவை மாத்ரம் சாப்பிடுவது அதிக்ருச்ரமெனப்படும்.

அப்பக்ஷஸ்த்ருதீய: ஸ க்ருச்ச்ராதிக்ருச்ச்ர: ॥ ௨௮ ॥

மேற்சொன்ன த்வாதசாத்ர க்ருச்ரத்தையே பன்னிரண்டு நாளும் ஜலபானம் மட்டும் செய்து அநுஷ்டிப்பது க்ருச்ராதிக்ருச்ரமாகும். இது மூன்றுவது விதமான த்வாதசாத்ர விதி.

க்ருச்ச்ரே த்ரிஷவணமுதகோபஸ்பர்ஶநம் ॥ ௨௯ ॥

மேற்கண்ட க்ருச்ரங்களையோ வேறு விதங்களையோ அநுஷ்டித்து வ்ரதமிருக்கையில் மூன்று வேளை ஸ்நானம் செய்யவேண்டியது பொதுவான விதி.

அதஶ்ஶயநம் ॥ ௩0 ॥

பூமியில் படுத்துக்கொள்ளுவதும் பொதுவான விதி.

𑌏𑌕𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌾 𑌕𑍇𑌶𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌲𑍋𑌮𑌨𑌖𑌵𑌾𑌪𑌨𑌮𑍍 ॥ ௫௧ ॥

ப்ராயஸ்சித்த வ்ரதமனுஷ்டிக்கையில் ஒரு வஸ்த்ரம்தான் தரிக்கலாம், உத்தரீயமில்லை. மேலும், கேசம், ச்மச்ரு, லோமம், நகம் இவைகளை வபநம் செய்துகொள்ளவும். இதுவும் பொதுவான விதி.

𑌏𑌤𑌦𑍇𑌵 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌕𑍇𑌶𑌵𑌪𑌨𑌵𑌰𑍍𑌜𑌂 𑌕𑍇𑌶𑌵𑌪𑌨𑌵𑌰𑍍𑌜𑌮𑍍 ॥

மேற்கண்ட ப்ராயஸ்சித்த வ்ரதமானது யாவத்தும் ஸ்த்ரீகளுக்கும் பொதுவானது. ஆனால் கேச வபநாதிகள் நீங்கலாக.

𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

முதலாவது அத்யாயம் முற்றிற்று.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

இரண்டாவது ப்ரஸ்னம்—இரண்டாவது அத்யாயம் மூன்றாவது கண்டம்.

𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌦𑌕𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑍀 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍀 𑌵𑍃𑌷
𑌲𑌾𑌨𑍍𑌨𑌵𑌰𑍍𑌜𑍀 । 𑌋𑌤𑍌 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍 𑌵𑌿𑌧𑌿𑌵𑌚𑍍𑌚 𑌜𑍁𑌹𑍍𑌵𑌨𑍍 𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮
𑌣𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌾𑌤𑍍 ॥ ௧ ॥

நித்யம் ஸ்நானம் செய்கிறவனும், அல்லது நித்யமாகக் கமண்டலம் தரிப்பவனும், எப்போதும் யஜ்ஞோபவீதியாயிருப்பவனும், நித்யமாக வேதாத்யயனம் செய்பவனும், சூத்ரான்ன வர்ஜனம் செய்பவனும், ஸ்வபார்யையிடம் ருதுகாலத்தில் ப்ரவேசிப்பவனும், ப்ரதிதினமும் ஹோமம் செய்பவனுமான ப்ராம்ஹணன் ப்ரம்ஹ லோகத்திலிருந்து நழுவமாட்டான்; ப்ரம்ஹலோகம், ப்ராப்ஹைறக்யம் எல்லாம் பெறுவான். குறைந்த பக்ஷமாக இவ்வளவு தர்மங்களைச் செய்தாலும் முக்தியென்று கருத்து.

𑌮𑌨𑍁𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑌾𑌯𑌂 𑌵𑍍𑌯𑌭𑌜𑌦𑌿𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ॥ ௨ ॥

இனி தாயவிபாகம் (ஸ்வத்துப் பிரிவினை) சொல்லப்படுகிறது. ச்ருதியில் "மனுவானவர் தம் பிள்ளைகளுக்குத் தாயவிபாகம் செய்துகொடுத்தார்" என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அது தர்மம்.

𑌸𑌮𑌾𑌂𑌶𑌾 𑌵𑌾𑌽𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 ॥ ௩ ॥

ஆகையால் ஒருவனுக்கு எவ்வளவு பிள்ளைகளிருந்தாலும் எல்லோருக்கும் ஸமமாக விபாகம் உண்டு. பிள்ளைகளில் வ்யத்யாஸமில்லாமையால் வேதம் பொதுவாக விசேஷிக்காமல் சொல்லுவதால்.

𑌵𑌰𑌂 𑌵𑌾 𑌰𑍂𑌪𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌜𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌃 ॥ ௪ ॥

அல்லது ஜ்யேஷ்டன் மட்டும் உயர்ந்த த்ரவ்யத்தைப் பாகமாக அடையலாம்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌧𑌨𑍇𑌨 𑌨𑌿𑌰𑌵𑌸𑌾𑌯𑌯𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 ॥

மேற்கண்டவாறு செய்ய ச்ருதிப்ரமாணம் காணப்படுகிறது. ஜ்யேஷ்ட புத்ரனுக்குத் தனத்தை ஓதுக்கவேண்டுமென்று ச்ருதி கூறுவதால் ஏகதேசம் தனியாக ஒதுக்கலாம்.

𑌦𑌶𑌾𑌨𑌾𑌂 𑌵𑍈𑌕𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌜𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌃 ॥ ௬ ॥

பத்தில் ஒரு பாகத்தை ஜ்யேஷ்டன் தனிப்படுத்தி அடையலாம். இந்த அதிகப்படி சலுகை ஸத்புத்ர விஷயம்.

𑌸𑌮𑌮𑌿𑌤𑌰𑍇 𑌵𑌿𑌭𑌜𑍇𑌰𑌨𑍍 ॥ ௭ ॥

பாக்கியுள்ளதை மற்றப் புத்ரர்கள் ஸமமாக விபாகம் செய்து கொள்ளவும்.

𑌪𑌿𑌤𑍁𑌰𑌨𑍁𑌮𑌤𑍍𑌯𑌾 𑌦𑌾𑌯𑌵𑌿𑌭𑌾𑌗𑌃 𑌸𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑌿 ॥ ௮ ॥

பிதா உயிருடனிருந்தால் அவனிஷ்டப்படி தாயவிபாகம் செய்துகொள்ளுவது தர்மம். அவனிஷ்டத்தை மீறக்கூடாது.

𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌗𑍋𑌽𑌶𑍍𑌵𑌾𑌜𑌾𑌵𑌯𑍋 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌃 ॥ ௯ ॥

பசு, அச்வம், ஆடு முதலியவையிருந்தால் அவைகள் ஜ்யேஷ்டாம்சமாகக் கொடுபடவேண்டும். இது நான்கு வர்ணத்துக்கும் பொது விதி.

𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑌮𑌵𑌾𑌯𑍇 𑌦𑌾𑌯𑌂 𑌦𑌶𑌾𑌂𑌶𑌾𑌨𑍍
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌚𑌤𑍁𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌵𑍇𑌕𑌮𑌿𑌤𑌿 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 𑌵𑌿𑌭𑌜𑍇𑌰𑌨𑍍 ॥

ஒருவனுக்குப் பல வர்ணங்களில் பிறந்த புத்ரர்கள் இருந்தால், ஸ்வத்தைப் பத்துப் பங்காகப் பிரித்து, அதில் நான்கு பாகத்தை ப்ராம்ஹணனுக்கும், பாக்கியுள்ள ஆறு பாகத்தில் க்ஷத்ரியா புத்ரனுக்கு மூன்று பாகம், பாக்கி மூன்றில் வைஸ்யனுக்கு இரண்டு, சூத்ரனுக்கு ஒன்று என்று விபாகம் செய்யவும்.

𑌔𑌰𑌸𑍇 𑌤𑍂𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍇 𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌂𑌶𑌹𑌰𑌾𑌃 ॥ கக ॥

ஔரஸ ஸவர்ணபுத்ரன் பிறந்தால் அஸவர்ணர்கள் மூன்றில் ஒரு பாகம் பெறத்தக்கவர்கள். முன் ஸூத்ரத்தில் சொல்லியபடி.

𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑌨𑌨𑍍𑌤𑌰𑌾𑌪𑍁𑌤𑍍𑌰
𑌶𑍍𑌚𑍇𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍 𑌸 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌂𑌶𑌂 𑌹𑌰𑍇𑌤𑍍 ॥ கஉ ॥

ஸவர்ண புத்ரன், அடுத்த க்ஷத்ரிய ஜாதி ஸ்த்ரீக்குப் பிறந்த அனந்தராபுத்ரன் இவர்களில் அநந்தராபுத்ரன் குணவானாக இருந்தால் அவன் ஜ்யேஷ்டாம்சத்தையும் பெறலாம். வித்யா சீலாதிகள் குணங்கள்.

𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍𑌹𑌿 𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿 ॥ கங ॥

குணமுள்ளவனல்லவோ மற்றவர்களைப் பரிக்கக்கூடியவன். ஆகையால் அவன் ஜ்யேஷ்டாம்சம் பெற அர்ஹதையுள்ளவன்.

𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌯𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍌𑌰𑌸𑌂
𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ கச ॥

விவாஹ ஸம்ஸ்காராதிகளால் ஏற்பட்ட ஸவர்ண ஸ்த்ரீயிடம் பிறந்தவனையே ஔரஸபுத்ரன் என்று அறியவும். க்ஷேத்ரஜன் முதலியவன் ஔரஸனாகமாட்டான்.

𑌅𑌭𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯 𑌵𑌾 𑌦𑍁𑌹𑌿𑌤𑌰𑌿 𑌜𑌾𑌤𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌨𑍍𑌯𑌂
𑌦𑍌𑌹𑌿𑌤𑍍𑌰𑌮𑍍 ॥ கரு ॥

பெண்ணைக் கொடுக்கும்போது இவளிடம் பிறப்பவன் எனக்கும் புத்ரன், என்று சொல்லி அங்கீகரித்துப் பிறந்தவன் புத்ரிகாபுத்ரன் எனப்படுகிறான். அந்த ஸங்கேதமின்றி, பெண்ணுக்கு ஸாதாரணமாகப் பிறந்தவன் தௌஹித்ரன்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿—
𑌆𑌦𑌿𑌶𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌪𑌿𑌣𑍍𑌡𑍇 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌸𑍁𑌤𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌪𑌿𑌤𑌰𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌤𑍁 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ॥𑌇𑌤𑌿॥

புத்ரிகாபுத்ரன் பிண்டதானம் செய்யும் முறையைப் பற்றிச் சிஷ்டர்கள் கூறுவதாவது:— புத்ரிகாபுத்ரன் முதல் பிண்டத்தில் மாதாவையும், இரண்டாவதில் அவளுடைய பிதாவையும், மூன்றாவதில் பிதாமஹனையும் உத்தேசித்துக் கொடுக்கவேண்டும் என்று.

𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍋 𑌯𑌃 𑌕𑍍𑌲𑍀𑌬𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌤𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑍇𑌨𑌾𑌨𑍁
𑌮𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑌃 ॥ கஎ ॥

விவாஹத்தினால் க்ரஹிக்கப்பட்ட பார்யையிடம், பர்த்தா இறந்த காரணமாகவோ, அல்லது நபும்ஸகத்வம், வ்யாதி இவை காரணமாகவோ அவன் அநுமதி பெற்று அந்யனால் உற்பத்தி செய்யப்பட்டவனுக்கு க்ஷேத்ரஜன் என்று பெயர்.

𑌸 𑌏𑌷 𑌦𑍍𑌵𑌿𑌪𑌿𑌤𑌾 𑌦𑍍𑌵𑌿𑌗𑍋𑌤𑍍𑌰𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑌪𑌿 𑌸𑍍𑌵𑌧𑌾𑌰𑌿𑌕𑍍𑌥𑌭𑌾𑌗𑍍𑌭𑌵𑌤𑌿 ॥ ௧௮ ॥

அந்த க்ஷேத்ரஜ புத்ரன் இரண்டு பிதாவுள்ளவன். இரண்டு கோத்ரமுள்ளவன். இரண்டு பிதாவுக்கும் ச்ராத்தாதிகள் செய்கிறவனும், இரண்டிடத்திலும் தாயபாகம் பெற அர்ஹனுமாகிறான்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿—

𑌦𑍍𑌵𑌿𑌪𑌿𑌤𑌾 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌿𑌣𑍍𑌡𑍇 𑌪𑌿𑌣𑍍𑌡𑍇 𑌚 𑌨𑌾𑌮𑌨𑍀 ।
𑌤𑍍𑌰𑌯𑌶𑍍𑌚 𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌃 𑌷𑌣𑍍𑌣𑌾𑌂 𑌸𑍍𑌯𑍁𑌰𑍇𑌵𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨 𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 ॥ ௧௯ ॥

இரண்டு பிதா உள்ள க்ஷேத்ரஜன் பிண்டதானம் செய்கையில் ஒவ்வொரு பிண்டத்திலும் க்ஷேத்ரியான பிதா, உற்பத்தி செய்த பிதா இருவர் பெயர்களையும் சொல்லவும். அம்மாதிரி செய்வதால் ஆறு பேர்களுக்கும் மூன்று பிண்டங்களைப் போடவேண்டும். இப்படிச் செய்தால் தவறு ஏற்படாதென்று சொல்லுகிறார்கள்.

𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂 𑌦𑌤𑍍𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌯𑍋𑌽𑌪𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌸 𑌦𑌤𑍍𑌤𑌃 ॥ ௨௦ ॥

மாதா பிதாக்களாலாவது, அல்லது அவ்விருவரில் ஒருவராலாவது கொடுக்கப்பட்டு, புத்ரனாகப் பரிக்ரஹிக்கப்படுகிறவன் "தத்தன்" என்பவன்.

𑌸𑌦𑍃𑌶𑌂 𑌯𑌂 𑌸𑌕𑌾𑌮𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸 𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌃 ॥ ௨௧ ॥

ஜாதி முதலியவைகளில் ஸமானமானவனும், பிள்ளையாக வர விருப்பமுள்ளவனுமான ஒருவனை, தானாகவே ஒருவன் பிள்ளையாக்கிக்கொண்டால் அவன் "க்ருத்ரிம" புத்ரன்.

𑌗𑍃𑌹𑍇 𑌗𑍂𑌢𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌗𑍂𑌢𑌜𑌃 ॥ ௨௨ ॥

க்ருஹத்தில் ரஹஸ்ய ஸம்ஸர்க்கத்தால் ஒரு ஸ்த்ரீயிடம் பிறந்து, பிறகு அது வெளிப்பட்டு அறியப்பட்டவன் "கூடஜன்" (ரஹஸ்யத்தில் பிறந்தவன்).

𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌯𑍋𑌽𑌪𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌸𑍋𑌽𑌪𑌵𑌿𑌦𑍍𑌧𑌃 ॥ ௨௩ ॥

Q1:44 N52

மாதா பிதாக்களால் அல்லது அவர்களில் ஒருவரால் பரித்யாகம் செய்யப்பட்டுத் தள்ளப்பட்டவனை ஒருவன் தனக்குப் பிள்ளையாகப் பரிக்ரஹித்தால் அவன் "அபவித்த" புத்ரனுவான்.

சுஸம்ஸ்க்ருதாஉநதிஸ்ருஷ்டாம் யாஉபயச்சேத தஸ்யாம்
யொ ஜாதஃ ஸ காநீநஃ ॥ ௨௪ ॥

விவாஹ ஸம்ஸ்காரமாகாதவளும், பெரியோர்களால் அநுமதிக்கப்படாதவளுமான ஸ்த்ரீயைப் பரிக்ரஹித்து அதில் பிறந்தவன் "காநீநன்" என்ற புத்ரன்.

யா கர்பிணீ ஸம்ஸ்க்ரியதெ விஜ்ஞாதா வாவிஜ்ஞாதா வா
தஸ்யாம் யொ ஜாதஃ ஸ ஸஹொடஃ ॥ ௨௫ ॥

கர்ப்பிணி என்று வெளிப்படாத நிலைமையில் ஒருத்தியை விவாஹம் செய்துகொண்டால், தெரிந்தோ தெரியாமலோ அவளிடம் உண்டானவன் "ஸஹோடன்" என்ற புத்ரன்.

மாதாபித்ரோர்ஹஸ்தாத் க்ரீதொऽந்யதரேண வா யொ
ऽபத்யார்தெ பரிக்ருஹ்யதெ ஸ க்ரீதஃ ॥ ௨௬ ॥

தாயார் தகப்பனார், அல்லது இருவரில் ஒருவரால் கையால் விற்கப்பட்டு, புத்ரார்த்தமாக விலைக்கு வாங்கப்பட்டவன் 'க்ரீதன்'.

க்லீபம் த்யக்த்வா பதிதம் வா யா அந்யம் பதிம் விந்தெத
தஸ்யாம் புநர்பவாம் யொ ஜாதஃ ஸ பௌநர்பவஃ ॥ ௨௭ ॥

நபும்ஸகன் அல்லது பதிதனை பார்த்தாவை விட்டு விட்டு வேறு ஒரு பார்த்தாவை ஒருத்தி அடைந்தால், அவளிடம் உண்டானவன் "பௌநர்பவன்".

மாதாபித்ருவிஹீநொ யஃ ஸ்வயமாத்மாநம் தத்யாத் ஸ ஸ்வயந்தத்தஃ ॥

தாய் தகப்பனில்லாத ஒருவன் தன்னைத் தானுகவே பிறருக்குக் கொடுத்தால் அவன் "ஸ்வயம்தத்தன்".

த்விஜாதிப்ரவராச் சூத்ராயாம் ஜாதொ நிஷாதஃ ॥ ௨௯ ॥

த்விஜாதியிடமிருந்து சூத்ர ஸ்த்ரீக்குப் பிறந்தவன் "நிஷாதன்".

காமாச் ச பாரசவ இதி புத்ராஃ ॥ ௩௦ ॥

சூத்ரையிடம் கேவல காமத்தினுல் த்விஜாதிக்குப் பிறந்தவன் "பாரசவன்". இவ்வாருகப் புத்ரப் பிரிவுகள் சொல்லப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

अथाप्युदाहरन्ति —

औरसं पुत्रिकापुत्रं क्षेत्रजं दत्तकृत्रिमौ ।
गूढजं चापविद्धं च रिक्थभाजः प्रचक्षते ॥ ३१ ॥
कानीनं च सहोढं च क्रीतं पौनर्भवं तथा ।
स्वयंदत्तं निषादं च गोत्रभाजः प्रचक्षते ॥ ३२ ॥

மேலே சொல்லிய புத்ரர்களுள் ஔரஸன், புத்ரிகாபுத்ரன், க்ஷேத்ரஜன், தத்தன், க்ருத்ரிமன், கூடஜன், அபவித்தன் ஆகியவர்கள் கோத்ர பாகிகளாயும், தாய பாகிகளாயும் ஆவார்கள். காநீநன், ஸஹோடன், க்ரீதன், பௌனர்பவன், ஸ்வயம்தத்தன், நிஷாதன் ஆகியவர்கள் கேவலம் கோத்ரபாகிகள் மட்டுமே. தாயபாகிகளல்லர் என்று சிஷ்டர்கள் சொல்லுகிறார்கள்.

तेषां प्रथम एवेत्याहौपजङ्घनिः ॥ ३३ ॥

ஔபஜங்கநி என்ற ஆசார்யர், மேற்கண்ட புத்ரர்களில் ஔரஸன் ஒருவன் மட்டுமே புத்ரனாவான், மற்றவர்கள் புத்ரர்களாகார்கள், என்று சொல்லுகிறார்.

इदानीमहमीर्ष्यामि स्त्रीणां जनक नो पुरा ।
यदा यमस्य सदने जनयितुः पुत्रमब्रुवन् ॥ ३४ ॥

பிறஸ்த்ரீயிடம் பிறந்த ப்ரஜையானது உற்பத்தி செய்தவனைச் சேர்ந்ததா, அல்லது க்ஷேத்ரியைச் சேர்ந்ததா என்று யமலோகத்தில் சர்ச்சை நடந்ததில், உற்பத்தி செய்தவனையே ப்ரஜை சேர்ந்ததென்று சொன்னார்கள். அன்று முதல் நான் பிறஸ்த்ரீகளைக் கண்டு (க்ஷேத்ரத்தை) அஸூயைப்படுகிறேன். ஓ ஜநக! அதற்கு முன் அப்படியில்லை.

रेतोधाः पुत्रं नयति परेत्य यमसादने ।
तस्माद्भार्यां रक्षन्ति बिभ्यन्तः पररेतसः ॥ ३५ ॥

இறந்த பின் யமலோகத்தில் (ப்ரேதகர்மாவில்) அந்தப் புத்ரனை ரேதஸ்ஸேகம் செய்தவனே தன் பிள்ளையென்று கொண்டுபோய் விடுகிறான். ஆகையால் க்ஷேத்ரிகளாகிய புருஷர்கள் பிறருடைய ரேதஸ் ஸம்பந்தம் ஏற்படாதவாறு தமது பார்யைகளைப் பாதுகாக்கிறார்கள்.

अप्रमत्ता रक्षथ तन्तुमेतं मा वः क्षेत्रे पर
बीजानि वाप्सुः । जनयितुः पुत्रो भवति साम्प
राये मोघं वेत्ता कुरुते तन्तुमेतमिति ॥ ३६ ॥

ஆகையால் சிஷ்யர்களே! உங்களுடைய ப்ரஜா ஸந்ததியைத் தவறு ஏற்படாமல் ஜாக்ரதையாகப் பாதுகாப்பீராக. உங்களுடைய க்ஷேத்ரத்தில் (பார்யை) பிறருடைய பீஜங்கள் விதைக்கப்பட வேண்டாம். ஏனெனில் பரலோகத்தில் அந்தப்பிள்ளை உற்பத்தி செய்தவனுடைய பிள்ளையாகி விடுகிறான். க்ஷேத்ரத்தை ஆளுகிறவன் இந்தத் தந்துவை(ஸந்ததியை)வீணாக்குகிறான், இழக்கிறான்.

தேஷாமப்ராப்தவ்யவஹாராணாமம்ஶாந் ஸோபசயாந்
ஸுநிகுப்தாந் நிதத்யுராவ்யவஹாரப்ராபணாத் ॥ ௧௭ ॥

புத்ரர்கள் பாலர்களாயும், லோக வ்யவஹாரங்களில் கலக்க அர்ஹதையில்லாத வயதுள்ளவர்களாயுமிருந்தால், அவர்கள் வ்யவஹாரார்ஹ சக்தி பெறும் வரையில் (யௌவநம்) அவர்களுடைய பாகத்தை வட்டியுடன் ஜாக்ரதையாக ரக்ஷித்து வரவேண்டும்.

அதீதவ்யவஹாராந் க்ராஸாச்சாதநைர் பிப்ருயு: । ௧௮ ।
அந்தஜடக்லீபவ்யஸநிவ்யாதிதாதீம்ஶ்ச ॥ ௧௯ ॥
அகர்மிண: ॥ ௨௦ ॥　　பதிததஜ்ஜாதவர்ஜம் ॥ ௨௧ ॥

வயது வந்தும் குடும்ப வ்யவஹாரங்களைக் கவனிக்காதவர்களை ஆஹாரம் வஸ்த்ரம் மட்டும் கொடுத்து ரக்ஷிக்கவும். அம்சத்தைக் கொடுக்க வேண்டாம்.

அதுபோல் கண் இல்லாதவன், ஜடன், நபும்ஸகன், சூதாட்டம் செய்கிறவன், தீராத வ்யாதியுள்ளவன், கார்ய ச்ரத்தையில்லாமல் வீணாகத் திரிகிறவன் இவர்களுடைய தாயபாகத்தையும் கொடுக்காமல் ரக்ஷித்து வரவும். அவர்களுக்கு ஆஹார வஸ்த்ராதிகள் மட்டும் கொடுக்கவும். பதிதன், அவன் பிள்ளை நீங்கலாக.

ந பதிதை: ஸம்வ்யவஹாரோ வித்யதே ॥ ௨௨ ॥

பதிதர்களான புத்ராதிகளுடன் கலப்பு செய்யக்கூடாது. அவர்களுக்கு ஆஹாராதிகள் மட்டும் கொடுக்க வேண்டும்.

பதிதாமபி து மாதரம் பிப்ருயாதநபிபாஷமாண: ॥ ௨௩ ॥

தாயார் பதிதையாகிவிட்டாலும் அவளைப் பரிக்கவேண்டும். அவளுடன் ஸல்லாபம் செய்யாமலே.

மாதுரலங்காரம் துஹிதர: ஸாம்ப்ரதாயிகம் லபேரந்நந்யத்வா ॥ ௨௪ ॥

மாதாவுக்குப் பரம்பரையாகக் கிடைத்த அலங்காரங்களை (ஆபரணாதிகள்) பெண்கள் அடையவேண்டும். தாயாருடைய வேறு வஸ்துக்களையும்.

ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யம் விந்ததே । ௪௫ ॥

தாயக்ரமமாகக் கிடைத்த பாகத்தை விநியோகிக்க ஸ்த்ரீக்கு ஸ்வாதந்த்ரியமில்லை. தன்னுடைய அலங்காராதிகளில் மட்டுமுண்டு.

அதாப்யுதாஹரந்தி —

பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவனே ।
புத்ரஸ்து ஸ்தாவிரே பாவே ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதீதி ॥ ௪௬ ॥

கந்யாவஸ்தையில் பிதாவும், யௌவனத்தில் பர்த்தாவும், வயது சென்ற காலத்தில் புத்ரனும் ஸ்த்ரீகளைப் பாதுகாக்க வேண்டும். ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ரியம் அர்ஹமில்லையென்று சிஷ்டர்கள் கூறுகிறார்கள்.

நிரிந்த்ரியா ஹ்யதாயாஶ்ச ஸ்த்ரியோ மதா இதி ஶ்ருதி: ॥ ௪௭ ॥

ஸ்த்ரீகள் ஸ்வாதந்த்ரியமில்லாதவர்கள், தாயம் என்கிற குடும்ப பாகமுமில்லாதவர்கள் என்று ச்ருதி கூறுகிறது.

பர்த்ருஹிதே யதமானா: ஸ்வர்கம் லோகம் ஜயேரன் ॥ ௪௮ ॥

ஸ்த்ரீகள் பர்த்தாவின் ஹிதங்களிலேயே முயற்சியுள்ளவர்களாயிருந்தால் ஸ்வர்க்கத்தை ஜயிப்பார்கள். வேறு ஸ்வாதந்த்ரியம் வேண்டியதில்லை.

வ்யதிக்ரமே து க்ருச்ச்ர: ॥ ௪௯ ॥

எந்த வகையிலும் பர்த்தாவை ஸ்த்ரீ அதிக்ரமித்து நடந்தால் அந்தத் தோஷத்திற்காக க்ருச்ரம் ப்ராயஶ்சித்தம்.

ஶூத்ரே சாந்த்ராயணம் சரேத் ॥ ௫௦ ॥

ஸ்த்ரீயானவள் சூத்ரனிடத்தில் கலப்புகள் செய்தால் அதற்காகச் சாந்த்ராயணம் ப்ராயஶ்சித்தம்.

வைஶ்யாதிஷு ப்ரதிலோமம் க்ருச்ச்ராதிக்ருச்ச்ராதீன் சரேத் ॥ ௫௧ ॥

ப்ராம்ஹண ஸ்த்ரீகள் வைஶ்யாதிகளான ஜாதிகளிடம் ப்ரதிலோமமாக (விபரீத வரிசை) ஸம்பந்தம் செய்தால் க்ருச்ர அதிக்ருச்ராதி ப்ராயஶ்சித்தங்களைச் செய்யவும்.

பும்ஸாம் ப்ராஹ்மணாதீனாம் ஸம்வத்ஸரம் ப்ரஹ்மசர்யம் ॥ ௫௨ ॥

ப்ராம்ஹணாதிஜாதி புமான்கள் ப்ராம்ஹண க்ஷத்ரியாதி ஸ்த்ரீகளிடம் ப்ரவேசித்தால் ஒரு வர்ஷம் வரையில் ப்ராம்ஹசர்ய வ்ரதமும் ப்ராயஶ்சித்தம்.

𑌶𑍂𑌦𑍍𑌰𑌂 𑌕𑌟𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌦𑌹𑍇𑌤𑍍 ॥ ௫௩ ॥

ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்யாதி மேல்ஜாதி ஸ்த்ரீஸம்பந்தம் செய்த ஶூத்ரனுக்குக் கோரைப்புல் அக்நியால் சுடுவது ப்ராயஶ்சித்தம்.

𑌇𑌤𑌿 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

மூன்ருவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

நான்காவது கண்டம்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 —

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑍋 𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௧ ॥

க்ஷத்ரிய வைச்யாதிகளுக்கு ப்ராம்ஹணுதி உத்க்ருஷ்ட ஜாதி ஸ்த்ரீப்ரவேசாதிதோஷங்களில் சரீரதண்டனையே ப்ராயஶ்சித்தமென்று சொல்லுகிருர்கள்.

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌦𑌾𑌰𑌾 𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌮𑌾 𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௨ ॥

எல்லா வர்ணத்தார்களும் தங்கள் பார்யைகளைப் பணத்தை விடப் பாதுகாக்கவும்.

𑌨 𑌤𑍁 𑌚𑌾𑌰𑌣𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨 𑌰𑌙𑍍𑌗𑌾𑌵𑌤𑌰𑍇 𑌵𑌧𑌃 ।
𑌸𑌂𑌸𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾 𑌹𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑍍 𑌨𑌿𑌗𑍁𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌪𑌿 ॥ ௩ ॥

சாரணதாரர்கள் = தேவதாஸிகள், ரங்காவதாரர்கள் = நாட்டியாதிகளில் ஸம்பந்தப்பட்ட விலைமாதர்கள், இவர்களுடன் ஸம்ஸர்கிப்பதில் சரீரதண்டனையான ப்ராயஶ்சித்தம் கிடையாது. ஏனெனில் அந்த வேஶ்யைகள் பண ஆசையால் கலக்கச்செய்கிருர்கள் கோப்யமாயிருப்பவர்களான புருஷர்களையும். பணமில்லாவிடில் விட்டுவிடுவார்கள். ஆகையால் புருஷர்கள்மீது தண்டனை கிடையாது. ப்ராயஶ்சித்த சுத்தி உண்டு.

𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌤𑍁𑌲𑌂 𑌨𑍈𑌤𑌾 𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌹𑌿𑌚𑌿𑌤𑍍 ।
𑌮𑌾𑌸𑌿 𑌮𑌾𑌸𑌿 𑌰𑌜𑍋 𑌹𑍍𑌯𑌾𑌸𑌾𑌂 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑌕𑌰𑍍𑌷𑌤𑌿 ॥ ௪ ॥

ஸ்த்ரீகள் நிகரற்ற பரிசுத்த வஸ்துக்கள். அவர்கள் ஒருகாலும் தோஷமுள்ளவர்களாகிறதில்லை. ஏனெனில் ஒவ்வொரு மாதமும் வெளியாகும் ரஜஸ்ஸானது இவர்களுடைய தோஷங்களையும் இழுத்து வெளிப்படுத்துகின்றது. ஆகையால் ஸ்த்ரீகளை த்யஜிக்க வேண்டியதில்லை.

ஸோமஶ்ஶௌசம் ததத்தாஸாம் கந்தர்வஶ்ஶிக்ஷிதாம் கிரம் ।
அக்நிஶ்ச ஸர்வபக்ஷத்வம் தஸ்மாந்நிஷ்கல்மஷா꞉ ஸ்த்ரிய꞉ ॥ ௫ ॥

ஸ்த்ரீகளுக்கு ஸோம தேவன் சுத்தியென்கிறதைக் கொடுத்தார். கந்தர்வன் நல்ல குரலைக்கொடுத்தார். அக்நி எல்லோருக்கும் உபபோகார்ஹதையைக் கொடுத்தார். இவ்வாறு தேவதா ப்ரஸாதம் பெற்றவர்களாதலால் அவர்களுக்குத் தோஷமேற்படாது.

அப்ரஜாம் தஶமே வர்ஷே ஸ்த்ரீப்ரஜாம் த்வாதஶே த்யஜேத் ।
ம்ருதப்ரஜாம் பஞ்சதஶே ஸத்யஸ்த்வப்ரியவாதிநீம் ॥ ௬ ॥

ப்ரஜா ஸந்ததி ஏற்படாத பார்யையைப் பத்து வர்ஷம்வரையில் எதிர்பார்த்துப் பிறகு த்யஜிக்கவும். அதிகமாக ஸ்த்ரீபிரஜை பெறுகிறவளைப் பன்னிரண்டு வர்ஷங்கழித்தும், ம்ருத ப்ரஜையானவளை (மறுபடி ஸந்ததி உண்டாகாதவரையில்) பதினைந்தாவது வர்ஷத்திலும் த்யஜிக்கவும். அப்ரியம் பேசுகிற பார்யையை (அதனால் அனர்த்தம் ஏற்பட்டால்) உடனேயே த்யஜிக்கவும்.

ஸம்வத்ஸரம் ப்ரேதபத்நீ மதுமாம்ஸமத்யலவணாநி வர்ஜயேத் அதஶ்ஶயீத ॥ ௭ ॥

இறந்தவனுடைய பத்நியானவள் ஒருவர்ஷம் வரையில் மது, மாம்ஸம், மத்யம், லவணம் இவைகளை வர்ஜிக்கவும். தரையில் படுக்கவும்.

ஷண்மாஸாநிதி மௌத்கல்ய꞉ ॥ ௮ ॥

ஆறு மாதம் வரையில், என்று மௌத்கல்ய ருஷி கூறுகிறார்.

அத ஊர்த்வம் குருபிரநுமதா தேவராஜ்ஜநயேத் புத்ரமபுத்ரா ॥ ௯ ॥

இந்த ஆறு மாத வ்ரதத்திற்குப் பிறகு குருக்களின் அனுமதி பெற்று, தேவரனிடமிருந்து ஒரே ஒரு பிள்ளையைப் பெறலாம், புத்ரனில்லாதவளானால்.

அதாப்யுதாஹரந்தி—

வஶா சோத்பந்நபுத்ரா ச நீரஜஸ்கா கதப்ரஜா ।
நாகாமா ஸந்நியோஜ்யா ஸ்யாத் பலம் யஸ்யாம் ந வித்யத இதி ॥

கீழ்க்கண்டவர்கள் நியோகம் செய்யத் தக்கவர்களல்ல. வசையாயிருப்பவள். ஏற்கனவே பிள்ளையுள்ளவள். ரஜஸ் நிவ்ருத்தியா

னவள். பிள்ளை பிறந்து இறந்துபோன நிலையுள்ளவள். காமம் (இச்சை) இல்லாதவள். எவளுக்கு நியோகத்தால் பலன் எற்படாதோ அவள், அதாவது மலடியாயிருப்பவள்.

𑌮𑌾𑌤𑍁𑌲𑌪𑌿𑌤𑍃𑌷𑍍𑌵𑌸𑌾 𑌭𑌗𑌿𑌨𑍀 𑌭𑌾𑌗𑌿𑌨𑍇𑌯𑍀 𑌸𑍍𑌨𑍁𑌷𑌾 𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌨𑍀 𑌸𑌖𑌿𑌵𑌧𑍂𑌰𑌿𑌤𑍍𑌯𑌗𑌮𑍍𑌯𑌾𑌃 ॥ ௧௧ ॥

மாதுல ஸ்வஸா, பித்ரு ஷ்வஸா, ஸஹோதரீ, அவள் பெண், ஸ்நுஷை, மாதுல பத்நீ, மித்ரனின் பார்யை, இவர்கள் வர்ஜிக்கத் தக்கவர்கள்.

𑌅𑌗𑌮𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌗𑌮𑌨𑍇 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑌿𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍌 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌿𑌃 ॥ ௧௨ ॥

மேற்சொன்ன அகம்யைகளிடம் ஸங்கம் செய்தால் (ப்ரவேசித்தால்) க்ருச்ரம், அதிக்ருச்ரம், சாந்த்ராயணம் இவைகள் ப்ராயஸ்சித்தங்கள்.

𑌏𑌤𑍇𑌨 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍀𑌵𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 ॥ ௧௩ ॥

சண்டாள ஸ்த்ரீகமந ப்ராயஸ்சித்தமும் இதனுல் சொல்லப்பட்டது.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿—

𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍀𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌚 ।
𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑌤𑌿𑌤𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌸𑌮𑌤𑌾𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥

ப்ராம்ஹணன் சண்டாளஸ்த்ரீயிடம் ப்ரவேசித்தாலும், அவள் தொட்டதைச் சாப்பிட்டாலும், அவளிடம் த்ரவ்யம் பெற்றுலும் பதிதனுவான். இது அபுத்தி பூர்வகமாயிருந்தால். புத்தி பூர்வகமாகச் செய்தால் சண்டாளிக்கு ஸமதையை அடைகிருன்.

𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌨𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌤𑌃 ।
𑌗𑍁𑌰𑍁𑌤𑌲𑍍𑌪𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑍇𑌨 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 ॥ 𑌇𑌤𑌿 ॥

பிதா, குரு, இந்த ஸ்தானத்திலுள்ளவர்களுடையவும், ராஜாவினுடையவும், பார்யையைத் தவறுதல் காரணமாக ப்ரவேசித்துவிட்டால், அதனுல் குருதல்பகமன தோஷம் ஏற்படும். அவனுக்குக் கீழ் ஸூத்ரத்தில் சொல்லிய க்ருச்ராதிகள் ப்ராயஸ்சித்தங்கள் என்று நிச்சயம்.

𑌅𑌧𑍍𑌯𑌾𑌪𑌨𑌯𑌾𑌜𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍈𑌰𑌶𑌕𑍍𑌤𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌜𑍀𑌵𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥ ௧௪ ॥

ப்ராம்ஹணனுக்கு ஜீவனார்த்தமாக விதிக்கப்பட்ட அத்யாபனம், யாஜனம், ப்ரதிக்ரஹம் என்ற மூன்று வ்ருத்தியால் ஜீவிக்கச் சக்தியில்லாவிட்டால், அவன் க்ஷத்ரிய தர்மங்களைச் செய்து ஜீவிக்கலாம். அடுத்தவையாயிருப்பதால்.

நெதிமளதமொzத்யுெமு௱ ஹி க்ஷத்ரியகெ-மா ஸ்ராஹ்மணஸ்ய ॥

ஆனல் கௌதமர் இது கூடாதென்கிறார். ப்ராம்ஹணனுக்கு க்ஷத்ரியதர்மம் மிக உக்ரமானதல்லவா?

கூயாவ்யூஹாஹரதி—

மவாயெ-ஸ்ராஹ்மணாயெ-வா வணெ-ாநாம் வாzவி ஸங்கரெ ।
மூஹ்ணீயாதாம் விஷுவிஸுள மஸ்த்ரம் யஉ-வ்யவெக்ஷயா ॥ கஅ ॥

ப்ராம்ஹணனும், வைஶ்யனும் ஆயுதம் தரிக்கக் கூடாதென்று நிஷேதமிருந்தாலும், கோ, ப்ராம்ஹணன், இவைகளின் ரக்ஷணார்த்தமாயும், வர்ண ஸங்கரம் ஏற்படும்போது அதைத் தடுக்கவும் தர்மகாரணமாக அவர்கள் சஸ்த்ரம் எடுக்கலாம்.

வெஸ்யவ்ருத்திரநுஷ்டேயா வ்ரதயநஹாரகவாக ॥ கக ॥

ப்ராம்ஹண க்ஷத்ரியர்களுக்கு ஜீவனார்த்தமாக வைஶ்ய வ்ருத்தியான க்ருஷி வாணிஜ்யாதிகளும் செய்யத்தக்கவை. அடுத்தவையாயிருப்பதால்.

ஹுாகஃஷுாதராஸாக கஷீ-ஸ்யாக ॥ உ0 ॥

க்ருஷி செய்ய நேரிட்டால், ப்ரதிதினமும் பகல் போஜனத்திற்கு முன்பு க்ருஷி செய்கிறவனாயிருக்க வேண்டும்.

கஸ்யுிதநாவஸிகாஹ்யாம் ஸஉஷ்காஹ்யாஉதஙுஞாரயா
உஹுஉ-ஹுரஹ்யுஹுநுயநு ॥ உக ॥

க்ருஷிக்கு உபயோகிக்கப்படும் இருகாளைகளும் மூக்குத்துவாரம் செய்யப்படாதவையாயும், அண்டங்களுடன் கூடியவைகளாயுமிருக்கவேண்டும். ஆரா என்ற ஆயுதத்தால் குத்தாமலும், அடிக்கடி ஆச்வாஸனம் செய்தும், மண் முதலியவைகளை நீக்கியும் உழவேண்டும். ஆரா — நுனியில் இரும்பு ஊசி உள்ள கழி.

ஹாய-ாதிரஹிஷஸிநு கஉ-காரணம் ஹுாமஹ்யாயெயாக ॥ உஉ ॥

பார்யை ஏற்பட்டது முதல் அக்நியுண்டு. அந்த அக்நியில் அக்நி ஆதானத்திற்குப் பூர்வங்களான க்ருஹ்ய கர்மாக்களைச் செய்யவும்.

அக்ந்யாதேயப்ரப்ருதி அதைதாநி கர்மாணி பவந்தி, யதைதத் அக்ந்யாதேயம் அக்நிஹோத்ரம் தர்சபூர்ணமாஸௌ ஆக்ரயணம் உதகயநதக்ஷிணாயநயோ: பசு: சாதுர்மாஸ்யாநி ருதுமுகே ஷட்டோதா வஸந்தே ஜ்யோதிஷ்டோம இத்யேவம் க்ஷேமப்ராபணம் ॥ ௨௩ ॥

அக்ந்யாதானம் செய்தது முதல் கீழ்க்கண்ட கர்மாக்கள் செய்யவேண்டியவை, நித்யமாகச் செய்யவேண்டியவைகள். அக்ந்யாதேயம், அக்நிஹோத்ரம், தர்சபூர்ணமாஸங்கள் (இஷ்டிகள்), ஆக்ரயணம் உத்தர-தக்ஷிணாயனங்களில், பசுபந்தம், சாதுர்மாஸ்யங்கள், ருது ஆரம்பத்தில் ஷட்டோத்ருயாகம், வஸந்த ருதுவில் ஜ்யோதிஷ்டோம யாகம், இவைகளைச் செய்தால் மோக்ஷமாகிற க்ஷேம ப்ராப்தியுண்டு.

அதாப்யுதாஹரந்தி—

ந திவா ஸ்வப்நசீலேந ந ச ஸர்வாந்நபோஜிநா ।
காமம் சக்யம் நபோ கந்தும் ஆரூடபதிதேந வா ॥ ௨௪ ॥

நித்ய கர்மாக்களைக் கவனியாமல் பகலில் தூங்கும் வழக்கமுள்ளவனாலும், கண்டதையெல்லாம் (ஸர்வாந்நம்) தின்கிறவனாலும், ஸந்யாஸாதி உயர் ஆச்ரமம் சென்று அதிலிருந்து நழுவிப் பதிதனாகியவனாலும் ஸ்வர்க்கமானது ஒருகாலும் அடையத் தக்கதன்று.

தைந்யம் சாட்யம் ஜைஹ்ம்யம் ச வர்ஜயேத் ॥ ௨௫ ॥

தனது துர்தசையைக் காட்டி யாசனம் கேட்பது தைன்யம். சக்தியிருந்தும் பிறருக்கு உபகாரம் செய்யாமை சாட்யம். குடிலமாக நடந்து கொள்ளுவது ஜைம்ஹ்யம். மேற்கண்ட மூன்று துர்க்குணங்களையும் தள்ளவேண்டும்.

அதாப்யுசநஸச்ச வ்ருஷபர்வணச்ச துஹித்ரோ: ஸம்வாதே காதாமுதாஹரந்தி ॥ ௨௬ ॥

தைன்ய விஷயமாக உசநஸ், வ்ருஷபர்வா என்கிற இருவர்களின் பெண்கள் பேசியதில் ஒரு ச்லோகத்தைப் பெரியோர்கள் உதாஹரிக்கிறார்கள்.

ஸ்துவதோ துஹிதா த்வம் வை யாசத: ப்ரதிக்ருஹ்ணத: ।
அதாஹம் ஸ்தூயமாநஸ்ய தததோ(அ)ப்ரதிக்ருஹ்ணத: இதி ॥ ௨௭ ॥

உஶநஸ்ஸின்புத்ரியான தேவயாநியைப் பார்த்து வ்ருஷபர்வ புத்ரியான சர்மிஷ்டை பெருமை சொல்லுவதாவது:-தேவயாநியே! நீ எப்போதும் தீனஸ்வபாவத்தால் பிறரை ஸ்துதி செய்து யாசனம் செய்து தானம் வாங்குகிறவருடைய பெண்.

நானோ (சர்மிஷ்டை) வென்றால் எப்போதும் பிறரால் ஸ்தோத்ரம் செய்யப் படுகிறவரும், தானம் கொடுப்பவரும், தானம் வாங்காதவருமாகியவரின் பெண், என்று.

இதி சதுர்த்த: கண்ட: ॥

இதி த்விதீயோऽத்யாய: ॥

நான்காவது கண்டம் முற்றிற்று.

இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

அத த்ருதீயோऽத்யாய: ॥

அத பஞ்சம: கண்ட: ॥

இரண்டாவது ப்ரச்னம்—மூன்றாவது அத்யாயம்.

ஐந்தாவது கண்டம்.

தபஸ்யம் (தீர்த்த) அவகாஹனம் ॥ 1 ॥

தீர்த்தத்தில் அவகாஹனம் = ஸ்நானம் செய்வது தபஸ்ஸுக்கு ஸாதகமாகும்.

தேவதாஸ்தர்ப்பயித்வா பித்ருதர்ப்பணம் ॥ 2 ॥

ஸ்நானத்திற்குப் பிறகு தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்து பிறகு பித்ருதர்ப்பணம் செய்யவும்.

அநுதீர்த்தமப உத்ஸிஞ்சேத் ஊர்ஜம் வஹந்தீரிதி ॥ 3 ॥

பித்ரு தர்ப்பணத்திற்குப்பிறகு ஜலக்கரையில் தீர்த்தத்தை ஊர்ஜம்வஹந்தீ: என்கிற மந்த்ரத்தால் ஸேசநம் செய்யவும்.

அதாப்யுதாஹரந்தி—

ஸ்ரவந்தீஷ்வநிருத்தாஸு த்ரயோ வர்ணா த்விஜாதய: ।

ப்ராதருத்தாய குர்வீரந் தேவர்ஷிபித்ருதர்ப்பணம் ॥ 4 ॥

இவ்விஷயமாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஓடுகிறவைகளும் அடைக்கப்பட்டுத் தேங்காமலிருப்பவையுமான ஜலங்களில் மூன்று வர்ணத்தினரும் காலையில் எழுந்து ஸ்நானம்செய்து தேவ, ருஷி, பித்ரு தர்ப்பணங்களைச் செய்யவும்.

நிரானாஸ ந கூவீரநு ஸஂஸஹாகதஷுஷெதாகூரஸ ॥ ரு ॥

அணைபோட்டுத் தடுக்கித் தேங்கியுள்ள ஜலங்களில் (நதிகளில்) தர்ப்பணாதிகளைச் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அந்த அணைகட்டியவனை அந்தப்பலனை அடைவான்.

தஸ்ாஸ வரகூதாநு ஷெதவிநு கூவொஂஷு வநிவஜயெஷிதி॥

ஆகையால் பிறரால் கட்டப்பட்ட அணை ஜலத்தையும், பிறர் கிணற்று ஜலத்தையும், தர்ப்பணாதிகளுக்கு வர்ஜிக்கவும்.

ஸயாவஹாஹாரதி—

உஸூதூ வாஃவி தீநு விணாநு கூபீா ரவஷுநொ ஷா ।

நிரானாஸ த ஷுதிணாநு கூவாஸ தீ நவடாஂஹூயா ஊதி ॥

இவ்விஷயமாகப் பெரியோர்கள் கூறுவதாவது:— குட்டை குளம் முதலிய பிறர் ஜலத்தில் தர்ப்பணாதிகள் செய்ய நேர்ந்தால் மூன்று மண் உருண்டைகளை அவைகளிலிருந்து எடுத்து வெளியில் எறிந்துவிட்டு உபயோகிக்கலாம். அதுபோல் அணைபோட்டுத் தடுக்கப்பட்ட ஜல விஷயத்திலும் மூன்று ம்ருத் பிண்டங்களை எடுத்து எறியவும். பிறர் தோண்டிய கிணற்றில் செய்ய நேர்ந்தாலும் கிணற்றிலிருந்து மூன்று குடங்கள் ஜலத்தை எடுத்துக் கீழே கொட்டிவிட்டுப் பிறகு உபயோகிக்கவும். மேற்கண்ட விதியானது வேறு ஜலம் கிடைக்காத ஆபத்காலத்தில் மட்டும். எப்போதுமல்ல.

வஹ ஹுதி஗ூாஹுஸு ஹுதி஗ூஹூாவு தி஗ூாஹு ஸு வா ஸயாஜுஂ வா யாஜயிகூா ஊநாஸுாஹஸு வாஃஹஸி கூா தரஷுநீயஂ ஜவெஷிதி ॥ அ ॥

ப்ரதிக்ரஹார்ஹனிடமிருந்து ஏராளமாக ப்ரதிக்ரஹித்தாலும், ப்ரதிக்ரஹாநர்ஹனென்று நிர்ணயிக்கப்பட்டவனிடம் ப்ரதிக்ரஹித்தாலும், பதிதாதி அயாஜ்பர்களுக்கு யாகம் செய்துவைத்தாலும், சாப்பிடத்தகாத அந்நமுடையவனென்று தள்ளப்பட்டவனுடைய அந்நத்தைச் சாப்பிட்டாலும் "தரத்ஸமந்தீயம்" என்ற நான்கு ருக்குகளை ஜலத்தில் நின்று ஜபிக்கவும். இது ரஹஸ்ய தோஷ விஷயம்.

ஸயாவஹாஹாரதி—

஗ாரவஜிணஶ்ரெவ ஶிஷுவஜிணஶு யெ ।

ஞஹாரஞுஸக்ஷீணாஃ தீவஂ தஶ உவாஸதெ ஊதி ॥

குரு ஸங்கரம், சிஷ்ய ஸங்கரம், ஆஹார, மந்த்ரக் கலப்பு இவை களைச் செய்கிறவர்கள் நீண்ட இருளை அடைவார்கள், என்று பெரியோர் கூற்று.

அதாத: ஸ்நாதகவ்ரதாநி ॥ ௧௦ ॥

மறுபடி ஸ்நாதக வ்ரதங்கள் சொல்லப்படுகின்றன. ஸ்நாதகன் ஸமாவ்ருத்த க்ருஹஸ்தன்.

ஸாயம் ப்ராதர்யதஶநீயம் ஸ்யாத்தேநாந்நேந வைஶ்வ
தேவம் பலிம் ஹ்ருத்வா ப்ராஹ்மணக்ஷத்ரியவிட்சூத்ரா
நப்யாகதாந் யதாஶக்தி பூஜயேத் ॥ ௧௧ ॥

க்ருஹஸ்தன் ப்ரதிதினமும் ஸாயம் ப்ராத: காலங்களில் (இரவு பகல்) ஆஹாரார்த்தமாக எது ஏற்படுகிறதோ அந்த அந்நத்தால் வைஶ்வ தேவம், பலிஹரணம் இவைகளைச் செய்துவிட்டு, ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களில் யார் வந்தாலும் வந்தவர்களை யதாசக்தி பூஜிக்கவும் (போஜனம்). இது அப்யாகத பூஜை. அதிதிபூஜையல்ல.

யதி பஹூநாம் ந ஶக்நுயாதேகஸ்மை குணவதே தேயம் ஸ்யாத் ॥

அப்யாகதர்கள் எல்லோரையும் பூஜிக்கமுடியாத அசக்தனாயிருந்தால் அவர்களில் குணவானான ஒருவனுக்குமட்டுமாவது செய்யவும்.

யோ வா ப்ரதமமப்யாகத: ஸ்யாத் ॥ ௧௩ ॥

அல்லது எவன் முதலாவதாக வந்தானோ அவனுக்குமட்டும் பூஜையைச் செய்க.

ஶூத்ரஶ்சேதப்யாகதஸ்தம் கர்மணி நியுஞ்ஜ்யாத் ॥ ௧௪ ॥

அப்யாகதன் சூத்ரனாயிருந்தால் அவனுக்குப் பூஜைசெய்யுமுன் அவனைச் சுச்ரூஷாதி கார்யங்களில் ஏவ வேண்டும். பிறகு போஜனம் கொடுக்கவும்.

ஶ்ரோத்ரியாய வாக்ரம் தேயம் ஸ்யாத் ॥ ௧௫ ॥

அநேகர்களுக்குக் கொடுக்க சக்தியில்லாவிடில், ஒரு ச்ரோத்ரியனுக்காவது, அக்ரப்ரமாணமுள்ள அந்நத்தைக் கொடுக்கவும். (அக்ரம் = 64 கபளங்கள்.)

யே நித்யா பாக்திகாஸ்தேஷாமநுபரோதேந ஸம்
விபாகோ விஹித: ॥ ௧௬ ॥

க்ருஹத்தில் நித்யமும் அந்நத்திற்குப் பாகம் பெறப் பாத்யப் பட்டவர்களுக்கு உபரோதம் (ச்ரமம்) ஏற்படாதபடி வந்தவர்களுக்கு அந்நம் பிரித்துக் கொடுபடவேண்டும்.

ந சைவ ஸுதாவிதாஸுவா ஹாஜீத ॥ ௧௭ ॥

எப்படியிருந்தாலும் பிறருக்குக் கொடுக்காமல் ஒருகாலும் சாப்பிடலாகாது.

ஊயாவுரூ ஊஜமீ தள் ஸ்லோகாவாஹாஹரந்தி—

யொ ஊஊகுவா விதுசுவதாஹெு ஹூதூாதிஸீநாம் வ ஸாஹுஜநஸு। ஸம்வளஊஸ்னு விஷஊதி ஜொஹாஸ தஊ ஊுஹம் தஸு வ ஊுதூாவஸி॥ ஹாதாநிஹொதுஃ கூத வெவஸுஷவஃ வஜூாதியீநு ஹூதுஜநாவஸிஷுடி। தாஷுஸூவிஸு ஊயஊதி யொ ஊம் தஸுாஊதம் ஸுாம் ஸவ ஊம் ஹாநக்தி ॥ ௧௮ ॥

இந்த அன்னதான விஷயமாக அன்னம் பாடிய இருச்லோகங்களைப் பெரியோர்கள் உதாஹரிக்கிறார்கள்:—

அன்னம் சொல்லுவதாவது:— எவன் என்னை (அன்னத்தை) பித்ருக்களுக்கும், தேவர்களுக்கும், ப்ருத்யன், அதிதி, ஸாஹ்ருஜ்ஜனங்கள் ஆகியவர்களுக்கும் கொடுக்காமலே மோஹத்தால் தான் ஒருவன்மட்டும் ஸம்ருத்தமாகச் சாப்பிடுகிறானோ அவன் விஷத்தையே சாப்பிடுகிறான். நான் அவனை விழுங்குகிறேன். அவனுக்கு ம்ருத்யுவாகிறேன். ஆகையால் எவன் அக்நிஹோத்ர ஹோமமும், வைச்வதேவமும் அதிதிபூஜையும் செய்து ப்ருத்யர்களுக்குக் கொடுத்த அந்நசேஷத்தை ஸந்தோஷத்துடனும், ச்ரத்தையுடனும் என்னை சுசியாகச் சாப்பிடுகிறானோ அவனுக்கு நான் (அன்னம்) அம்ருதமாக இருப்பேன். அம்ருதமான என்னை அவன் சாப்பிடுகிறான் என்று.

ஸாவுராஹணஸ்ரோத்ரியவெதவாரமெஹ்யா ஹாவயெ நிவெஶஷயாயெ வுதிகூஷிண மூஷ்யஊணாஜுயநாஜஸம் யொஹமெவஸுஜிதெஷா ஊவுஸம்விஹாமெ யஸாஶக்தி காயெ வஹிவெஜி ஹிஷஊணெஷா ॥ ௧௯ ॥

ஸத் ப்ராம்ஹணன், ச்ரோத்ரியன், வேதத்தைக் கரைகண்டவன் இவர்களுக்கும், ஆசார்யதக்ஷிணை, விவாஹம், மருந்து, இவை

களை உத்தேசித்து வந்தவர்களுக்கும், ஜீவனமற்றவன், யாகம் செய்யப்போகிறவன், அத்யயநம் செய்கிறவன், வழி நடப்பவன், விஶ்வஜித்யாகம் செய்து தனமற்றவன் ஆகியவர்களுக்கும் யாசிப்பவர்களுக்கு யதாசக்தி த்ரவ்ய விபாகம் செய்து கொடுக்கவும். யாகத்திற்கு வெளியில் இது என்று அறியவும்.

கூதாஞுஜிதஜெஷு ॥ உ௦ ॥

யாகமத்தியிலில்லாமல் வேறு காலத்தில் யாசனம் செய்யும் மற்றவர்களுக்கு (அதாவது கீழ் ஸூத்ரத்தில் சொல்லியவர்கள் தவிர இதரர்களுக்கு)ப் பக்வாந்நம் கொடுக்கவும். முன் சொன்ன வர்களுக்குப் பக்வாந்நமோ வேறு த்ரவ்யமோ இரண்டும் கொடுக்கலாம்.

ஸூஷூக்ஷாலிதவாஉவாணி ராவாஜஃ ஶூவஉ ஸஂவூ
தெ ஜெஶெஉஜ ஓவஹூத ஓவஸஜூஹ்ய காஒகொராய
ஜொஹ மொஹ ஜொஹா நவெஹத்ய ஸவாஹிரஜூஜொஹிஃ
ஶவஓகூவாந்து ஹாஶீயாக ॥ உக ॥

கை, கால்களை நன்கு அலம்பிக்கொண்டு, ஆசமனம் செய்து, சுத்தமாயும் மறைவுள்ளதாயுமுள்ள இடத்தில் கொண்டுவந்த அந்நத்தை ப்ரீதி பூர்வமாக க்ரஹித்து, காம க்ரோத த்ரோஹ லோப மோஹங்களை விலக்கி, எல்லா விரல்களும் வாய்க்குள் போகும்படி அந்த கபளத்தைப்போட்டு, ஶப்தமின்றிச் சாப்பிடவும். (ஓசை ஏற்படாமல்). இது க்ருஹஸ்த போஜன விதி.

உதி வஞுமஃ வஜஃ

ஐந்தாவது கண்டம் பூர்ணம்.

கூ ஷஷ்ஃ வஜஃ ॥

ஆருவது கண்டம்.

ந விஜஶெஷஂ வாதூ்ாஓதூஜெக ॥ க ॥

ஒரு கபளத்தின் பாதியைச் சாப்பிட்டு, அதன் பாதியை (வாயில் பட்டதை) இலையில் போடக்கூடாது. ஒரு கபளத்தில் எவ்வளவு விழுங்கமுடியுமோ அவ்வளவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

𑌮𑌾𑌂𑌸𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌤𑌿𑌲𑌸𑌂𑌸𑍃𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌶𑌨𑍇𑌽𑌪 𑌉𑌪𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌭𑌿𑌮𑍃𑌶𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

அந்நத்தில் மாம்ஸம், மத்ஸ்யம், திலம் ஆகியவை கலந்திருக்கும் நிலையில் அதைச் சாப்பிட்டுவிட்டால் ஜலத்தைத்தொட்டு, சுத்திசெய்துகொண்டு அக்நியையும் ஸ்பர்சிக்கவும்.

𑌅𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑍇 𑌚 𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑍍 ॥ ௩ ॥

ஸூர்யாஸ்தமனத்திற்குப் பிறகு ஸ்நானம் செய்யக்கூடாது.

𑌪𑌾𑌲𑌾𑌶𑌮𑌾𑌸𑌨𑌂 𑌪𑌾𑌦𑍁𑌕𑍇 𑌦𑌨𑍍𑌤𑌧𑌾𑌵𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௪ ॥

பலாச (புரசு) வ்ருக்ஷத்தால் செய்யப்பட்ட ஆஸனம், பாதுகை, பல் தேய்க்கும் குச்சி இவைகளை வர்ஜிக்கவும்.

𑌨𑍋𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑍇𑌽𑌨𑍍𑌨𑌂 𑌭𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 ॥ ௫ ॥

மடியில்வைத்துக்கொண்டு அந்நத்தைச் சாப்பிடலாகாது.

𑌆𑌸𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌂 𑌨 𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌤 ॥ ௬ ॥

உயரமான மஞ்சங்களில் அன்னத்தை வைத்துக்கொண்டு புஜிக்கலாகாது.

𑌵𑍈𑌣𑌵𑌂 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌧𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌰𑍁𑌕𑍍𑌮𑍇 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑍇 𑌚 ॥ ௭ ॥

மூங்கிலால் செய்த தண்டத்தைத் தரிக்கவும். ஸ்வர்ண குண்டலங்களையும் தரிக்கவும்.

𑌪𑌦𑌾 𑌪𑌾𑌦𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௮ ॥

காலால் காலைத் தேய்த்து அலம்புதலும், கால்மேல் கால் வைப்பதும் கூடாது.

𑌨 𑌬𑌹𑌿𑌰𑍍𑌮𑌾𑌲𑌾𑌂 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ ௯ ॥

வெளிப்படையாகப் புஷ்பம் தரிக்கக்கூடாது.

𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑍁𑌦𑌯𑌾𑌸𑍍𑌤𑌮𑌯𑍇 𑌨 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍇𑌤 ॥ ௧௦ ॥

உதயத்திலும் அஸ்தமய காலத்திலும் ஸூர்யனைப் பார்க்கக் கூடாது.

𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌧𑌨𑍁𑌰𑌿𑌤𑌿 𑌪𑌰𑌸𑍍𑌮𑍈 𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 ॥ ௧௧ ॥

ஆகாசத்தில் வானவில் தெரிந்தால் அதை "இந்த்ர தனுஸ்" என்று சொல்லிப் பிறனுக்குக் காட்டக்கூடாது.

𑌯𑌦𑌿 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌨𑍍𑌮𑌣𑌿𑌧𑌨𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 ॥ ௧௨ ॥

பிறருக்குச் சொல்ல நேர்ந்தால் "மணிதனுஸ்" என்றே சொல்லவும்.

வாரஆரீ ரு சீவெஸிவாவஹரேண நாதீயாக ॥ ௧௩ ॥

நகரத்தின் வாசலில் நாட்டப்பட்ட வ்ருக்ஷத்திற்கும், அகழிக்கும் குறுக்காகத் தாண்டக்கூடாது.

ஞெஹ்யோரஹரேண ந ஶவேயாக ॥ ௧௪ ॥

ஊஞ்சலுக்காக நிறுத்தப்பட்டுள்ள இரண்டு கம்பங்களுக்கு மத்தியில் குறுக்காகப் போகக்கூடாது.

வதஸதஹ்ஶீம் வ நோவஸி ஶவேயாக ॥ ௧௫ ॥

கன்றுக்குட்டி கட்ட ஏற்பட்ட கயிற்றை மிதிக்கவோ தாண்டவோ கூடாது. பசுமாடு விஷயத்திலும் இது.

ஹஸாஸ்திரோஃ துஷ்கூவாயாவஸ்நாநாநி நாயிதிஷ்டேக ॥ ௧௬ ॥

சாம்பல், எலும்பு, ரோமம், உமி, மண்டையோடு, ஸ்நானம் பண்ணும்போது வழிந்தோடிய ஜலம் இவைகளை மிதிக்கக்கூடாது.

ஶாம் யயஹ்ஶீம் ந வரவேஷ ஶுஶ்ருயாக ॥ ௧௭ ॥

அகாலத்தில் பசுவானது கன்றுக்குப் பால் ஊட்டுவிப்பதைப் பார்த்துப் பிறரிடம் அதைச் சொல்லக்கூடாது. கன்று பால் ஊட்டும்போது பிறருக்குச் சொல்லக்கூடாது.

நாஃயெநுஃயெநுரிதி ஶ்ருயாக ॥ ௧௮ ॥

பால் கறக்காத மாடு அதேனு. அதை அதேனு என்று சொல்லக்கூடாது.

யதி ஶ்ருயாக யெநுஹவ்யேத்யவ ஶ்ருயாக ॥ ௧௯ ॥

சொல்ல நேர்ந்தால் "தேனுபவ்யா" என்றே சொல்லவும்.

ஶுஷ்கா ருக்ஷாஃ வருஷா வாவோ ந ஶ்ருயாக ॥ ௨௦ ॥

துக்கம் கொடுக்கக்கூடியவையும், இல்லாத தோஷத்தை க்யாபனம் செய்கிறவையும், கடுமையாயுமுள்ள வார்த்தைகளைப் பேசக்கூடாது.

நைகொஃத்வாநம் வ்ரஜேக ॥ ௨௧ ॥

வெகு தூரமுள்ள மார்க்கத்தில் ஒருவனாகத் தனியாகப் போகக்கூடாது.

ந வதிதைந ஸ்த்ரியா நஶூத்ரேண ॥ ௨௨ ॥

நீண்ட வழி நடப்பில் பதிதர்களுடனே, ஸ்த்ரீயுடனே, சூத்ரனுடனே போகக்கூடாது. உதவியாக அழைத்துப் போகலாகாது.

𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌾𑌯𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥ ௨௩ ॥

ஸாயங்கால வேளையை எதிரிட்டுக்கொண்டு நீண்ட வழி போகலாது.

𑌨 𑌨𑌗𑍍𑌨𑌃 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌤𑍍 ॥ ௨௪ ॥

வஸ்த்ரமில்லாமல் நக்நனக ஸ்நாநம் செய்யக்கூடாது.

𑌨 𑌨𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌤𑍍 ॥ ௨௫ ॥

மஹா நிசையில் ஸ்நானம் செய்யக்கூடாது.

𑌨 𑌨𑌦𑍀𑌂 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌤𑌰𑍇𑌤𑍍 ॥ ௨௬ ॥

நதியைக் கைகளால் நீந்தித் தாண்டக்கூடாது.

𑌨 𑌕𑍂𑌪𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑍇𑌤 ॥ ௨௭ ॥

கிணற்றில் தன் உருவத்தைப் (ஜலத்தில்) பார்க்கக்கூடாது.

𑌨 𑌗𑌰𑍍𑌤𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑍇𑌤 ௨௮ ॥

பெரிய ஆழமுள்ள பள்ளங்களேயும் பார்க்கக்கூடாது. ஜலமிருந்தாலும் இல்லாவிட்டாலும்.

𑌨 𑌤𑌤𑍍𑌰𑍋𑌪𑌵𑌿𑌶𑍇𑌦𑍍𑌯𑌤 𑌏𑌨𑌮𑌨𑍍𑌯 𑌉𑌤𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௯ ॥

பிறன் ஒருவன் வந்து இவனை எழுந்திருக்கும்படி செய்யக்கூடிய ஓர் இடத்தில் உட்காரக்கூடாது. ராஜ ஸபாதிகளில் உட்கார்ந்தவனைக் கிளப்பி வேறு இடத்திற்குத் துரத்துவார்களாகையால் அத்தகைய இடங்களில் உட்காராமலிருப்பதே நல்லது.

அல்லது பிறர் ஸஹாயத்தினுல் இறங்கவேண்டிய நிலைமையுள்ள உயரமான இடங்களில் உட்காரக்கூடாது.

𑌪𑌨𑍍𑌥𑌾 𑌦𑍇𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌯 𑌗𑌵𑍇 𑌰𑌾𑌜𑍍𑌞𑍇 𑌹𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍇 ।
𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌯 𑌭𑌾𑌰𑌤𑌪𑍍𑌤𑌾𑌯 𑌗𑌰𑍍𑌭𑌿𑌣𑍍𑌯𑍈 𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌾𑌯 𑌚 ॥ ௩௦ ॥

வழி நெருக்கடியேற்படும்போது முதலில் ப்ராம்ஹணனுக்கு வழிவிடவேண்டும். அதுபோல் பசு, ராஜா, கண்ணில்லாதவன், வ்ருத்தன், பாரத்தால் தவிப்பவன், கர்ப்பிணீ, துர்ப்பலன் ஆகியவர்களுக்கு முதலில் வழிவிடவும்.

𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑍈𑌧𑍋𑌦𑌕 𑌯𑌵𑌸 𑌸𑌮𑌿𑌤𑍍𑌕𑍁𑌶 𑌮𑌾𑌲𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰

ண மாட்யஜநாகுலமநலஸஸம்ருத்தமார்யஜநபூயிஷ்டமத-
ஸ்யுப்ரவேஶ்யம் க்ராமமாவஸிதும் யதேத தார்மிகஃ ॥

நிறைந்த காஷ்டம், தீர்த்தம், புல், ஸமித்து, தர்ப்பம், புஷ்பம், வெளி ஸஞ்சாரபூமி, பணக்காரர்கள் இவைகளால் நிறைந்ததும், சோம்பேறிகளற்றதும், ஆர்யர்கள் நிறைந்ததும், திருடர்கள் நுழையமுடியாததுமான க்ராமத்தை வஸிப்பதற்காகத் தார்மிகன் ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கவும்.

உதபாநோதகே க்ராமே ப்ராஹ்மணோ வ்ருஷலீபதிஃ ।
உஷித்வா த்வாதஶ ஸமாஃ ஶூத்ரஸாதர்ம்யம்ருச்சதி ॥ ௩௨ ॥

மிக அல்பமான ஜலமுள்ள குட்டை, கிணறு உள்ள க்ராமத்தில் பன்னிரண்டு வர்ஷம் வஸித்துவந்த ப்ராம்ஹணன் வ்ருஷளீபதியாகி, சூத்ரனுக்கு ஸமான தர்மமுள்ளவனாகிறான்.

புரரேணுகுண்டிதஶரீரஸ் தத்பரிபூர்ணநேத்ரவதநஶ்ச ।
நகரே வஸந் ஸுநியதாத்மா ஸித்திமவாப்ஸ்யதீதி ந ததஸ்தி ॥

பட்டணங்களில் ரஸ்தாக்களில் கிளம்பும் புழுதி தூசியால் வ்யாபித்த சரீரமுள்ளவனும், அந்தப் புழுதியால் நிறைந்த கண், முகமுடையவனுமான ஒருவன் எவ்வளவு நல்ல நியமத்துடன் கூடிய அநுஷ்டானமுள்ளவனாகிலும் அவன் ஸித்தியை அடைவான் என்பதில்லை.

ரதாஶ்வகஜதாந்யாநாம் கவாம் சைவ ரஜஃ ஶுபம் ।
அப்ரஶஸ்தம் ஸமூஹந்யாஃ ஶ்வாஜாவிகரவாஸஸாம் ॥ ௩௪ ॥

ரதம், குதிரை, யானை, தான்யங்கள், பசுமாடு இவைகளின் ரஜஸ் (தூசி) நல்லது. துடைப்பம், நாய், ஆடு, செம்மறியாடு, கழுதை, மனிதன் உடுத்திய வஸ்த்ரம் இவைகளின் ரஜஸ் (தூசி) கெட்டது.

பூஜ்யாந் பூஜயேச்ச ॥ ௩௫ ॥

பூஜிக்கத்தக்க பெரியவர்களைத் தவறாமல் பூஜிக்கவேண்டும்.

ருஷிவித்வந்ந்ருபவராமாதுலஶ்வஶுரர்த்விஜஃ ।
ஏதேऽர்க்யாஃ ஶாஸ்த்ரவிஹிதாஃ ஸ்ம்ருதாஃ காலவிபாகஶஃ ॥ ௩௬ ॥

ருஷி (மந்த்ரத்ரஷ்டா), வித்வான், ராஜா, மாப்பிள்ளை மாமன், மாமனார், ருத்விக் இவர்கள் காலநியமத்தை யனுஸரித்து மதுபர்க்கத்தால் பூஜிக்கத்தக்கவர்களாகச் சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளார்கள்.

ऋषिर्विद्वान्नृपो वापि प्रवासात् क्रियारम्भे वरर्त्विजौ ।
मातुलश्श्वशुरश्चैव पूज्यास्संवत्सरागता इति ॥ ௧௭ ॥

காலநியமமாவது:—ருஷி, வித்வான், ராஜா இவர்கள் ப்ரவாஸத்திலிருந்து வந்தவுடனும், வரன், ருத்விக் இவர்கள் எந்தச் சுப கர்மாவின் ஆரம்பத்திலும் பூஜ்யர்கள். மாதுலன், ச்வசுரன் இருவர்களும் ஒரு வர்ஷம் தேசாந்த்ரம் போய் வந்தவுடன் பூஜ்யர்கள்.

अग्न्यागारे गवां मध्ये ब्राह्मणानां च सन्निधौ ।
स्वाध्याये भोजने चैव दक्षिणं बाहुमुद्धरेत् ॥ ௧௮ ॥

அக்நிசாலை, பசுக்கள் மத்தி, ப்ராம்ஹணர் ஸந்நிதி, அத்யயன காலம், போஜன ஸமயம் இவைகளில் வலது கையைத் தூக்க வேண்டும். பூஜா மர்யாதைக்காக நமஸ்கார ரூபமாயிருக்கவேண்டும்.

उत्तरं वासः कर्तव्यं पञ्चस्वेतेषु कर्मसु ।
स्वाध्यायोत्सर्गदानेषु भोजनाचमनयोस्तथा ॥ ௧௯ ॥

அத்யயனம், மூத்ரபுரீஷ உத்ஸர்க்கம், தானம், போஜநம், ஆசமனம் இந்த ஐந்து கார்யங்களிலும் மேல் உத்தரீயம் தரிக்க வேண்டும்.

हवनं भोजनं दानमुपहारः प्रतिग्रहः ।
बहिर्जानु न कार्याणि तद्वदाचमनं स्मृतम् ॥ ௨௦ ॥

ஹோமம், போஜநம், தானம், தேவகுருபூஜை, ப்ரதிக்ரஹம் ஆகிய கார்யங்களை முழங்கால்களுக்கு வெளியில் செய்யக்கூடாது. இரண்டு முழங்கால்களுக்கும் மத்தியில் ஹஸ்தம் இருக்கும்படி செய்யவும்.

अन्ने श्रितानि भूतानि अन्नं प्राणमिति श्रुतिः ।
तस्मादन्नं प्रदातव्यमन्नं हि परमं हविः ॥ ௨௧ ॥

ஸ்தாவர ஜங்கம ப்ராணிகள் அந்நத்தை ஆதாரமாகக் கொண்டவை. அந்நமானது ப்ராணன் என்று ச்ருதி சொல்லுகிறது. ஆகையால் ப்ராணிகளுக்கு அந்நம் போடவேண்டியது ஆவச்யகம். அந்நம் உயர்ந்த ஹவிஸ்.

हुतेन शाम्यते पापं हुतमन्नेन शाम्यति ।
अन्नं दक्षिणया शान्तिमुपयातीति नः श्रुतिः ॥ इति ॥

ஹோமத்தால் பாபம் ஶமனமடைகிறது. ஹோமத்தில்

ந்யூனதை ஏற்பட்டால் அது ஹோமாங்கமாக அந்நதானம் செய்வதால் நீங்கும். அந்ந தானத்தில் குறைவு ஏற்பட்டால் அது போஜனாங்கமான தக்ஷிணாதானத்தால் நீங்கும். ஆகையால் ஹோமம், அந்நதானம், தக்ஷிணாதானம் மூன்றும் சேர்ந்தால் ச்ரேயஸ் என்று ச்ருதி நமக்குச் சொல்லுகிறது.

𑌇𑌤𑌿 𑌷𑌷𑍍𑌠𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஆறுவது கண்டம் முற்றிற்று.

மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

இரண்டாவது ப்ரஶ்னம்—நான்காவது அத்யாயம்.

ஏழாவது கண்டம்.

𑌅𑌥𑌾𑌤𑌸𑍍𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌵𑌿𑌧𑌿𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌃 ॥ க ॥

இனி ஸந்த்யோபாஸந அநுஷ்டான க்ரமத்தை விபரிப்போம்.

𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾𑌽𑌪𑍍𑌰𑌯𑌤𑍋𑌽𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌵𑌾𑌽𑌨𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌿𑌤𑌪𑌾𑌦𑌪𑌾𑌣𑌿𑌰𑌪 𑌆𑌚𑌮𑍍𑌯 𑌸𑍁𑌰𑌭𑌿𑌮𑌤𑍍𑌯𑌾𑌽𑌬𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌭𑌿𑌃 𑌵𑌾𑌰𑍁𑌣𑍀𑌭𑌿𑌃 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌿𑌃 𑌪𑌾𑌵𑌮𑌾𑌨𑍀𑌭𑌿𑌃 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌿𑌭𑌿𑌰𑌨𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥ ௨ ॥

க்ராமத்திற்கு வெளியிலுள்ள தீர்த்தத்திற்குச் சென்று, அசுத்தனாயிருந்தால் ஸ்நானம் செய்து, அல்லது சுத்தனாயிருந்தால் ஸ்நானம் செய்யாமல் பாதபாணிகளை நன்கு அலம்பிக்கொண்டு, ஆசமனம் செய்து, ஸுரபிமதீ (ததிக்ராவ்ண:), அப்லிங்கா: (ஆபோஹிஷ்டா:), வாருணீ (யச்சித்திதே), ஹிரண்யவர்ணா:, பாவமாநிகள் (பவமாந: ஸுவ:) வ்யாஹ்ருதிகள் இவைகளாலும் மற்றப் பவித்ர மந்த்ரங்களாலும் சரீரத்தை ப்ரோக்ஷித்துக் கொண்டு பரிசுத்தனாகிறான்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 —

𑌅𑌪𑍋𑌽𑌵𑌗𑌾𑌹𑌨𑌂 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑌿𑌕𑌮𑍍 ।
𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌇𑌤𑌿 ॥

ஜலத்தில் அவகாஹனம் செய்து ஸ்நானம்பண்ணுவது எல்லா வர்ணத்தார்களுக்கும் ஸமமானது. த்விஜாதிகளுக்கு மந்த்ரங்களால் ப்ரோக்ஷணமும் அதிகமான அம்சமாகும், என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

ஸர்வகர்மணாம் சைவாரம்பேஷு ப்ராக் ஸந்த்யோ
பாஸநகாலாச்ச ஏதைரேவ பவித்ரைராத்மா
நம் ப்ரோக்ஷ்ய பூதோ பவதி ॥ ௪ ॥

எல்லாக் கர்மாக்களின் ஆரம்பத்திலும், ஸந்த்யாவந்தன ஆரம்பத்திலும் கீழ்ச்சொன்ன பவித்ர மந்த்ர ஸமூஹத்தால் சரீரத்தை ப்ரோக்ஷித்துக்கொண்டால் பரிசுத்தனாகிறான்.

அதாப்யுதாஹரந்தி—
தர்பேஷ்வாஸீநோ தர்பாந் தாரயமாண: ஸோதகேந
பாணிநா ப்ரத்யங்முக: ஸாவித்ரீம் ஸஹஸ்ரக்ருத்வ: ஆவ
ர்தயேத் ॥ ௫ ॥

தர்ப்பங்களை ஆஸனமாகப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தும், கையிலும் தர்ப்பங்களைத் தரித்துக்கொண்டும் (நனைந்த கையில்), மேற்கு முகமாக (இது ஸாயங்கால விஷயம்) (காலையில் கிழக்கு முகமாக) இருந்து ஸாவித்ரீ என்கிற காயத்ரியை ஆயிரம் தடவை ஆவ்ருத்திசெய்து ஜபிக்கவும்.

ப்ராணாயாமஶோ வா ஶதக்ருத்வ: ॥ ௬ ॥

அல்லது, மூச்சை அடக்கிக்கொண்ட நிலைமையில் காயத்ரியை நூறுதடவை ஜபிக்கலாம். ஒரு தடவை மூச்சுஅடைத்து அதற்குள் எவ்வளவு காயத்ரியை ஜபிக்கமுடியுமோ அவ்வளவு ஜபித்து, மறுபடியும் அதேமாதிரி தொடர்ந்து நூறு தடவை முடிக்கவும். சிலர் காயத்ரியின் ஐந்து வாக்யங்களை மூச்சடக்கிச் சொல்லலாமென்றும் கூறுகிறார்கள். இதில் நாஸிகாஸ்பர்ச ரேசகாதிகள் கிடையாது.

உபயத: ப்ரணவாம் ஸஸப்தவ்யாஹ்ருதிகாம் மநஸா வா
தஶக்ருத்வ: ॥ ௭ ॥

காயத்ரியின் ஆரம்ப, முடிவுகளில் ப்ரணவத்துடனும், ஸப்த வ்யாஹ்ருதிகளுடனும் சேர்த்து மானஸிகமாகப் பத்துக் தடவை யாவது ஜபிக்கலாம். இதிலும் மூச்சடக்கும் நியமமுண்டு.

த்ரிபிஶ்ச ப்ராணாயாமை: ஶ்ராந்தோ ப்ரஹ்மஹ்ருதயேந ॥ ௮ ॥

அல்லது ப்ரம்ஹஹ்ருதயம் எனப்படுகிற (ஓம்-பூ: ஓம்புவ: ஓம்ஸுவ:) முதலிய இவைகளை மூன்று தடவை ப்ராணாயாமமாக உச்சரித்து, இதனால் க்லாந்தி ஏற்பட்டபின் காயத்ரியை ஸாதாரண மான ரீதியில் ஜபிக்கலாம்.

வாருணீப்யாம் ராத்ரிமுபதிஷ்டதே இமம் மே வருண தத்வாயாமி இதி த்வாப்யாம் ॥ ௯ ॥

ராத்ரியில், அதாவது ஸாயங்காலத்தில், இமம்மேவருண, தத் வாயாமி என்கிற இருண்டு வருண தேவதா மந்த்ரங்களால் உபஸ் தானம் செய்யவும், ஸூர்ய தேவதையை உத்தேசித்து.

ஏவமேவ ப்ராத: ப்ராங்முகஸ்திஷ்டந் ॥ ௧௦ ॥

கீழ்ச் சொல்லியபடி யாவற்றையும் காலையிலும்செய்யவும். காலையில் கிழக்கு முகமாயும் நின்றுகொண்டும் ஜபம் செய்யவும்.

மைத்ரீப்யாமஹருபதிஷ்டதே மித்ரஸ்ய சர்ஷணீத்ருத:, மித்ரோ ஜநாந்யாதயதி இதி த்வாப்யாம் ॥ ௧௧ ॥

காலையில் "மித்ரஸ்ய", "மித்ரோஜநாந்" என்ற மித்ரதேவதா ஸம்பந்தமுள்ள இரண்டு மந்த்ரங்களால் ஸூர்யனை உபஸ்தானம் செய்யவும்.

ஸபூர்வாம் ஸந்த்யாம் உதித ஆதித்யே ஸமாபயேத் ॥ ௧௨ ॥

உதயத்திற்கு முன்னதாகவே பூர்வ ஸந்த்யையை உபக்ரமித்து ஸூர்யன் உதித்தவுடன் முடிக்கவும்.

அநஸ்தமித உபக்ரம்ய ஸந்த்யாமஸ்தமிதே ஸமாபயேத் ॥ ௧௩ ॥

ஸாயங்காலத்தில் ஸூர்யன் அஸ்தமயம் அடையும் முன்பா கவே ஸந்த்யையை ஆரம்பித்து ஸூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு முடிக்கவும்.

ஸந்த்யயோஶ்ச ஸம்பாதநாதஹோராத்ரயோஶ்ச ஸந்ததி: ॥ ௧௪ ॥

ஸந்த்யோபாஸனம் செய்கிறவனுக்கு இரு ஸந்த்யாவந்தனங் களும் ஸம்பந்நங்களானால் (நன்றாகச் செய்யப்பட்டால்) அஹோராத் ரத்தில் ஆயுஸ்ஸின் பூர்த்தி ஏற்படும்.

சுவி வா து வூஜாவ தீமீதள ஶ்லோகௌ ஹவதஃ—

சுநாமதாம் தூ யெ வூவ-ா உநதீதாம் தூ வஶ்சிமா ।
ஸஂயாம் நொவாஸதெ விவூாஃ கயம் தெ ஹ்ராஹணாஃ ஸ்மூதாஃ॥
ஸாயம் வூாதஸ்ஸ்ஷா ஸஂயாம் யெ விவூா நொ உவாஸதெ ।
காமம் தாநு யாமிஃகொ ராஜா ஶூத்ரகமஸு யொஜயெதிதி ॥ கஅ ॥

ஸந்த்யோபாஸந விஷயமாக ப்ராஜாபதி சொல்லிய இரண்டு ச்லோகங்கள் இருக்கின்றன. அவையாவன:— பூர்வஸந்த்யை அதாவது காலே ஸந்த்யை வருவதற்கு முன்பும், ஸாயம் ஸந்த்யை தாண்டுவதற்கு முன்பும் எந்த விப்ரர்கள் ஸந்த்யையை உபாஸநம் செய்யவில்லையோ அவர்கள் எங்ஙனம் ப்ராம்ஹணராவர்? ஆகையால் எவர்கள் ஸாயம் ப்ராதக்காலங்களில் விதிப்படி ஸந்த்யையை உபாஸிக்கவில்லையோ அவர்களைத் தார்மிகராஜா ஹீநகர்மங்களில் ஏவவேண்டும்.

தத்ர ஸாயமதிக்ரமே ராத்ர்யுவவாஸஃ வூாதரதிக்ரமெ ஹஉறுவவாஸஃ ॥ கசு ॥

ஸந்த்யோபாஸனம் ஸ்வகாலத்தில் செய்யப்படாமல் தாண்டிவிட்டால் ஸாயம் ஸந்த்யைக்கு ராத்ரியில் உபவாஸம். பகல் ஸந்த்யையைத் தாண்டினால் பகலில் உபவாஸம்.

ஸ்தாநாஸநஃபலமவாப்நோதி ॥ கஎ ॥

மேற்கண்டவாறு உபவாஸ ப்ராயஸ்சித்தம் செய்தால் ஸ்தான ஆஸன பலனை அடைகிறான். (அனுஷ்டான பலன்).

அயாப்யுதாஹரந்தி —

யஉுவஸ்த்ருதம் வாவம் வஃூாம் வாயத்க்ருதம் ஹவெத் ।
வாஹுஹ்யாம் மநஸா வாசா வாவா வாயத்க்ருதம் ஹவெத் ॥
ஸாயம் ஸஂயாமுவஸ்தாய தெந தஸ்மாத் வூமுவ்யதெ ॥

ஸ்த்ரீ ஸம்ஸர்க்க நிமித்தமாகச் (ஸ்வபார்யையிடம்) செய்த பாபமும், கால், கை, மனஸ், வாக்கு இவைகளால் செய்யப்பட்ட பாபங்களும் எவையோ, ஸாயம்ஸந்த்யையை அநுஷ்டித்தால், அதனால் அந்தப் பாபங்களிலிருந்து விடுபடுகிறான் என்று சிஷ்டர்கள் கூறுகிறார்கள்.

ராத்ர்யா வாவி ஸஂயதெ ॥ ககூ ॥

இப்படி ஸாயம் ஸந்த்யையைச் செய்கிறவன் ராத்ரி தேவதையுடனும் சேர்ந்து க்ஷேமமடைகிறான்.

𑌨𑍈𑌨𑌂 𑌵𑌰𑍁𑌣𑍋 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 ॥ ௨௦ ॥

இம்மாதிரி ஸாயம் ஸந்த்யோபாஸனம் செய்கிறவனை வருணன் ஆக்ரமிக்கமாட்டான். (ஜல பயமில்லை).

𑌏𑌵𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌕𑍃𑌤𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍
𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௧ ॥

இவ்வாறு ஸாயங்காலத்திற்போல் காலையிலும் ஸந்த்யோபாஸநம் செய்தால் ராத்ரியில் செய்த பாபத்திலிருந்து விடுபடுகிறான்.

𑌅𑌹𑍍𑌨𑌾 𑌪𑌾𑌪𑌿 𑌸𑌂𑌸𑍀𑌯𑌤𑍇 ॥ ௨௨ ॥

பகல் ஸந்த்யோபாஸ்தியால் பகல் தேவதையுடன் சேர்ந்து க்ஷேமமடைகிறான்.

𑌮𑌿𑌤𑍍𑌰𑌏𑌨𑌂 𑌗𑍋𑌪𑌾𑌯𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌏𑌨𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌲𑍋
𑌕𑌮𑍁𑌨𑍍𑌨𑌯𑌤𑍀𑌤𑌿 ॥ ௨௩ ॥

பகல் தேவதையான மித்ரன் (ஸூர்யன்) இவனைப்பாதுகாக்கிறான். ஆதித்யனென்கிற குணமுள்ள அவன் இவனை ஸ்வர்க்க லோகத்திற்கு உயர்த்துகிறான்.

𑌸 𑌏𑌵𑌮𑍇𑌵𑌾𑌹𑌰𑌹𑌰𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 𑌸𑌂𑌧𑌿𑌷𑍁 𑌤𑌿
𑌷𑍍𑌠𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍂𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰
𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌜𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌭𑌿𑌜𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 ॥ ௨௪ ॥

இந்தமாதிரி ஸாயம் ப்ராதஸ்ஸந்த்யைகளை அனுஷ்டிக்குமவன் ஒவ்வொரு நாளும் அஹோராத்ரங்களில் அவைகளைச் செய்து ப்ரம்ஹமென்கிற காயத்ரியால் பரிசுத்தனாகியும் ப்ரம்ஹமென்கிற ப்ரணவ ரூபியாகியும் அந்த ப்ராம்ஹணன் சாஸ்த்ராநுஸாரியாகி ப்ரம்ஹ லோகத்தை அடைகிறானென்று வேதங்களால் அறியப்படுகிறது.

𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥
𑌇𑌤𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஏழாவது கண்டம் பூர்ணம்.
நான்காவது அத்யாயம் முற்றிற்று.

अथ पञ्चमोऽध्यायः ॥

अथ अष्टमः खण्डः ॥

இரண்டாவது ப்ரச்னம்—ஐந்தாவது அத்யாயம்.
எட்டாவது கண்டம்.

अथ हस्तौ प्रक्षाल्य कमण्डलुं मृत्पिण्डं च संगृह्य तीर्थं गत्वा त्रिः पादौ प्रक्षालयते त्रिरात्मानम् ॥

இனி மாத்யாஹ்நிக ஸ்நானம் சொல்லப்படுகிறது. தீர்த்த தேசத்திற்குச் சென்று இரண்டு கைகளையும் அலம்பிக்கொண்டு கமண்டலு, மண் உருண்டையும் கொண்டுபோய் அவைகளால் கால்களையும், சரீரத்தையும் மூன்று தடவை அலம்பவும்.

अथ हैके ब्रुवते—

श्मशानमापो देवगृहं गोष्ठं यत्र च ब्राह्मणाः अप्रक्षाल्य पादौ तन्न प्रवेष्टव्यमिति ॥ ௨ ॥

சிலர் சொல்லுகிறார்கள்—ஶ்மஶானம், தீர்த்தஸ்தலம், தேவக்ருஹம், பசுமாட்டுக் கொட்டில், ப்ராம்ஹணர்கள் இருக்குமிடம் இவ்விடங்களுக்குப் பாத ப்ரக்ஷாளனம் செய்யாமல் போகக்கூடாது என்று.

अथाभिप्रपद्यते— हिरण्यशृङ्गं वरुणं प्रपद्ये तीर्थं मे देहि याचितः । यन्मया भुक्तमसाधूनां पापेभ्यश्च प्रतिग्रहः । यन्मे मनसा वाचा कर्मणा वा दुष्कृतं कृतम् । तन्न इन्द्रो वरुणो बृहस्पतिः सविता च पुनन्तु पुनः पुनरिति ॥ ௩ ॥

ஸூத்ரத்தில் சொல்லிய மந்த்ரங்களை உச்சரித்து, தீர்த்தத்தில் இறங்கவும்.

अथाञ्जलिनाप उपहन्ति सुमित्रा न आप इति ॥ ௪ ॥

ஜலத்தில் இறங்கிய பின் அஞ்ஜலியால் ஆற்று ஜலத்தை எடுக்கவும். ஸூத்ரத்தில் சொல்லிய மந்த்ரத்தால்.

तां दिशं निरुक्षति यस्यास्य दिशि द्वेष्यो भवति दुर्मित्रियाः ÷ द्विषः इति ॥ ௫ ॥

அந்த அஞ்ஜலி தீர்த்தத்தை, இவனுடைய சத்ரு எந்தத் திக்கில் இருக்கிறானோ அந்தத் திக்குப் பக்கமாக விடவும். ஸூத்ர மந்த்ரத்தைச் சொல்லி.

சுயாவ உவஸூஜு திஃ ஹூஷ்க்ஷிணாயஷகூாவதயதி
யஷவாம் கூரம் + ஹூதாஜிதி ॥ ௬ ॥

பிறகு ஹஸ்தங்களை அலம்பிக்கொண்டு நதீ தீர்த்தத்தை ப்ரதக்ஷிணமாகக் கலக்கிவிடவும். அசைத்துவிடவும் ஸூத்ர மந்த்ரத்தால்.

சுவஷ நிஜெஜூாநஜவு ॥ ௭ ॥

பிறகு தீர்த்தத்தில் மூழ்கி எழுந்திருக்கவும்.

நாவஷ ஸதஃ ஹூயஊணம் விஷுதெ ந வாஸஃவ ஜூ
நம் நொவஸ-நஜ ॥ ௮ ॥

ஜலத்தில் இருக்கும்பொழுது சுத்தி நிமித்தமான ஆசமனத்தைச் செய்யக்கூடாது. வேஷ்டியை கைகளால் தட்டிக் கசக்கக்கூடாது. மலமூத்ர சௌசங்களையும் ஜலமத்தியில் செய்யக்கூடாது.

யஷுவாஷாஸூஃ வதெநொவதிஷ்ெத நஷொஜ
யெஜவஷஜெத + ஷுஃ ஜதி ॥ ௯ ॥

ஜலம் ஓடாமல் அடைக்கப்பட்டுத் தேங்கியிருந்தால் ஸூத்ர மந்த்ரத்தால் உபஸ்தானம் செய்யவும்.

உதீயஜவஷுாவாஹஃ வநராவாஜெ ॥ ௧௦ ॥

தீர்த்தத்திலிருந்து கரையேறி ஆசமனம் செய்து, மறுபடி ஆசமனம் செய்து, பிறகு மந்த்ராசமனம் செய்யவும், கீழ்க்கண்ட மந்த்ரத்தால்.

ஹுவஃ வநஷ வுயிவீம் + ஸாஹெதி ॥ ௧௧ ॥

இது மந்த்ராசமனம்.

வவிதுர கூகூாஜூஜயதி । ஹுவொ ஹிஷ்ாயொ
ஹவ ஜதி திஸூஹிஃ ஹிரண்யவணா ஜதி, வதஸூஹிஃ
உவஊநஸவஜந ஜதெதநாநவாகெந ஊஜயிகூா
7 நஜஜஷியதாஜவஷெநநதீநு ஹூாணாயாஊநுயார
யிகூாதீய வாஸஃவீஜயிகூா ஹூக்ஷாஷிதாவவாதாநு
கிஷ்ா நிவாஸாம்ஷி வஷியாயாஜவ ஹுவஷு ஷஹெஷாவீ

𑌨𑍋 𑌦𑌰𑍍𑌭𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑌯𑌮𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌃 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌵 𑌆𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌶𑍋 𑌵𑌾 𑌶𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌶𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑍋 𑌵𑌾 𑌦𑌶𑌾𑌵𑌰𑌮𑍍 ॥ ௧௨ ॥

இரண்டு தர்ப்பங்களால் பவித்ரம் செய்து அதனல் சரீரத்தை ப்ரோக்ஷித்துக்கொள்ளவும். ஆபோஹிஷ்டா மூன்று மந்த்ரம், ஹிரண்யவர்ணா: என்கிற நான்கு ருக், பவமாந: ஸுவர்ஜந: என்ற அநுவாகம் இவைகளால் ப்ரோக்ஷித்துக்கொண்டு, ஜலமத்தியில் இருந்தபடி அகமர்ஷணமந்த்ரங்களால் மூன்று ப்ராணாயாமங்களைத் தரித்து ஜபித்து, கரையேறி ஈர வஸ்த்ரத்தைப் பிழிந்து, அலம்பி, உலர்த்திய கிழிசலில்லாத வேறு வஸ்த்ரங்களை உடுத்தி, ஆசமனம் செய்து, தர்ப்பத்தில் உட்கார்ந்து, தர்ப்பத்தைத் தரித்து, கிழக்கு முகமாயிருந்து, காயத்ரியை ஆயிரம் தடவை ஜபிக்கவும், அல்லது நூறு தடவை ஆவ்ருத்தி செய்யவும். அதற்கு அதிகமாகவோ, அல்லது பத்துத்தடவையாவது ஜபிக்கவும்.

𑌅𑌥𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 । 𑌉𑌦𑍍𑌵𑌯𑌂 𑌤𑌮𑌸𑌸𑍍𑌪𑌰𑌿, 𑌉𑌦𑍁 𑌤𑍍𑌯𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂, 𑌤𑌚𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌹𑌿𑌤𑌮𑍍, 𑌯 𑌉𑌦𑌗𑌾𑌦𑌿𑌤𑌿 ॥ ௧௩ ॥

பிறகு ஸூர்யனை உபஸ்தானம் செய்யவும், ஸூத்ரத்தில் குறிப்பிட்ட மந்த்ரங்களால்.

𑌅𑌥𑌾𑌪𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑌿—

𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌯 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌚𑍇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌅𑌹𑌰𑌹𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌾𑌤𑍍𑌪𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌿 ॥

ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்ரீ, இவைகள் ஐந்து ப்ரம்ஹயஜ்ஞங்கள். ப்ரதிதினமும் ப்ராம்ஹணனைப் பாபத்திலிருந்து விடுவித்துப் பரிசுத்தமாக்குகின்றன என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

𑌪𑍂𑌤𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑌥𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍍𑌤𑌰𑍍𑌪𑌯𑌤𑌿 ॥

மேற்கண்ட ப்ரணவாதி ஐந்து ப்ரம்ஹயஜ்ஞங்களால் பரிசுத்தனாகிய பிறகு தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்யவும்.

𑌇𑌤𑌿 𑌅𑌷𑍍𑌟𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

எட்டாவது கண்டம் முற்றிற்று.

𑌅𑌥 𑌨𑌵𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃 ॥

ஒன்பதாவது கண்டம்.

𑌅𑌥 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌸𑍍𑌸𑍋𑌮𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌽𑌦𑌿𑌤𑌿𑌰𑍍𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌪𑌾 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌿 𑌸𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌗𑍍𑌰𑌹𑌾𑌣𑌿 𑌸𑌾𑌹𑍋𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾𑌨𑌿 𑌤𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿॥ 𑌓𑌂 𑌵𑌸𑍂𑌂𑌶𑍍𑌚 𑌤𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 ॥ ௧ ॥

𑌪𑌿𑌤𑌰𑍋𑌽𑌰𑍍𑌯𑌮𑌾 𑌭𑌗𑌸𑍍𑌸𑌵𑌿𑌤𑌾 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌵𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑍀 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 + 𑌤𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 । 𑌓𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌤𑌰𑍍𑌪𑌯𑌾𑌮𑌿 ॥ ௨ ॥

